www.tamilarangam.net

# உயிர்நிழல்




Uyirnizhal

Published by Exil

VOL III - N°5 - ISSUE 15 SEPTEMBER - OCTOBER 2000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மறையாத மறுபாதி**
(புகலிடத்துப் பெண்கள் கவிதைத் தொகுப்பு)

முதற் பதிப்பு: பெப்ருவரி 1991



**தமிழிற் தரிப்புக்குறிகளின் பயன்பாடு**

**சி. சிவசேகரம்**
முதற் பதிப்பு: ஏப்ரல் 1994

## எக்ஸில் வெளியீடுகள்



**எனக்குள் பெய்யும் மழை**
மூன்றாம் உலகப் பெண்நிலைவாதம்:
இருபத்திரண்டு ஆசியக் கவிகள்
தொகுப்பும் மொழியாக்கமும்:
**யமுனா ராஜேந்திரன்**
முதற் பதிப்பு: மே 1999



**பனிவயல் உழவு**
(கவிதைத் தொகுப்பு)

**திருமாவளவன்**
முதற் பதிப்பு: டிசம்பர் 2000

**எமது அடுத்த வெளியீடாக!**

**பி. ரவிவர்மனின்**
**நெடுங்காலத்தின் பின்னொரு நாள்**
(சிறுகதைத் தொகுப்பு)

பிரதிகட்கு:
EXIL
27 Rue Jean Moulin,
92400 Courbevoie, FRANCE
e-mail: EXILFR@aol.com

---


உயிர்நிழல்

Uyirnizhal

Vol. III No. 5
SEPT - OCT 2000

15

எக்ஸிலிலும் பின்பு உயிர்நிழலிலும் தொடர்ந்து பங்காற்றிய (தொகுப்பாளராகவும் வடிவமைப்பாளராகவும்) ஓவியர் கிருஷ்ணராஜா அவர்களின் வடிவமைப்புகளில் சில நன்றியுடன் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

*தொகுப்பாசிரியர்கள்:*
லக்ஷ்மி
கலைச்செல்வன்

[illegible]ப்பு: வருட சந்தா - 120FF
(6 பிரதிகள், தபாற் செலவு உட்பட)

காசோலைகள் அனுப்பவேண்டிய
வங்கியும், இலக்கமும்:
CREDIT LYONNAIS
CODE BANQUE 30002
COMPTE 554/6788M/21
ASSOCIATION EXIL

வங்கி முகவரி:
49 Bd Clémenceau
92400 Courbevoie
FRANCE

தொடர்புகளுக்கு:
EXIL, 27 Rue Jean Moulin
92400 Courbevoie, France
e-mail: EXILFR@aol.com

N° d'enregistrement de l'association 13023204

வெளியீடு: எக்ஸில்

www.tamilarangam.net



ஓவியர் அ. மாற்கு, 1994


புத்திஜீவி
சி.புஸ்பராஜா ........ 04

ஓவியர் மாற்கு (1933-2000)
........ 05

மாற்கு என்னும் 'மனிதன்' பற்றி
அருந்ததி ரத்னராஜ் ........ 09

கோடு
சித்தார்த்த சே குவேரா ........ 12

உயர்ந்து
சோலைக்கிளி ........ 16

வரண்ட மனங்களும் வக்கற்ற இலக்கியச்சூழலும்
அசோக் ........ 17

வன்முறையும் இலக்கியமும்
(நாவலாசிரியை திலகவதியுடன் யமுனா ராஜேந்திரன் உரையாடல்)
........ 19

துர்க்காவின் இரண்டு கவிதைகள்
........ 28

நினைவுச்சின்னங்களின்மீது
ஒரு துளி குருதியா? அல்லது ஒரு துளி மலரா?
சேரன் ........ 29

சய இருபது
மாரிமுத்து யோகராஜன் ........ 32

நோய்காவிகளும் முழித்திருக்கும் ஆந்தைகளும்
சி.புஸ்பராஜா ........ 33

அழுத்தம்
மருதமைந்தன் ........ 36

27வது இலக்கியச்சந்திப்பு நிகழ்ச்சி நிரல்
........ 37

என் புத்தகம்
தமிழில் : அமரந்த்தா ........ 38

அவள் சொன்னாள்
தமிழில் : அமரந்த்தா ........ 39

ஒரு பீனிக்ஸ் பறவையின் புகல்வாழ் குறிப்புகள்
இளையவி சின்னவன் ........ 40

பிறந்தநாள் இன்று பிறந்தநாள்...?
தயாநிதி ........ 43

எஸ். பொ. வின் "இனி ஒரு விதி செய்வோம்"
அருந்ததி ரத்னராஜ் ........ 45

எஸ். பொ. வின் கருத்தியல் பிரமைகள்
யமுனா ராஜேந்திரன் ........ 49

தீக்குளிக்கும் மனங்கள்
குரு அரவிந்தன் ........ 51

அ. மார்க்ஸ் அவர்களுக்கு ஸ்பாட்டகஸ்தாசனிடமிருந்து....
........ 54

தமிழ் இனி 2000
........ 58

எதிர்வினை : 'உயிர்நிழலி'ல் ஓர் உயிரற்ற உருவம்
எஸ். வி. ராஜதுரை ........ 61




சுயபிரதிமை, 1953-1957



சுயபிரதிமை, 1960-1970



சுயபிரதிமை, 1976

ஓவியர் அ. மாற்குவின்
மூன்று சுயபிரதிமைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புத்தி ஜீவி



பொழுதுகளுடனும்
இலக்கில்லாப் போக்குடனும்
இது என்ன வாழ்க்கை?
தினமும் விஸ்கியும் கையுமாக
என் வாழ்வு தொலைகிறது.

முயன்று முயன்று
தோல்வியே விதியாகி
வெறுமையே விடையாகி
போலி ஆற்றில்
சுகமான குளியலாகி
பொய்யான கனவுகளுடன்
என் வாழ்வு தொலைகிறது.

முன்பெல்லாம் முதலாளி முகம் கண்டு
பயந்து நடுங்கி
பின்னாளில் வெளியார் முகம் கண்டு
பயந்து நடுங்கி
நண்பர்கள் முகமும் கேள்விக் குறியாகி
இதென்ன இல்லாள் முகமும்....
என் சந்ததியுமாக....
புரியாத புதிராகி
பதுங்கி ஒடுங்கி
மௌனமே சத்தியமாகி
ஐயோ!
என் வாழ்வு தொலைகிறது....?

**சி. புஸ்பராஜா**

முன் அட்டை ஓவியம்
(ஓவியர் அ. மாற்கு) : ஓவியர் J.M. சீலன்
பின் அட்டை ஓவியம்
(சகுந்தலை) : ஓவியர் அ. மாற்கு

இன்மை உரையாடலும் கட்டவிழ்ப்பும்
வெளிவாசல்
ஆன் பிராங்க்
உலக அரசியல்
ஆகிய பகுதிகள் அடுத்த இதழில் தொடரும்.

**இணையத்தில் உயிர்நிழல் :**
**http:/www.geocities.com/uyirnizhal**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓவியர் அ. மாற்கு
# (1933-2000)

இப்படி ஓர் மனிதன் எங்களோடு எங்கள் காலத்தில் வாழ்கிறானா என்று பழகியவர்களையும் பார்க்காதவர் களையுமகூட பிரமிக்க வைக்கிற மனிதன்.

மாற்கு.

அவர் ஓர் நவீன ஓவியர், மிகவும் சிறந்த ஓவியர் என்று சொல்வதெல்லாம் உண்மையாயினும் அது அவரை அடையாளப்படுத்துவதற்குப் போதுமான தல்ல.

அவர் வாழ்வும் கலையும் வரைந்து போட்ட ஓவியங்களுக்கும் செதுக்கிய சிற்பங்களுக்கும் அப்பாலேதான் அதிகமாகக் கிடைக்கிறது.

300 ஓவியங்கள் அதற்கும் மேற்பட்ட சிற்பங்கள் என்பன எல்லாம் வெறும் கணக்கெடுப்புக்களாகப் போய்விடுகின்றன.

வழிபாட்டு உருவங்களைத் தவிர வேறு எதையும் வாழ்வின் ஓர் அங்கமாகக் கொள்ளாத நம் சமூகத்தில்தான் இவரும் வாழ்ந்திருக்கிறார்.

ஓர் ஓவியப் பரம்பரையை உருவாக்கியது என்பது ஈழத்தில் வேறு எவராலும் சாத்தியப்படுத்த முடியாத பெரு விடயமாயினும் - ஓர் ஓவியப் பிரக்ஞையை, புதியதோர் ஓவியப் பாரம்பரியத்தை ஈழத்தமிழ ரிடையே உருவாக்கியவர் என்பது மிகவும் முக்கி யமான விடயம்.

ஓவியத்திற்கு சமூகத்தில் இருந்த மதிப்புக் குறித்து, "ஓவியத்தைப் பார்த்துப் பழக்கப்பட்ட பரிச்சயம் ஈழத்தமிழ் மக்களுக்கு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அத்தோடு ஓவியத்தை ஒரு கலை வடிவமாகத் தமிழ் மக்கள் அங்கீகரித்து இருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை. சில நூற்றாண்டுகளுக்கு முன் வரையப்பட்டு நல்லூர் சட்டநாதர் கோவிலின் வாயிலில் கவினுறவே காட்சி தந்த வனப்புமிகு ஓவியங்கள் பலவற்றின்மீது சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளையடிக்கப்பட்டு விட்டது. ஆலயத்திற்கு அழகையும் தனிச் சிறப்பையும் கொடுத்துக் கொண்டிருந்த கால வெள்ளத்தால் அழியாத ஓவியங்களுக்கே அந்த நிலை என்றால் எம்மவர் ஓவியக் கலையில் காட்டிய அக்கறையையும் அவர்தம் ரசனையும் எண்ணிப் பாருங்கள். இந்தநிலைதான் எங்கும் காணப்படுவதாக எனக்குப் படுகின்றது. இப்படியிருக்கும்போது இத் துறையில் சாதனைகள் புரிதலைப் பற்றிச் சிந்திக்க முடியுமா?" [1] இப்படிக் கவலைப்படுகிறார் மாற்கு.

அரசினதோ, சமூகப் பண்பாட்டு நிறுவனங்கள்

ஓவியர் அ. மாற்குவின் மறைவை ஒட்டி 14. 10. 2000 அன்று கனடாவிலும் 04. 11. 2000 இலண்டனிலும் நினைவுக் கூட்டங்கள் நடைபெற்றன. அப்போது அவரது ஓவியங்கள் பலவும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

எதனதுமோ ஆதரவின்றி, சுயமாக தன் ஆர்வம் மட்டுமே மிகப் பெரிய சொத்தாக, மிகப் பெரிய ஓவியக் கலாசாலையை தன் இல்லத்துக்குள்ளேயே அமைத்துக் கொண்டவர்.

அவரின் மாணவி அருந்ததி எழுதுகிறார் இப்படி, "மூடி தொலைந்த வர்ணக் குவளைகளும், எண் ணைக்குள் மயிர் நனையக் காத்திருக்கும் தூரிகை களுமாய் என்றும் எந்த நிமிஷமும் ஏதோ ஓர் ஓவியம் உருவாகிக் கொண்டிருக்கும் அறையாகவே மாற்கு மாஸ்டரின் ஓவியக்கூடம் காட்சி தரும். எந்த நிமிடமும் யாரோ ஒரு ஓவியனை மாற்கு மாஸ்டர் உருவாக்கிக் கொண்டுதான் இருப்பார். ஐந்து வயதில் இருந்து ஐம்பது வயதினர் வரை வர்ணங்களோடு விளையாட மாஸ்டரின் ஓவியக் கூடத்தை நாடி வருவர். அவர் ஓவியம் கற்றுத் தரும் இலாவகமே தனி. கோடுகளும் நிறங்களும் எம்மோடு உறவாட எமக்கு வழிகாட்டியவர் அவர்.

மனதை நெருடும் நிகழ்வோ, நினைவோ, உணர்வோ படமாய் உருவாக பயமின்றிக் கோடுகளையும் நிறங்களையும் பாவிக்கக் கற்றுத் தந்தவர். 'பயப்படாமல் கலரைப் போடும்' என்று தைரியமாகப் படம் வரையப் பண்ணியவர். நீண்ட தூர சைக்கிள் ஓட்டங்கள் களைப்பைத் தராது. மாஸ்டரின் ஓவியக் கூடத்திற்குள் நுழைந்து அந்த எண்ணையை நுகர்ந்ததும் தானாகவே ஏதோ படைக்க மனம் எழும் கைகள் உசார் பெறும். வயது வித்தியாசமின்றி ஒன்றாக இருந்து படம் வரையும்பொழுது ஏற்படும் சுகமே தனி.


ஒவ்வொரு நாளின் முடிவிலும் மாஸ்டரின் கூடத்திற்குள் நுழைந்து வெளியே வரும்போது அந்த நாளுக்கே ஒரு பெறுமதி வருவதுபோல." [2]

இவரின் இன்னோர் மாணவி வாசுகி இப்படிச் சொல்கிறார்: "விதம் விதமான சிப்பிகள், பழைய கலைப்பொருட்கள், விலங்குகளின் முள்கள், எலும்பு கள், நாணயங்கள், கற்கள், பூனைகள், நாய்கள் போன்ற மிருகங்கள், தாவரங்கள் என்று பலவகைப் பொருட்களால் வீடு ஒரு குட்டி நூதனசாலையாகவே நிரம்பி வழியும். இந்தப் பொருட்களின் அழகை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓவியர் அ. மாற்கு

லயத்தை ரசிப்பதில் அவற்றுள் உள்ள உருவத்தை அடையாளம் காண்பதில் எமது கற்கை ஆரம்பிக்கும்."[3]

தனது இல்லத்தை ஓர் ஓவியக் கலாசாலையாக்கியதுடன் வாழ்க்கையை, இயற்கையை புதிய தரிசனங்களுக்கு இட்டுச் செல்லும் வண்ணம் தனது மாணவர்களுடன் எப்போதும் வெளியில் பயணமாவார்.

"நித்தம் போகும் கடற்கரையில், நாம் அலட்சியமாக தாவிவிடும் நம் கண்களுக்கும், ஒவ்வொரு பொருட்களிலும் ஏதோ ஒரு கலையம்சத்தை உணர்த்துவார். ஒரு வெறும் கல், அதன் வடிவம், நிறம், அளவு, அனைத்திலும் ஒரு புதிய பொருளை இனம் காட்டுவார். மரங்கள், அதன் அடி, வேர், மொக்கு இப்படி இப்படி..... இயற்கையில் நாம் பார்க்காத நம்முன்னே விரிந்து கிடந்த கலைக்குகையை (அலிபாபாவின் பொற்குகையைப் போல) காட்டியவர். இன்று நான் வரையும் ஓவியமாயினும் செதுக்கும் சிற்பமாயினும் கலையம்சம் ததும்பும் எவ்வேலையாகவும் இருக் கட்டும், மாற்கு மாஸ்டரும் கூடவே இருந்து செய்யும் உணர்வு இருந்து கொண்டே இருக்கிறது. அவர் என்னுடன் இருந்துகொண்டே என்னையும் ரசித்துக் கொண்டிருப்பார்." என்று அவரின் வாரிசு ஓவியர்களில் ஒருவரான கிருஷ்ணராஜா சில வருடங்களுக்கு முன்னர் தனது நண்பர்களிடம் அவரைப்பற்றிச் சொல்லி இருக்கிறார்.

இவரின் இன்னுமொரு மாணவர் சீலன் கூறுகிறார்: "இப்படித்தான் ஒரு நாள் சைக்கிளில் இருவரும் போய்க் கொண்டிருந்தோம். ஒரு மரக்காலையைக் கடக்கையில்,

'நிற்பாட்டும் சைக்கிளை' என்றார்.

'சற்றுப் பின்னே வாரும்'

வந்தேன்.

'இதிலே நின்று பாரும், அந்த வேலி மூலையிலே சாத்தி வைத்திருக்கிற அந்த மொக்குக் குத்தியை' என்றார்.

பார்த்தேன்.

'ஒரு நீர்யானை மாதிரி கொஞ்சம் தெரிகிறதெல்லோ' என்றார்.

அன்றே அதை எடுத்து வந்து, அடுத்த நாள் முழுவதுமாக அவர் வீட்டில் வைத்து ஒரு அழகான நீர் யானையாக உருவாக்கினோம்" என்றார்.

அவரின் மாணவர்கள் யாரும் பாடசாலைச் சான்றிதழ்களுடன் பரீட்சை எழுதப் போவதில்லை. ஓவியத்தின் மீதான ஆர்வம் ஒன்றே போதும்.

சிறு குழந்தை வரைந்த கிறுக்கலாயினும் சரிதான், பெரிய ஓவியர் என நம்புவோர் வரைந்த சிறுபிள்ளைத்தனமான ஓவியமாயினும் சரிதான் மாற்கு மாஸ்டருக்கு எப்போதுமே முதலில் அருமையாகத்தான் இருக்கும். மிகவும் நன்றாக வந்திருக்கிறதே என்று தட்டிக் கொடுப்பார். பின்னர் இதை இப்படிப் பார்க்கலாமே, இதிலே கொஞ்சம் இந்தக் கலர் சேர்க்கலாமே, இந்தக் கோட்டை இப்படி இழுத்தால் இப்படி வருமே என்று அதன் பன்முகங்களைக் காட்டுவார். அவரிடம் சிறியவர், பெரியவர் என்ற எந்த வேறுபாடும் கிடையாது.

வாசுகி அவரைப்பற்றி இப்படி எழுதுகிறார்:

"அவரது பலவிதமான சேகரிப்புப் பொருட்கள் போன்றே அவரது மாணவர்களும் பலவிதமானவர்கள். சுண்ணக் கட்டியை கையில் பிடிக்கத் தெரிந்தவுடன் நானும் படம் கீறப் போகிறேன் என்று புறப்பட்ட அவரது பேத்தி முறையான குழந்தையில் தொடங்கி பலதரப்பட்ட வயதில் பெண்களும் ஆண்களும் - கவிஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், போராளிகள் என்று



மீட்டல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மண்ணின் அழைப்பு

அனைவருக்கும் வர்ணங்களுடனும் கோடுகளுடனும் மட்டுமன்றி இயற்கையுடனும் சக மனிதர்களுடனும் சிநேகிதமாக இருக்கக் கற்பித்தார்." [4]

அவருக்கும் மாணவர்களுக்குமிடையே இருந்த ஓவிய உறவை அவரின் மாணவரான கருணா கூறுகையில்,

"'இதைக்கீற எவ்வளவு நேரம் எடுத்தது?

'மூண்டு மணித்தியாலம்...'

'இதே வேலையை ஒரு கமரா எவ்வளவு நேரத்திலை செய்யுமெண்டு நினைக்கிறீர்?



பதுமை

'.............'

'ஒரு செக்கனுக்குள்ளை செய்யும்.... அதே வேலைக்கு நீர் ஏன் மூண்டு மணித்தியாலம் செலவழிக்கோணும்? வேற மாதிரி யோசிச்சுப் பாரும். இதே காட்சியை வேற என்ன மாதிரிப் பாக்கலாம் எண்டு யோசியும். வேற ஏதாவது விஷயத்துக்குள்ளாலை இதே காட்சியைச் சொல்லலாமா எண்டு பாரும்....'

புகைப்படம் போல எந்தவித கற்பனை வெளிப்பாடுகளுமின்றி வரையப்படும் ஓவியங்களைப் பார்த்து இப்படித்தான் மாற்கு மாஸ்டர் கூறுவார். யாழ்ப்பாணத்தில் நவீன ஓவியத்தை அறிமுகப்படுத்தியவர்களில் முக்கிய மானவர் மாற்கு. அறிமுகப்படுத்துவதில் மட்டுமன்றி அதை வளர்த்தெடுத்து அடுத்த தலைமுறையினரிடமும் கொண்டு செல்லவேண்டும் என்பதிலும் அவர் அதிக அக்கறை கொண்டிருந்தார்.

குருநகரில் இருந்த அவருடைய வீட்டின் முன் அறையே அவருடைய ஓவியக்கூடம். அது எப்போதும் ஓவியங்களாலும் சிற்பங்களாலும் நிரம்பி வழியும். எண்ணெய் வர்ணங்கள், பென்சில்கள், சுண்ணக் கட்டிகள், நீர் வர்ணங்கள், தூரிகைகள், எயர் பிரஷ் உபகரணங்கள் எனப் பலவகை ஊடகங்களுடன் 10, 15 மாணவர்கள் வரைந்து கொண்டிருப்பார்கள். 1988, 1989 காலப் பகுதியில் ஏறக்குறைய 30 மாணவர்கள் அவரிடம் பயின்று கொண்டிருந்தனர். பாடசாலை களில் சித்திர ஆசிரியர்களாக இருந்தோர், வேறு தொழில் செய்வோர், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் என இவர்கள் பல்வேறு வகையினர்.

இவர்களனைவரும் அவரிடம் இலவசமாகவே ஓவியம் பயின்றனர். யாழ்ப்பாணத்தில் ரியூஷன் கலாச்சாரம் கொடிகட்டிப் பறந்த ஒரு காலப் பகுதியில் அவர் இப்படிச் செய்தது, ஓவியத் துறையை அநேகரிடம் கொண்டு செல்லவேண்டும் என்பதில் அவருக்கிருந்த உண்மையான ஈடுபாட்டையே காட்டியது. இலவசமாக ஓவியம் கற்பிப்பது மட்டுமன்றி ஓவியம் வரைவதற்குத் தேவையான வர்ணங்கள் தூரிகைகளையும் பல சமயங்களில் அவரே வாங்கி வைத்தும் இருக்கிறார்." [5]

இவையெல்லாவற்றையும் பார்க்கும்போது அவருக்கு எல்லாத்தையுமே ரசிக்க முடிந்திருக்கிறது. இயற்கையோடு இயற்கையாக பிணைந்த மனிதனாக வாழ தனக்கோர் உலகத்தையும் சிருஷ்டித்திருக்கிறார். எதையும் ஆக்க மட்டுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிந்த ஓவியர் மாற்கு இறுதிக் காலங்களில் தான் சேகரித்த அனைத்துப் பொருட்களையும் அப்படியே விட்டு விட்டுப் புலம்பெயர நேர்கிறது பெரிய சோகம்.

யுத்த பூமியில்கூட அவர் வாழ்வைப் பாருங்கள். வாசுகி எழுதுகிறார்:

" போர்விமானங்கள் சூழப்பறக்க, குண்டு மழை பொழிய, அதிகமான நேரங்கள் குழிகளுக்குள்ளேயே கழிய, எஞ்சிய நேரத்தில் மாற்குவைப் பார்க்கப் போனால் வாழ்தலில் நம்பிக்கை ஊட்டும் படியாக, போரால் வாழ்க்கை சலித்துப் போகாதிருக்கும்படியாக, அவர் புதிதாக ஏதாவது வரைந்தோ செதுக்கியோ வைத்திருப்பார்.

ஒரு சிறு தடியோ, எலும்போ, தேய்ந்துபோன சைக்கிள் பெடல் கட்டையோ, பனங்கொட்டையோ, எதுவாகிலும் .... பல சமயங்களில் சிதறி விழும் ஷெல் துண்டுகள்கூட மாற்குவின் கண்களில் உருவங்களாகி தமது இயல்பை மாற்றி மாற்குவின் படைப்புகளாக மாறிவிடும்.

இந்த ஓயாத நீண்டகாலத் தேடலில் சேர்த்தவை அனைத்தையும் விட்டுவிட்டு இடம் பெயர்ந்த பொழுதும், உடலில் நரம்புகளை நோய் தாக்கி இருந்த வேளையிலும், கிளாலியில் பற்றைக் காடுகளுள் திரிந்து காட்டுத் தடிகளை வெட்டி தனது நினைவிலிருந்த நண்பர்களுக்காக எல்லாம் ஊன்றுகோல்கள் செதுக்கி வைத்திருந்தார். எங்களுக்காகவும் (மாணவர்கள்) என்று அதிலிருந்தது." [6]

எல்லாவற்றின்மீதும் நம்பிக்கை வைத்திருந்த, இழப்பது எதுவும் இழப்பு இல்லை, கலை எங்கும் கொட்டிக் கிடக்கிறது என வாழ்ந்த ஓவியர் மாற்குவின் இறுதிக் காலங்கள் சோகமாகவே இருந்திருக்கின்றன. வாசுகியின் மேலும் சில வார்த்தைகள் இதனை உணர்த்தும்.

"மீண்டும் வன்னிக்கு இடப் பெயர்வும், நோயும் அதிகரித்து தலையில் சத்திர சிகிச்சையின் பின்பும் இயங்காத கால்களுடன் ஓயாது வரைந்து கொண்டிருந்த கைகளும் இயங்காமல் போன பின்னரும் மாற்கு ஓயவில்லை. நடக்க முடியாவிடினும் கைகளுக்கு சலியாத பயிற்சி கொடுத்ததன் மூலம் மீண்டும் கீறத் தொடங்கி உள்ளார். இப்பொழுது அவர் ஓவியங்களை ஆக்குவதற்காகத் தெரிந்தெடுத் துள்ள பின்னணி, பெட்டி அட்டைகள் (corrugated boards) ஆகும். இத்தனை வருட உழைப்பில் படைத்தவை எதுவும் அவரது கைகளில் இல்லாத காரணத்தால் அவை அனைத்தையும் மீண்டும் ஆக்கிவிடவேண்டும் என்ற வேகத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறார். இயங்க முடியாதிருந்த கைகளால் மீண்டும் அவர் வரையும் இந்த ஓவியங்களும் அவரது ரேகைகளும் பழையவற்றையே ஞாபகப்படுத்தினும் நம்பிக்கை ஊட்டுவன. முக்கியமாக இவற்றை அவர் துரிதமாகப் படைப்பதன் நோக்கம் இன்று தன்னிடம் பயின்று கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் இந்தப் பலதன்மை கொண்ட உத்திகளும் வடிவங்களும் கிடைக்க வேண்டும் என்பதே ஆகும்." [7]

கிளிநொச்சியில் இருந்தபோது அவர் அகதி வாழ்வை இப்படி எழுதுகிறார்:

"எனக்குத் தெரியும் ஊரிலே இவர்களது நாய்க்கும் ஒரு வீடு இருந்தது."

இதற்கப்பால் எதைத் தொடர்வது...?

பார்க்கவும் பேசவும் பழகவும் பயிலவும் கிடைத்தோர் அனைவரும் அதிர்ஷ்டசாலிகளே என்று எண்ணத் தோன்றுகிறது.

### அடிக்குறிப்புகள்:

1. நன்றி: மாற்குவுடனான நேர்முகம் ஒன்று (தேன்பொழுது. சிரித்திரன் வெளியீடு. 1985)
2. நன்றி: களம் சஞ்சிகை
3. நன்றி: காலம் - வாழும் தமிழ் சிறப்பிதழ், ஜுன் 2000
4. நன்றி: காலம் - வாழும் தமிழ் சிறப்பிதழ், ஜுன் 2000
5. மாற்குவின் சுவடுகள்: கலைத்துவ வாழ்வின் நினைவுகள் (14.10.2000, கனடா)
6. நன்றி: காலம் - வாழும் தமிழ் சிறப்பிதழ், ஜுன் 2000
7. நன்றி: காலம் - வாழும் தமிழ் சிறப்பிதழ், ஜுன் 2000

உயிர்நிழல்


மறைந்த எழுத்தாளர் சே. கதிர்காமநாதன் நினைவாக....

**கடல் கடந்து புலம்பெயராத இலங்கையில் வசிப்பவர்களுக்கான ஒரு லட்சம் ரூபா பரிசுச் சிறுகதைப் போட்டி**

சிறுகதைகள் அனுப்புவதற்கான முடிவு திகதி 30 ஒக்டோபர் 2000த்துடன் முடிவடைந்துவிட்டது என்பதை உங்களுக்கு அறியத் தருகிறோம்.

- மூவர் கொண்ட நடுவர் குழுவினால் சிறுகதைகள் பரிசீலிக்கப்பட்டு பரிசு தீர்மானிக்கப்படும்.
- தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று சிறுகதைகளுக்கும் முறையே ரூபாய் 35000, ரூபாய் 25000, ரூபாய் 15000 தலா வழங்கப்படும். மற்றும் ஆறு சிறுகதைகளுக்கு தலா ரூபாய் 5000 வழங்கப்படும்
- முடிவுகள் 31.01.2001க்கு முன்னர் அறிவிக்கப்படும்.
- பரிசுகள் இலங்கையில் வைத்து கையளிக்கப்படும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாற்கு என்னும் "மனிதன்" பற்றி....

அருந்ததி ரத்னராஜ்

மாற்கு மாஸ்டர் இறந்துவிட்டார் என்ற செய்தி என்னுள் என்னவிதமான பாதிப்பை ஏற்படுத்தியது என்பதுபற்றி என்னால் எழுத்துக்க ளால் கொண்டுவரமுடியாது. எம்மோடுகூட இருந்து ஓவியம் வரையும் உணர்வை என்றும் எமக்குத் தந்து விட்டுச் சென்றிருக்கும் ஓவியர் மாற்கு; இறந்து விட்டார் என்பது எம்மைப் பொறுத்தவரையில் உண்மையாகிவிடாது. அவரின் மாணவர்கள் இனிப் படைக்கப் போகும் ஒவ்வொரு ஓவியத்திலும் அவர் வாழ்வார்!

ஓவியம் என்பது கோயிற்சுவர் ஓவியங்கள் மாத்திரமே என எண்ணியிருந்த தமிழ் ஓவியத் துறைக்குப் புதுவழி காட்டியவர் ஓவியர் மாற்கு. நவீன ஓவியப்பாணியை அறிமுகப்படுத்தி அதனூ டாக உணர்வையும் நிகழ்காலத்தையும் தத்ரூபமாக வெளிக்கொணர அடியெடுத்துக் கொடுத்தவர். அவர் வாழ்ந்த காலம் அவரின் ஓவியங்களில் பதிவு களாய் வரலாற்று ஆவணங்களாய் தமிழ் ஓவிய வரலாற்றின் முதுகெலும்பாய் எம் முன் நிற்கின்றன.

1933ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் திகதி குரு நகரில் பிறந்த அ. மாற்கு இளம் வயதிலேயே ஓவியத் தில் ஈடுபாடு கொண்டவர். 1940களில் ஓவியர் பெனடிக்ற் என்பவரிடம் ஓவியம் கற்கத் தொடங்கி, 1953-1957 காலப் பகுதியில் கொழும்பில் இயங்கிய நுண்கலைக்கல்லூரியில் ஓவியம் கற்றவர். நுண் கலைக் கல்லூரி இவருக்கு ஓவியத்துறையில் பரந்து பட்ட அறிவைக் கொடுத்தது. டேவிட் பெயின்றரின் அபிமான மாணவனாக விளங்கியதுடன் இந்திய, மேற்கத்தைய ஓவியங்கள் பற்றிய பரிச்சயத்தை இக்காலகட்டத்திலேயே இவர் பெற்றுக் கொண்டார்.

ஆழமான மேற்கத்தைய பாணிகளின் கற்கை இவரின் ஆரம்பகால ஓவியங்களில் நிறையவே பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. ஓவியத் துறையில் தனித்துவமான மாணவனாய் விளங்கி னார் என்பதற்கு கொழும்பு நுண்கலைக்கல்லூரியில் இடம்பெற்ற கண்காட்சிகளில் இவர் பெற்றுக் கொண்ட பரிசுகள் சான்றுகளாய் விளங்குகின்றன.

1957இல் தனது ஓவியக் கற்கையை கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் முடித்துக் கொண்டவர். தனது முதல் ஆசிரியத்தொழிலை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆரம்பித்தார். இங்கு 1957-1977வரை ஆசிரியப்பணி ஆற்றி இருக்கிறார். இதே காலப்பகுதியில் ஓவியர் M. S. கந்தையாவின் பக்க பலத்துடன் "விடுமுறைக்கால ஓவியர் குழு"வினைத் தோற்றி ஏறத்தாழ பத்து ஆண்டுகள் நடத்தி இருக் கின்றார். தமிழர் ஓவியத்துறைக்குக் கொடுக்கும் ஆதரவுப் பற்றாக்குறை காரணமாக இக்குழு இடையிலேயே இயங்காமல் போயிற்று. பின்னர் 1976இல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கியதுடன் யாழ்ப்பாணத்தில் அவரின் ஓவியப்பணி விரிவடையத் தொடங்கியது. கூடவே "விடுமுறைகால ஓவியர் குழு"வும் மீண்டும் உதயமாகி இளைய சந்ததியி னரும் மாற்கு மாஸ்ரரின் வழிநடத்தலின்கீழ் உருவா கத் தொடங்கினர்.

**"எந்த ஒரு ஓவியனும் படைப்பாக்கத்தில்தான் தன்னை ஈடுபடுத்திக் கொள்வான். எனவே, அவனை உயர்த்தும் பொறுப்பு கலை ஆர்வலர்களுடையது. அது இன்னும் எம் மத்தியில் சரிவர இல்லை என்பதற்கு மாற்கு மாஸ்டரின் வாழ்வும் சாவும் சான்றாகின்றது."**



புகைப்படம்: அருந்ததி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுயபிரதிமை I



சுயபிரதிமை II

மாற்கு மாஸ்டரின் படைப்புக்கள் காலத்திற்குக் காலம் புதுமை பெறும். ஒரே ஊடகத்தையோ ஒரே பாணியையோ அவர் தொடர்ந்து பாவிப்பதில்லை. குறிப்பாக, அவர் பயன்படுத்தும் ஊடகங்கள்கூட அவர் வாழ்ந்த காலச்சூழலின் சமூகப் பொருளாதார நிலைமைகளை எமக்கு எடுத்துக் காட்டுவனவாக விளங்குகின்றன. 1950களிலும் 1960களிலும் அவர் படைத்த 'கன்வஸ்' ஓவியங்கள் கிறீஸ்தவ விடயங்களையும் அன்பையும் காதலையும் சித்தரிக்கும் ஓவியங்களாய் இருக்க, இறுதிக் காலத்தில் பழைய செய்தித்தாள்களின் மேல், நாட்டின் துயரத்தையும் அழிவையும் சித்தரித்தார் என்பது மேற்குறிப்பிட்ட கருத்தை உறுதி செய்கின்றது. மேலும் ஓவியர் மாற்கு எந்தச் சூழ்நிலையிலும் தனது படைப்பாக்கத்தை நிறுத்திக் கொள்ளவில்லை என்பதும் இங்கு வெளிப்படை.

மாற்கு மாஸ்டரின் ஓவியங்கள்பற்றியும் அவற்றின் வளர்ச்சிப் போக்குகள்பற்றியும் பல சந்தர்ப்பங்களில் பலரால் எழுதப்பட்டிருக்கின்றது. இக் கட்டுரையில் மாற்கு மாஸ்டரின் மூன்று சுய உருவப்பட (சுய பிரதிமை/ self portrait) ஓவியங்கள் பற்றிக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன். அவை வரையப்பட்ட ஆண்டுகள் சரியாகத் தெரியாத போதிலும் மாஸ்டரின் உருவ அமைப்பும் ஓவியப் பாணியும் அவ் ஓவியங்களைக் கால அடிப்படையில் வரிசைப்படுத்திப் பார்க்க உதவுகின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு தனித்துவமான உருவ அமைப்பு இருக்கும். அந்த உருவ அமைப்பையும் அவர்களுக்குள் இருக்கும் ஆளுமையையும் ஓவியத்தினூடாக வெளிக்கொணரல்தான் பிரதிமை ஓவியத்தின் வெற்றி. இங்கு நான் எடுத்துக் கொண்டிருக்கும் மாற்கு மாஸ்ரரின் சுயபிரதிமை ஓவியங்கள் மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று முற்றிலும் வித்தியாசப்பட்ட பாணியைக் கொண்டவை.

முதலாவது சுயபிரதிமை ஓவியம் -
(சுய பிரதிமை I):
மாஸ்டர் 1953-1957 காலப்பகுதியில் வரைந்திருக்கலாம். இந்த ஓவியத்தின் மங்கல் தன்மை இவர் இக்காலத்தில் கையாண்ட கழுவுதல் பாணியில் அமைந்தது. இவ்வோவியத்தில் ஓர் தீவிர மாணவனின் கூர்ந்த பார்வையைத் தரிசிக்க முடிகின்றது. அக்காலத்தில் அவருக்கிருந்த மேற்கத்தைய ஓவியங்களின் பரிச்சயம் மிகத் தெளிவாக இவ்வோவியத்தில் வெளிப்படுகின்றது. ஏதோ மேற்கத்தைய மறுமலர்ச்சிக் காலத்து கிறீஸ்தவ ஓவியத்தைப் பார்ப்பது போன்ற உணர்வு இவ்வோவியத்தில் வந்தாலும் அவருக்கேயுரிய பெரிய அகன்ற காதின் அமைப்பு எங்கள் ஐயங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு மாற்குவைச் சந்திக்க வைக்கின்றது.

அவரின் பயமற்ற தூரிகைக் கையாள்கையை அடுத்த ஓவியத்தில் காணமுடிகின்றது (சுயபிரதிமை II) பிரதிமை ஓவியம் என்றால் புகைப்படம்போல் இருக்கவேண்டும் என்ற வரையறையை மீறிய படைப்பாக்கம் இது. இந்த ஓவியத்தில் நாம் அவதானிக்கும் துணிந்த தூரிகைப் பதிவுகள் ஓவியம் மாற்குவிற்குக் கொடுத்து வரும் முதிர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. கூடவே காதுகள் மாற்குதான் என்று கூறிவிடுகின்றது.

மூன்றாவது ஓவியம், சுயபிரதிமை III, 1976இல் வரையப்பட்டது. இவ் ஓவியத்தில் நான் குறிப்பிட விரும்புவது அவர் பயன்படுத்தி இருக்கும் வர்ணம். கடும் செம்மஞ்சளும் நீலமும் ஓவியத்தில் மேலாதிக்கம் செலுத்துகின்றன. முந்திய இரு ஓவியங்களிலும் இவர் பாவித்த மாநிறம் தவிர்த்து, அபூர்வமாய் பாவித்திருக்கும் கடும் செம்மஞ்சள் தான் இந்த ஓவியத்தின் உயிர்ப்பாய் எனக்குத் தெரிகின்றது. முந்திய இரு ஓவியங்களில் இருந்தும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுயபிரதிமை III

வித்தியாசப்பட்ட முகத்தோற்றம் இது. சூரியனின் பிரகாசம், புன்சிரிப்பு என்பன நல்ல குடும்பத் தலைவனை நமக்கு இங்கு காட்டுகின்றது. காதுகள் மாற்குவின் முத்திரையாய் இங்கும் நாம் காணலாம்.

துரதிர்ஷ்டவசமாக மாற்கு இறுதிக்காலத்தில் வரைந்த சுயபிரதிமை ஓவியங்கள் எவையும் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் 1994ம் ஆண்டு நான் எடுத்துக்கொண்ட புகைப்படத்தில் அவர் தரும் தோற்றம் ஓர் முதிர்ந்த ஓவியனை தரிசிக்க வைக் கின்றது. தீர்க்கமான அந்தக் கண்களும் அவரின் முத்திரையாய் சற்றே அகன்று நிற்கும் காதுகளும் மாற்கு மாஸ்டரை அடையாளப்படுத்துகின்றன.

இவ்வாறாகப் பல்வேறுபட்ட ஓவியங்களில் தன் உருவப்படத்தைப் படைத்த இவ் ஓவியர் இன்று நிழற்படத்துள் நிரந்தரமாகி விட்டார். ஓவியத்துள் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட இந்த ஓவியனும் வழமைபோல் இறக்கும்வரை பெருமளவில் வெளியுலகிற்குக் கொண்டுவரப்படவில்லை என்றே கூறவேண்டும். எந்த ஒரு ஓவியனும் படைப்பாக் கத்தில்தான் தன்னை ஈடுபடுத்திக் கொள்வான். எனவே, அவனை உயர்த்தும் பொறுப்பு கலை ஆர்வலர்களுடையது. அது இன்னும் எம் மத்தியில் சரிவர இல்லை என்பதற்கு மாற்கு மாஸ்டரின் வாழ்வும் சாவும் சான்றாகின்றது. தன் கைகள் வழங்கும்வரை வரைந்துகொண்டேயிருந்த இவ் ஓவியனின் மறைவு ஈழத்தமிழ் ஓவியத்துறையின் முற்றுப் புள்ளியாக அமைந்துவிடாது, தொடர்ந்து பலரும் இத்துறையில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதையே நான் இச்சந்தர்ப்பத்தில் எழுதிக்கொள்ள விரும்புகிறேன்.

☯


**இரண்டாவது சூரிய உதயம், 1983**
**யமன், 1984**
**கானல் வரி, 1989**
**எலும்புக்கூடுகளின் ஊர்வலம், 1990**
**எரிந்து கொண்டிருக்கும் நேரம், 1993**

ஆகிய கவிதைத்தொகுதிகளை ஏற்கனவே தமிழ் இலக்கிய உலகுக்குத் தந்த உருத்திரமூர்த்தி சேரன், கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக ஈழத்தின் கவிஞர்களில் முக்கியமானவராகக் கருதப்படுபவர். இப்போது 'நீ இப்பொழுது இறங்கும் ஆறு' என, ஏற்கனவே வெளிவந்தவைகள் உட்பட 'ஒரு நூறு கவிதை'களாக தொகுக்கப்பட்டிருக்கின்றன. போர்க்கால சூழலின் கொடுமைகள் புலம்பெயர்ந்த வாழ்வின் அந்தர நிலை அகியவற்றிற்கிடையே இடைவிடாது பெருகும் மெல்லிய உணர்வு களை இவரது கவிதைகள் பதிவு செய்கின்றன. அவை அறமற்ற வன்முறை குறித்த கேள்விகளைத் தொடர்ந்து எழுப்புகின்றன.

**நீ இப்பொழுது இறங்கும் ஆறு**

**சேரன் கவிதைகள் ஒரு நூறு**





**வெளியீடு:**
காலச்சுவடு பதிப்பகம்
669 K.P. Road
Nagercoil 629 001
India.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாட்பட்ட உந்துதல்

சித்தார்த்த சே குவேரா

தாளமுடியாமலேதான் வரைபலகையையும் தூரிகையையும் எடுத்தான். உந்துதல் என்றால், ஒருநாள் இருநாள் உந்துதல் அல்ல. கிட்டத்தட்ட ஏழு வருட உந்துதல். இன்றைக்கு உச்சியிலும் மறுநாள் கிடப்பிலும் என்று காண்புகட்கேற்ப, நினைவில் நுரைத்து வடியும் உந்துதல். வீடு கூட்டும் தும்புக்கட்டைகூட, அந்தச் சீனத்து எழுத்தோவியனின் தூரிகையோட்டத்தை எழுப்புவதுண்டு. சொல்லப் போனால், ஒழுக்கிலே இலயித்து நகரும் நதியும்கூட.

செஞ்சீனத்துச் சைத்திரீகனின் கைவிரல்களின் துடிப்பையும் தூரிகையின் துரிதத்தையும் மட்டுமாவது, ஒரு தளக் கடதாசியிலே ஏற்றிவிட வேண்டிவிட விரும்பித்தான், இத்தனை நாட்பயிற்சியும் நீர்வண்ணமும் வரைபலகையும். அன்றைக்கு மாலை அவன் புகைப்படக்கருவியைக் கொண்டுபோயிருக்கவில்லை. ஆரம்பத்திலே, அதற்காக கவலைப்பட்டான். நான்ஜிங் நகர புழுதிவீதிகளிலும் யான்ஸி ஆற்றுக்கும்மேலாக புகைப்படக்கருவியை எடுத்துக் கொண்டு எப்போதும் போகின்றவன், அன்றைக்கு மழையை எண்ணிக் கொண்டு கொண்டுபோகவில்லை. பிரமாண்டமான பாலத்தின் மேலிருந்து அகண்ட மஞ்சளாற்றிலே, ஆற்றுமணல் அள்ளிக்கொண்டு போகும் சுமைக்கப்பல்களிலே மழைத்துளிகள் விழுகின்றதைப் பார்க்கும்போது, தனக்குள் ஏற்படும் 'நான்மட்டுமே இதைக் கண்டேன்' திருப்தியை நோக்கிப் போனவனுக்கு, 'பங்பூ' நகரத்து நாடோடிச் சீனத்து எழுத்தோவியனும் நனைந்துகொண்டு வந்து அருகிலே நிற்பான் என்று என்று தெரிவதற்கு நியாயம் இல்லைத்தான்.

ஆமையோட்டத்தில் மூங்கிற்குழல்களிலே நெளிபாம்பாய் ஊர்ந்த விரல்களின் நர்த்தனத்தைப் புகைப்படம் எடுத்திருந்தாலும்கூட, அந்த வரைதலின் நேர்த்தியினை கருவி அழகுப்புலனற்று சடமாகவே உள்வாங்கியிருக்கும் என்று பின்னர் தோன்றியது. கிட்டத்தட்ட கருவி ஒரு கட்டிட வரைஞனின் தொழிலையே செய்திருக்குமேயொழிய, கலைஞனினதினை அல்ல.... மூங்கிலிலே இவன் பெயரைப் பொறித்த ஓவியத்தை இவனால் கடைசி நேரத்திலே ஓவியனிடமிருந்து வாங்கிக் கொள்ளமுடியவில்லை. எல்லா ஓவியர்களையும் இவன் தான் கலைஞன் என்று எண்ணிக் கொண்ட வரையறைக்குள்ளே இட்டுக் கொள்ளமுடியாது என்று கற்றுக்கொண்டதும் அந்த யாங்ஸி ஆற்றுமழைக்குட்தான். ஓவியன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தனை 'யுவான்' வைத்தாற்றான் ஓவியத்தைத் தரமுடியும் என்று சொல்லி விட்டான். ஒரு மூன்றாம் உலகப் புலமைப்பரிசில் மாணவனுக்கு நிச்சயம் ஓவியத்தை மீறிய உடற்தேவைகள் உண்டு, ஒரு சீனத்துக் கிராம ஓவியனுக்குள்ளதுபோலவே....

ஓவியத்தை வாங்கமுடியவில்லை. அதே நேரத்திலே ஓவியனின் கட்டுப்படா விரலசைவும் தூரிகையும்கூட அவன் மனதிலே மழைக்கால இலையிலே தலையும் வாலும் குத்தி ஒட்டி குத்துக் கரணம் அடிக்கும் மயிர்க்கொட்டியின் அசைவு களிலும் கூட கண்ணிற்பட்டு அழுத்திக் கொண்டிருந்தது. நதியிலே புதைந்த பெருந்தேர்போல, சில கணங்கள் மின்னி முடிந்தும் வருடங்களுக்கும் நினைவிலிருந்து அசைவ தில்லை. இஃது ஒரு பொழுது - அஃதொரு பொழுது என்று நெஞ்சுக்குள்ளே. "இந்தா பார் இன்னும் இருக்கின்றேன் உன்னுள் நான்" என்று அங்குசத்தால் நிமிண்டிக் கொண்டே இருக்கின்றன.

நிமிண்டல், சுகத்தை மீறி சொறியாகிப் போகும் நிலை வந்தபோதுதான், தானே அதை ஒரு தாளில் தூரிகையால் இறக்கினால் என்ன என்று தோன்றியது. அவன் முறைப்படி ஓவியம் கற்றுக்கொண்டதில்லை. ஓவியம்தான் என்றில்லை, சிற்பமோ, அல்லது சங்கீதம் கூடவோதான். ஆனால், முறைப்படி கற்றுக்கொண்டுதான் பாட்டிலே பேர் பெறவேண்டும் என்றில்லையே. முறைப்படி கற்றுக்கொள்வது பாடுவதைச் சுலபமாக்குகின்றது. பழைய பாட்டுகளின் முகவரிகளை வரிசையாகச் சொல்லிக் கொடுக்கின்றது. ஆனால், புதியவழியையும் போய்ச்சேர்தலையும் பாட்டுக்காரன் தன் திறமையிலும் கற்றுக்கொள்ளும் ஆர்வத்திலுமே கண்டு கொள்ளலாமேயொழிய, குருவின் சங்கீதஞானத்தை நம்பி அல்ல என்ற எண்ணமே அவனை ஓர் ஓவியனாக - குறைந்த பட்சம் - ஓர் ஓவியனின் கையின் தாளம் தப்பாத சங்கீதத்தை பொறிவைத்துச் சிக்குப்படுத்தும் ஓர் ஓவியனாக முயலச்சொன்னது, செய்தது.

ஐந்து ஆறு வயதுகளிலே நிறையவே கிறுக்கியிருக்கின்றான். அதன் பின்னர், பொறியியற் கல்வியின் ஆரம்பத்திலே அவன் பொறிமுறைவரைதலிலே, இயந்திர உதிரிப்பாகங்களின் பன்முகத்தோற்றத்தைக் கோடுகளாக உள்வாங்கியிருக்கின்றான். ஆனால், அவை வெறும் இயந்திர உதிரிப்பாகங்கள் திருகாணி, சுரை, புரி, பொருத்தி, மூட்டுக்கள், கப்பி.... சடங்கள் கோடுகளில் வட்டங்களாகவும் நீள்வளையங்களாலும் நீள அகல உயர்வு அளவுகள் தோற்றுவிக்கப்படக்கூடியவை. ஆனால், உயிர்களின் இயல்புகள் அப்படியல்ல. ஓர் இறந்த சிறு சிலந்தியை எறும்புகள் காவிக்கொண்டு செல்லும் காட்சிகூட, கோடுகளின் மூன்று நீட்டலலகுப் பரிமாணத்துள் அடங்காதது... கோடுகளினாலே

**வரையத் தொடங்கும்போதுதான், வரைந்தவர்களின் விரல்களைப் போற்றத் தோன்றுகின்றது. கண்ணுக்குள்ளே அப்படியே நிற்கின்றன சீனத்தோவியனின் விரல்களும் முற்றிய மூங்கில் குழல்களும் தூரிகையும் மழையும் வர்ணங்களும்....**

**போராடுதல் என்பதும் போய்ச்சேர்தல் என்பதின் ஒரு படிதான். விழிகளுக்கும் மூளைக்கலங்களுக்குமிடையிலே போய் வருகின்றதை, விரல்களுக்கிழுத்து படிய வைத்தலும் ஒரு போராட்டம்தான்.**

அளந்தளந்து வரைந்து முடித்த பின்னும், காட்சி தோன்றாமல், கோடுகள் மட்டும் நீட்டித் துருத்திக்கொண்டு... ஒழுங்கான பல்வரிசையிலோடு லாவும் ஒரு தெற்றுப்பல்லுப்போல...

எத்தனை எத்தனிப்புகள்... ஓவியனின் விரல்களையல்ல, அதன் நகங்களைக் கூட அவனுக்குக் கோடுகளால் நகர்த்த முடியவில்லை.... 'கும்பிட்டுக் கொண்டிருக்கும் காய்ந்த நட்புக்கை'யை வரைந்த ஓவியனைப் பற்றி வியந்து கொண்டான். அந்த வியத்தல்கூட முதற் தடவையல்ல. வரையத் தொடங்கும்போதுதான், வரைந்த வர்களின் விரல்களைப் போற்றத்தோன்றுகின்றது. கண்ணுக்குள்ளே அப்படியே நிற்கின்றன சீனத்தோவியனின் விரல்களும் முற்றிய மூங்கில் குழல்களும் தூரிகையும் மழையும் வர்ணங்களும் இவையனைத்தும் ஒட்டி ஒன்றாயாடு அசைவுத்தொகுதியும்.... அவன் விரல்கள் மட்டும் எதையும் எடுத்து ஒன்றாயிழுத்து விழுத்த மறுத்தன. நினைவில் ஒவ்வொன்றாய்ப் பாகம் பிரித்து முன்னைப் பதிவை சிற்றமையங்களின் தொகுதியாக்கி, ஒவ்வொரு அமையத்தையும் விரற் கட்டை களிலே வரைகோலை வைத்து, அளவைக் குட்படு கோடுகளாய் மாற்ற முயன்றான் . கோடுகளை குறுக்கும் நெடுக்கும் வரை கோலைச் சாய்த்துச் சாய்த்து காகிதத்தைத் தொட்டும் தொடாமலும் உருவெழுப்ப முயற்சித்தான். அங்குமிங்கும் நினைவிலே துருத்தித் தள்ளியவற்றுக்கு முதன்மை செய்து காகிதத்திலே இடம்பெயர்த்தான். காற்றிலோடும் செறிவற்ற மேகக்கூட்டம் போல திட்டுத்திட்டாக பரவிப் பெருகின காகிதத்திலே கோடுகள்.... ஆனாலும், அதிருப்தி மட்டும் அழிப்பானைப் போட்டுத் தேய்த்துத் தேய்த்து அழுக்குருளைத் தூளாய்த் தள்ளியது. இவன் தன் விரல்களினை நொந்து கொண்டான். கோணல் மாணக் கோடுகள் உருக்களைப் பெற்றுத் தள்ளின் முறிந்தகோட்டு மழை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இன்றைக்குத்**
**தெளிவற்றுக்**
**கிறுக்கும் அவனிலே**
**உள்ளூரத்**
**திடநம்பிக்கை கொண்ட**
**ஒருத்தியின், அந்த**
**ஒரே ஒருத்தியின்**
**நீர்க்கறை பொருந்திய**
**விழிகளின் துடிப்பையும்**
**பயத்தையும்**
**பாதுகாப்பையும்**
**என்றைக்காவது**
**நான், எனது**
**தனித்தன்மையான**
**நீட்டலளவுக்கப்பாற்பட்ட**
**கோடுகளிலே**
**வடித்தெடுப்பேனாயின்,**
**அதுவே-**
**அவளுக்குப்பின்னர்-**
**என் ஓவியத்திற்குக்**
**கிடைக்கும் ஒப்பற்ற**
**பரிசென்று**
**கருதுவேன்.**
**அதுவரை எந்நிலையும்**
**என் கோடுகளுள்**
**எனக்கும் புரியாமலே**
**தொலைந்தவனாக**
**மட்டுமே**
**நானிருப்பேன்.**

வளைகோட்டுப்பாலம்,
சுருள்கோட்டு ஓவியன்சிகை,
நெளிகோட்டு மண்ணிற
ஆற்றுநுரை....
கோட்டுப்பொறிமுறை வரைதல்...
குளிர்மழையைக் காணவில்லை.
புகையிரதம்போக அதிரும்
பாலம் செத்துக் கிடந்தது.
ஓவியனின் விழிகளிலே தெரிந்த
அவனின் விரல்களின் தாளமோ,
பனிக்கு விறைத்துச் செத்த
தெருநாயின் கண்களுக்கு
ஒப்பான நிலைகுத்திய
நிர்ச்சீவனத் தன்மையிலே
இரட்டை முற்றுத்தரிப்புப்
புள்ளிகளுக்குப் பின்னால்
தென்படாது தொலைந்து
கிடந்தது.

ஆனாலும், தன் விரல்களை அந்த சீனத்தோவிய விரல்களை வடிக்க அவன் போராடிக் கொண்டிருந்தான். போராடுதல் என்பதும் போய்ச்சேர்தல் என்பதின் ஒரு படிதான். விழிகளுக்கும் மூளைக்கலங்க ளுக்குமிடையிலே போய் வருகின்றதை, விரல்க ளுக்கிழுத்து படிய வைத்தலும் ஒரு போராட்டம்தான்.


ஆயாசத்திலே கதிரையிலே சாய்ந்தான் விழிகள் குத்திட்டு வரைபலகையிலே நின்றன. கோட்டோவியனின் முன்னால், இவன்போய் உருச்சுருங்கி நின்று, 'வா' என்று கேட்டான் மழையிடமும் மல்லுக்கட்டி, பாலத்தை விழிகளினாலே எறியத்துள்ளே எடுத்துக் கொள்ள முயன்றான்.... அங்கிருந்தே, யாங்ஸி ஆற்றுக்கு முன்னால், வெளியிலே மழையை யும் படகையும் பாலத்தையும் விரல்களையும் சட்டத்துள் அடக்கி, ஊஞ்சலாட்டிப் பார்த்துக் கொண்டான்....

மனைவி வந்து குரலை விட்டு வெளியே இழுத்துப்போட்டாள் நினைவோடு உடலைச் சுற்றி உறுஞ்சிய அவள் நாவுடன் சட்டத்துக் குள்ளிருந்து அதன் முன்னால் வந்து மூன்றாம் மனிதனான் அவன்.

"உங்கள் நண்பர் கலாநிதிப் பட்ட ஆய்வு நேற்று முடித்து விட்டாராம். வரும் வாரம் ஊருக்குப் போகிறாராம். அதற்குமுன்னால், தொலைபேசியிலே பேசும்படி கூறினார்" - சொன்னாள்.

சிறுவயதுமுதலே ஒன்றாக பொறியியல் இளமாணிப்பட்டம் வரை படித்தவன். இவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இப்போதே தொலைபேசியிலே அழைத்துப் பாராட்டவேண்டும் என்று போனான். பாராட்டி முடிந்து வந்தபோது, மனைவி இவனது ஓவியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். முகத்திலே துயரும் தொனிப்புக்காட்டியது. அவள் வருத்தம் இவனுக்குப் புரியும். ஏழு வருடங்கள் இங்கும் அங்கும் இதே கலாநிதிப் பட்டத் துக்காகத் தாவிக்கொண்டிருக்கின்றான். அதைப் பொறுப்பாக கவனம் வைத்துக் கற்றிருந்தால், ஒரு மூன்று வருடங்களின் முன்னரே இதே கலாநிதிப்பட்டம் ஒட்டிக் கொண்டிருக்கும். இவனுக்கும் அந்தக்கவலை இல்லாமல் இல்லை. ஆனால், அவனைத் தவிர எவனை நோவது?

அவள் சத்தத்தைக் குறைத்து தனக்குத்தானே கேட்பாள் போலக் கேட்டாள் "பயனற்ற விரல்களைக் கிறுக்கிக் கொண்டி ருப்பதிலும் விட, பொருளாதார அழுத்தத்தை நினைவிலே கொண்டு, கற்கையினை முடிப்பது மேலல்லவா? விரல்களை உங்கள் விரல்கள் இயங்கிக் கொண்டி ருக்கும் காலம் வரைக்கும் கிறுக்க முயற்சிக்கலாம் என்பது கூடவா இத்துணை பெரிய மனித னுக்குத் தெரியாது போய்விடும்? வெறும் கோடுகள் மட்டும் எமது எதிர்காலத்திற்குப் பாதை காட்டும் என்றா எண்ணுகின்றீர்கள்? "ஆனாலும், இவனிடம்தான் கேட்டாள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எல்லா ஓவியர்களையும் இவன்தான் கலைஞன் என்று எண்ணிக் கொண்ட வரையறைக்குள்ளே இட்டுக் கொள்ளமுடியாது என்று கற்றுக்கொண்டதும் அந்த யாங்ஸி ஆற்றுமழைக்குட்தான்.

இவன் கத்தினான். "விரல்களைக் கோடுகளாகக் காட்ட எத்தனையோ உடற்கூற்றாளிகள் பிறக்கலாம். ஆனால், நான் முயற்சிப்பது விரல்களின் நடையைப் பதிவு செய்து கொள்ள... காகிதத்திலே விரல்களின் நாட்டியத்தை...." விரற் சந்துகளிற்கு இடைப்பட்டுத் தூங்கிய வரைகோலை வெளியிலே தூக்கி காற்றை குறுக்கும் நெடுக்கும் வெட்டி வெட்டிக் கதை கூறினான். தன் இயலாமையிலும் குற்றத்திலும் பேசுகின்றவன் இப்படித்தான் பேசமுடியும்.

அவள் வருத்தப்பட்டுக் கொண்டாள்."விரல்கள், விரல்கள்,விரல்கள்!! இப்படியா ஒருவன் விரல்களிலே நாட் பொழுது, நிலை எல்லாம் மறந்து நினைவழுந்திக் கிடக்கமுடியும்?"

இப்போது அவள் கண்களிலே இவன் எதிர்காலத்தைப் பற்றிய பயம் வந்து விழுந்துகிடந்தது.

தன்னால் எப்போதாவது இயலக்கூடியதை மற்றவர்கள் புரிந்து கொள்ள முயற்சி செய்கின்றார்கள் இல்லையே என்று எண்ணுகின்றவனும்கூட இதே தன் செய்கையை நியாயப்படுத்தும் இயல்பினைக் காட்டக்கூடும் என்று பதிலுக்கு இவன் அவளை அமைதி கொள்ளச் செய்ய பேசினான். ஆனாலும், குழந்தை வளர்ப்பைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிய ரூஸோவின் குழந்தைகள் வளர்ந்த நிலைதான் இவனுள்ளே நினைவிலே படர்ந்தது.

அவள் மேலும் ஏதோ பேச முயன்றாள். இவன் அது தன் காதிலே விழக்கூடாது என்பதா கவோ தன்னை நியாயப்படுத்தவோ, நேரத்தைச் செலவு பண்ணி ஓவிய விரல்களைப் பதிவு செய்ய முயன்ற காகிதத்தை தன் விரல்களுக்கு அகப்பட்ட துரித இலயத்திலே கிழித்து வரவேற் பறை முழுக்கத் தூவி விட்டு, படுக்கையறைக் குள்ளே அவளின் பொறுமையின்மையினையும் கலையுணர்வின்மையையும் வைது கொண்டு நுழைந்து கதவை அடித்துச் சாத்தினான். அவள் அழுவது அவன் நிதானத்துக்கு வந்து தூங்கிப் போகும் வரைக்கும் கேட்டது.



எவ்வளவு நேரம் தூங்கினோம் என்றறியாது, எழுந்து அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து பார்த்தபோது, அவள் இந்தப் புறத்துக்கு முதுகைக் காட்டியபடி, சீனத்தோவியனின் கிறுக்கல் விரல்களைக் கிறுக்க முயன்றது கிழித்துப் போட்டதைச் சேர்த்தெடுத்து ஒவ்வொரு துண்டாக இருக்கவேண்டிய இடத்திலே பொருத்தி ஒட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. சத்தம் போடாமல் பூனை அடியடி வைத்துப் பின்னால், போய் நின்று பார்க்கும் போது, மழைத்துளிகள் ஈரம் கொண்டு காகிதத்தை நனைத்திருந்தது தெரிந்தது. படகுகளின் அழுக்குப்படுதாக் களிலும்கூட ஆற்றுநீர்த்தெறிப்பு . சீனத்து ஓவியனின் விழிகளிலே நீர்ச் சலனம் தெரியத் தெரிய, விரல்க ளினால் மூங்கிலிலே நீர்த்தூரிகையால் விடாது ஓவியனின் உளப்பாரம் இறக்கத் துழாவிக் கொண்டி ருந்தான்.

இனி ஒருகாலத்திலே எத் துணை பாராட்டும் புகழ்த் துணுக்கும், ஓர் விரலின் சலனத் தைப் பதிவு செய்த ஓவியன் என்று கிடைக்கக்கூடும் என்றானாலும்கூட, அதை விட தன் இயலாமையோடும் சுய அங்கீகரிப்பின்மையோடும் போராடி, இன்றைக்குத் தெளிவற்றுக் கிறுக்கும் அவனிலே உள்ளூரத் திடநம்பிக்கை கொண்ட ஒருத்தியின், அந்த ஒரே ஒருத்தி யின் நீர்க்கறை பொருந்திய விழிகளின் துடிப்பையும் பயத் தையும் பாதுகாப்பையும் என்றைக்காவது நான், எனது தனித்தன்மையான நீட்டலளவுக்கப்பாற்பட்ட கோடுகளிலே வடித்தெடுப்பே னாயின், அதுவே - அவளுக்குப் பின்னர்- என் ஓவியத்திற்குக் கிடைக்கும் ஒப்பற்ற பரிசென்று கருதுவேன்.

அதுவரை எந்நிலையும் என் கோடுகளுள் எனக்கும் புரியாமலே தொலைந்தவனாக மட்டுமே நானிருப்பேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நான் அள்ளி எறிந்த மொழி நீ
அதுவும் தமிழ்
செத்தாலும் சோர்ந்தாலும் மென்மேலும் துளிர்ப்பது
மழை தேவையில்லை கோடையிலும் பூப்பது
எட்டி
ஒரு றப்பர் கட்டியாய் துள்ளி
என் தோளில் கூத்தாட முனைந்து
தோற்றாய்
நான் உயரம்
பிணம் புதைத்துப் புதைத்து
திடலான பூமியிலே நிற்கின்றவன்

அதனால் -
உன் போன்ற கட்டைகள் றப்பர் கட்டிகள்
புருஷனது தோள் ஏறி பழம் ஆய்ந்து கனி ருசித்து
கொட்டை பிதுக்கி எறிவதற்கு

தடைதான் - அங்கே ஒரு அவிந்த தலை
தலைமுடியில் சாம்பல் பூத்ததைப் போல் வெள்ளை

பூமி திடலாகி ஆகாயம் தட்டியதில்
இரவில்
என் பழைய சித்திர ஆசிரியை
செத்துப் போனாலும் என் கலையை விடமாட்டேன்
என்று சொல்லி வந்து
நசிகின்ற அந்த நீலத் தகரத்தில்
பூக் கீறும்போது
கை தடுக்கி மை உதிர்ந்தும் சித்திரத்தை விட்டாவோ
அம்மா

☯



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வரண்ட மனங்களும் வக்கற்ற இலக்கியச்சூழலும்:

அசோக்

இப்பொழுதெல்லாம் ஒரு சில சிறு சஞ்சிகைகளைப் படிக்கும்போது சோர்வும் கவலையும் கொள்ளும் மனிதனாகி விடுகின்றேன். முன்னரெல்லாம் புகலிட சிற்றிலக்கிய ஏடுகள் ஒவ்வொன்றும் கலை/இலக்கிய அரசியல் சித்தாந்த தளங்களில் முரண்கள் கொண்டிருப்பினும் நாணயம் மிக்க விவாத, கருத்தியல் மோதல்களை/ உரையாடல்களை தங்களின் கருத்தியல் கூறுகளிலிருந்து மேற்கொண்டன. உதாரணமாக மனிதம், பனிமலர், சுவடுகள், தேடல், தூண்டில், சிந்தனை, தேனீ, புதுமை.... எனப் பலவற்றை நாம் மதிப்பிடமுடியும். இப்பொழுது சில சிறுசஞ்சிகைகள் தலைகீழ் மாற்றங்களாகி அக்காலம் வெறும் நனவிடை தோய்தலாகிவிட்டது. எனினும் சிறு நம்பிக்கை தரக்கூடியனவாக புகலிடத்தில் சக்தி, உயிர்நிழல் என்று ஏதோ உள்ளது. சந்தோசம் கொள்வோம்.

இன்று சிறுசஞ்சிகைகளின் பலவீனமான காரணி அதன் நம்பகத்தன்மை தொடர்பான பிரச்சினையே தான். பலபேர் முன்னிலையில், பலபேர் கவனம் கொள்ளும் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், வாசிப்புகள் அனைத்தும் சிறுசஞ்சிகையின் பண முதலீட்டாளரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளில் மையம் கொண்டு புரட்டலும் பொய்மையும் புனைந்த எழுத்துக்களாக இச் சிறுசஞ்சிகைகளின் பக்கங்களை நிரப்பி விடுகின்றன. இவ்வாறு பல பேர் நேரில் கவனம் கொள்ளும் நிகழ்ச்சிநிரல்களே இக்கதிக்கு உள்ளாகும்போது ஏனைய விடயங்களைப்பற்றிக் கூறவேண்டியது அவசியம் இல்லை.

உதாரணமாக, ஜேர்மனியில் நடந்த 26வது ஐரோப்பிய இலக்கியச் சந்திப்பில் இடம்பெற்ற வாசிப்புகள்/ கலந்துரையாடல்கள் தொடர்பாய் எக்ஸில் சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையைக் குறிப்பிடமுடியும். சுமார் 75பேர் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் பேசப்பட்ட கருத்துகள் அனைத்தும் வீடியோ ஒளிப்பதிவும் ஒலிப்பதிவும் செய்யப்பட்டுள்ளன. இக் கருத்தரங்குக் கலந்துரையாடல்களில் பங்குகொண்ட அழகலிங்கம், சரவணன், வாசுதேவன் ஆகியோரின் கருத்துக்களும் விமர்சனங்களும் உயிர்நிழல் 13வது இதழில் வெளிவந்துள்ளதைக் காணமுடியும். ஆனால் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, ஏனையவர்களின் கருத்துக்கள்/விமர்சனங்கள் மற்றும் கலந்துகொண்ட ஏனையவர்களையும் 'முட்டாளாக்கும்' வண்ணம் உண்மைக்குப் புறம்பான திட்டமிட்ட திரிப்புக்களோடு எக்ஸில் சஞ்சிகையில் (ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்டதிலிருந்து எழுதுவதாகத் திரிப்பு வேறு) எழுதப்பட்ட இக்கட்டுரை இலக்கியச்சந்திப்பின்மீது அப்பட்டமான சேறடிப்பைச் செய்கின்றது.

இவ் புகலிட இலக்கியச் சந்திப்பின் உயிர்ப்பும் அதன் வாழ்வும் இங்கு புகலிடத்தில் மனிதநேயங்களை, மனித உரிமைகளை காலின் கீழ் இட்டு துவம்சம் செய்யும் குழுக்களுக்கும் தனிநபர்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாகவும் 'டென்சனாகவும்' இருக்க வைத்துவிடுகின்றது. எனவே இதன் உயிர் பறித்தல் என்பது அவர்களின் 'பாஷையில்' அவசியப்பட்ட ஒன்றே. இவ் இலக்கிய சந்திப்பானது இதுவரை காலமும் தன் உயிர் இருத்தலுக்காக பல்வேறு தடைகளையும் இழப்புக்களையும் சந்தித்துள்ளது. இப்பொழுது உள்ளிருந்து குழிபறிக்கும் இந்த 'புரூட்டஸ்' மனோபாவம் எக்ஸில் சஞ்சிகையின் பக்கங்கள் ஒவ்வொன்றிலும் விரவி நிற்பதை நாம் அவதானிக்க முடியும். இச் சஞ்சிகையின் கடந்த

**"இந்த அடையாள இருத்தலுக்கு, எம் வர்க்க மனோபாவங்களுக்கு தடையாக இருப்பவர்களாக கருதுகின்றவர்களைப் பற்றி புகலிடத்திலிருந்து உண்மைக்குப் புறம்பான தகவல்களை, வதந்திகளை ஒரு சிற்றிலக்கிய ஏட்டின் மூலம் பரப்ப முயலும் இக் கலாச்சாரம் சஞ்சிகையின் மீதான நம்பகத்தன்மையை இழக்கச் செய்துவிடும். சிறுசஞ்சிகையின் ஆதாரமே நம்பகத் தன்மைதான்."**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதழ்களைப் புரட்டுவோமானால் அதன் கபடத்தன மான காய் நகர்த்தலையும் இதன் பின்னான அரசியல் நோக்கையும் நாம் இனம் காணமுடியும். இவ் இதழ்கள் ஒவ்வொன்றும் புகலிட அராஜகங்களை எதிர்க்கின்ற மனித உரிமைகளைப் பேசுகின்ற ஆதிக்க மனோபாவத்தை கேள்விக்குள்ளாக்கும் சக்திகள் அனைத்தையும் தனிநபர் தாக்குதலினாலும் வசைபாடலினாலும் 'அர்ச்சனை' செய்வதை என்னவென்பது? அத்தோடு ஒடுக்கப்பட்ட மக்களின்பால் அக்கறை கொள்ளப்படவேண்டிய மார்க்சியம் பற்றி எவ்வித புரிதலும் விமர்சன ஆய்வுகளுமற்ற கட்டுங்கடங்கா ஆவேசத் தாக்குதல், காழ்ப்புணர்ச்சி (போங்கள்! வெள்ளைமாளிகைகூட பிச்சை வாங்கவேண்டும்) தலித்தியம், பெண்ணியம், பின்நவீனத்துவம் இன்னபிற பன்முக சிந்தனைகளின்மீதான தேடலும் அறிதலும் அற்ற போக்கு. அனைத்திற்கும் தமிழக 'so called' புத்திஜீவிகளைத் துணைக்கழைக்கும் அவலம். வெறும் கோஷங்களோடு சஞ்சிகை பண முதலீட்டாளர்களைத் திருப்திப் படுத்தி 'ஒளிவட்டங்களை' பொருத்தும் துதி வணக்கங்களோடு தம் பக்கங்களை நிரப்பிக்கொள்ளும் அவலம். தமிழ்த் தேசியவாதத்திற்கு இன்றைய பாசிச போக்குகளையும் இனவாத கருத்தியலையும் தூக்கிப் பிடிக்கும் தமிழக குறுந் தமிழ்தேசியவாத சக்திகளை 'விடிவெள்ளிகளாக' கண்டுபிடித்த எக்ஸில் சஞ்சிகை கருத்தியல் சித்தாந்தம்(?) தமிழ்த்தேசியவாத பாசிச போக்கை கேள்விக்குள்ளாக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின்பால் அக்கறை கொள்ளும் எம் அனைவரையும் எதிரிகளாக, துரோகிகளாக முத்திரை குத்த முனைவது ஆச்சரியப்படத்தக்க விடயமல்லவே. இவ்வாறான போக்கு புகலிட சூழலில் இன்னொரு தமிழ் 'மாபியா மீடியா'வாக (MAFIA MEDIA) எக்ஸில் சஞ்சிகை உருவாகும் அபாயத்தை எமக்கு காட்டுகின்றது. (ஏற்கனவே தமிழ் மாபியா மீடியாக்கள் பல உள்ளன.) இதைத்தான் எக்ஸில் சஞ்சிகையின் பின்னான அரசியலும் அதன் பணமுதலீட்டாளர்களும் விரும்புகின்றனரோ தெரியவில்லை. ஆனால் இவ்வாறான கயமைத்தனங்களில் இருந்து விலகி சிற்றிலக்கிய மாற்றுச் சஞ்சிகையாக எக்ஸில் சஞ்சிகை உருக்கொள்ளவேண்டும் என்பதே என் விருப்பம் ஆகின்றது. புகலிடத்தில் வெளிவரும் சிறுசஞ்சிகைகள் அருகி மரணம் கொள்ளும் இக்காலங்களில் எக்ஸில் சஞ்சிகையின் இருப்பும் அதன் ஆரோக்கியப்பட்ட வளர்ச்சியும் அவசியமான தொன்றாகும். இதற்கு நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக! (யாரைப் பிரார்த்திப்பது என்பதுதான் பிரச்சனை!)

இப் புகலிடம் எங்களுக்கு பல்வேறு மன உழைச்சல்களை, வெறுமைகளை, தோல்விகளை, அந்நியமாதல்களை, நெருக்கடிகளைத் தருகின்ற போதிலும் மறுபுறம் சிந்தனைகளைத் தேடல்களை வளர்க்கவும் கேள்விக்குள்ளாக்கவும் மாற்றுச் சிந்தனைகளை உருவாக்கிக்கொள்ளவுமென ஒரு அறிதல் வெளியை எம் முன்னே எனவே புதிய திசைவழிகளோடு அதனைப் பயன்கொள்ள முனைவோம். அதை விடுத்து தமிழகத்து சில நபர்களைத் திருப்தி செய்வதற்காகவும் அங்கு எம் வியாபார விருத்தியை மூடி மறைப்பதற்கும் துணையாக 'இலக்கிய அடையாள முகம்' ஒன்றைப் பொருத்திக்கொள்ளவுமான திருகுதாள இலக்கியப் புரட்டல்வேலைகளில் ஈடுபடும் கைங்கரியத்தைத் தவிர்த்துக் கொள்ளல் ஆரோக்கியமானதென நினைக்கிறேன். இந்த அடையாள இருத்தலுக்கு, எம் வர்க்க மனோபாவங்களுக்கு தடையாக இருப்பவர்களாக கருதுகின்றவர்களைப்பற்றி புகலிடத்திலிருந்து உண்மைக்குப் புறம்பான தகவல்களை , வதந்திகளை ஒரு சிற்றிலக்கிய ஏட்டின்மூலம் பரப்ப முயலும் இக் கலாச்சாரம் சஞ்சிகையின்மீதான நம்பகத் தன்மையை இழக்கச் செய்துவிடும். சிறு சஞ்சிகையின் ஆதாரமே நம்பகத் தன்மைதான்.

எனவே தம் வர்க்க மனோபாவத்திற்கு எதிரான மனிதன் தொடர்பான நல்லெண்ணங்கள் அர்த்தங்களை எங்களின் மதிநுட்பச் செயற்பாடு மூலம் வதந்திகளாக பொயமைகளாக வாசக திரள்மீது பக்குவமாக மூளைச்சலவை செய்யும் எங்களின் நோய்க்கூறை குணப்படுத்திக் கொள்ள முனைதல் அவசியம்.

அத்தோடு சமீப காலங்களில் எக்ஸில் சஞ்சிகையில் எழுத பலர் மறுத்து பின்வாங்குதலையும் இந்த சஞ்சிகை வெளிவருவதில் உள்ள நீண்டகால இடைவெளிகளையும் எக்ஸில் இதழ்களின் உள்ளடக்கத்தின் தன்மைகளையும் ஒரு சுய ஆய்வுக்கு உட்படுத்துவதன்மூலம் எக்ஸில் சஞ்சிகைக் குழுவினர் (?) ஏனைய நண்பர்கள் இப்பின்னடைவுக்கான காரணங்களை புரிந்து கொள்ள முயலுதல் நலம் என நினைக்கிறேன். எத்தனை நாட்களுக்கு சாருநிவேதிதாவின் கோணல் பக்கங்களையும் தனிநபர் புகழ்பாடும் வாசகர் கடிதங்களைப் பல்வேறு பெயர்களில் எழுதிக்கொண்டும் விஷக் கொடுக்குகளால் எங்களைக் குதறிக் கொண்டும் ஒப்பேற்றிக் கொண்டு இருக்கமுடியுமா?

☯

குறிப்பு: 26வது இலக்கியச் சந்திப்புத் தொடர்பாக எக்ஸில் சஞ்சிகையில் வெளிவந்த விஷம் கக்கும் கட்டுரை தொடர்பாக 26வது இலக்கியச் சந்திப்பை நடாத்திய ஏற்பாட்டுக் குழுவினர் தங்களின் கருத்துக்களைத் தெரிவிப்பது அவசியம் எனக் கருதுகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வன்முறையும் இலக்கியமும்:

## நாவலாசிரியை திலகவதியுடன் யமுனா ராஜேந்திரன் உரையாடல்:

**"எனக்கு வந்து சேகுவாராவை ரொம்ப நல்லாப்பிடிக்குது. நான் நினைக்கிறேன், யாராவது ஒருவர் மனிதராக வாழுவதென்றால் சேகுவாராவைப் போலத்தான் வாழவேணும்."**



**யமுனா:**

நீங்கள் எப்ப எழுதத் தொடங்கினீங்க? பிற்கால வாழ்க்கை இந்த மாதிரி அமையவேணும் என்று பலபேர் பலவேறு விதமா choose பண்ணிக்கு வாங்கள். சிறுகதை மற்றும் பலவேறு துறைகள் சார்ந்து நீங்கள் ஈடுபடுவதற்கான அந்தப் பின்னணி, அந்த உந்துதல், அதெல்லாம் எங்கிருந்து வந்தது?

**திலகவதி:**

பள்ளிக்கூடத்திலை படிச்சுக்கிட்டிருக்கும்போது எழுதணும் அப்படீன்னு தோணிச்சு. ஒரு ஒன்பது பத்து வயசாக இருந்தபோது எழுத ஆரம்பிச்சேன். அப்போ வந்து கவிதைகள்தான் எழுதுவேன். எனக்கு முதலிலை பாரதியார் கவிதைகள்தான் அறிமுகமாய் இருந்தது. எங்க அம்மா குடுத்து படிக்கச் சொன்னாங்க. அப்புறம் எங்க வீட்டுக்குப் பக்கத்திலை வந்து ஒரு ஸ்கூல் டீச்சர் ஒருத்தர் இருந்தாங்க ரங்கசாமி என்று சொல்லிட்டு. அவர் பூங்குன்றன் என்ற புனைபெயரிலை கவிதை எழுதுவாரு. அவருடைய வீட்டுக்கு 'குயில்' பத்திரிகை வரும். அவர் பாரதிதாசனோடை பழக்கமுடையவராக இருந்தார். அவர் கவிதைகள் எல்லாம் எழுதிட்டு எனக்குப் படிச்சுக் காண்பிப்பாரு. அதனாலை இந்தக் கவிதை எழுதுறது வந்து ஒரு வாழ்க்கைமுறை மாதிரியும் கவிதைகள் ரொம்ப ஈர்ப்புடையதாகவும் என் மனசிலைபட்டது. சும்மா இருக்கும்போதுகூட மனசுக்குள்ளார எப்பவும், படிச்ச கவிதைகள் ஓடிக்கிட்டே இருக்கும். அந்த வரிகளும் வார்த்தைகளும்... மனசுக்குள்ளார ஓடிக்கிட்டே இருக்கும். அப்படியாகத்தான் முதலிலை எழுதணும்கிறது தோணிச்சு..

என்னுடைய தொழில் வந்து எனக்கு காவல் துறையாக அமைந்தது. இது ஒண்ணும் நான் தேர்ந்தெடுத்த விடயம் கிடையாது. இது நான் திட்டமிட்டு அடைஞ்ச ஒரு விஷயமும் கிடையாது. ஒண்ணு தற்செயலாக நேர்ந்தது. மற்றது வந்து பொருளாதார நிர்ப்பந்தத்தினால தொடர்ந்தது. மற்றப்படி இந்த எழுத்து அப்படீங்கிறதுதான் வந்து எனக்கு இயல்பான, எனக்கு ரொம்ப இனிமையான, எனக்கு ரொம்ப நிறைவைத் தருகிற, எனக்கு ரொம்ப மகிழ்வைத் தருகிற விஷயமாக இருந்தது. இந்த எழுத்து வந்து நான் முதல்ல சொன்னதுபோல எனக்கு பாரதிதான். அதற்குப் பிறகு யாரையும் ஒரு ஆதர்சமாக இதுவரைக்கும் கொள்ளலை.

அடிப்படையிலை ஒரு வாசகி அப்படிங்கிற முறையில வந்து, நிறையப் பேருடைய படைப்புகளை நான் வந்து படிச்சிருக்கேன். பெரும்பாலான ரஷ்ய எழுத்தாளர்கள் டால்ஸ்டாய், தாஸ்தாவ்ஸ்கி, மாக்ஸிம் கோர்க்கி, மைக்கல் ஷோலவ் அதுமாதிரி ஏராளமான எழுத்தாளர்களைப் படிச்சிருக்கேன். அதுமாதிரி இந்தப் பக்கத்தில மாப்பசான், பல்ஸாக், டிக்கன்ஸ், மாதிரியான எழுத்துக்கள். இதுமாதிரியாக ஆரம்ப கட்டத்தில நிறையப் பேருடைய எழுத்துக்களைப் படிச்சிருக்கிறேன். அந்தக் காலகட்டத்தில எனக்கு இந்த எழுத்துக்கள் ரொம்ப கலகம் செய்கிறது மாதிரி இருந்தது. தமிழிலயும் அதுமாதிரியே பார்த்தீங்கன்னாக்க அன்னைக்கு வெகுஜனப் பத்திரிகையில பிரபலமாக அறியப்பட்டிருந்த நா. பார்த்தசாரதி, அகிலன், மு.வ. இப்படியான ஆட்களுடைய படைப்புகளோடதான் வந்து முதல்ல எனக்கு பரிச்சயமாயிடுச்சு. அப்புறம் வந்து மெதுவாக கு. அழகிரிசாமி, புதுமைப்பித்தன், ஜானகிராமன், ஜெயகாந்தன் இப்படி நிறையப் பேரை படிச்சேன்.

ஆனால் எனக்கு வந்து யாரையுமே ஒரு ஆதர்சமாகவோ ஒரு இன்ஸ்பிரேஷன் ஆகவோ நான் கொள்ளவே இல்லை. ஏன்னா எல்லாருடைய படைப்புகள் குறித்தும் எனக்கு ஒரு விமர்சனப் பார்வைதான் இருந்தது. அதாவது வந்து இந்த இடத்திலை இப்பிடிப் பண்ணி இருந்திருக்கலாம் இப்பிடிச் சொல்லி இருந்திருக்கலாம் என்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**“இந்த எழுத்து அப்படீங்கிறதுதான் வந்து எனக்கு இயல்பான, எனக்கு ரொம்ப இனிமையான, எனக்கு ரொம்ப நிறைவைத் தருகிற, எனக்கு ரொம்ப மகிழ்வைத் தருகிற விஷயமாக இருந்தது.”**

விமர்சனங்கள் எனக்கு எல்லாப் பேரிலையுமே இருந்ததினால யாரையுமே ஒரு முடிவான ஆதர்சமாக, ஒரு உச்சமாக நான் யாரையுமே கொள் ளேல்லை.

எனக்கு சில விஷயங்கள் கேள்விப்படும் போதோ அல்லது அனுபவிக்கும்போதோ அதைப் பதிவு செய்து வைச்சுக் கொள்ளணும்னு தோணும். So அதன் காரணமாக நான் வந்து அந்த விஷயங்களை எழுதுவேன், பேசுவேன். அவ்வளவுதானே தவிர மத்தப்படி அவங்களைப் போல நாங்க செய்யணும் இவங்களைப் போல இருக்கணும் என்று அப்படீங்கறது மாதிரியான அடையாளம் வச்சுக்கலை.

**யமுனா:**

உங்கடை ஆரம்பகால வாழ்க்கை பற்றித்தான் நீங்க சொல்றீங்க. அதாவது, பள்ளிக்கூடம், கல்லூரி வாழ்க்கை இது சம்பந்தமாக. இரண்டு விஷயங்கள் நடந்திருக்கு.

ஒன்று, உங்களுடைய இலக்கியம் சம்பந்தமான ஆர்வங்கள், எழுத்துக்கள் சம்பந்தமான உங்களுடைய இயல்பான ஈடுபாடு இதெல்லாம் வந்தது. மற்றது தொழில்ரீதியிலான காவல்துறை சார்ந்த விஷயங்கள் தற்செயல், மற்றது, பொருளாதார காரணங்களச் சொல்றீங்க.

நான் உங்களுடைய ஒரு நேர்முகம் வாசிச்சனான். நீங்க வந்து தர்மபுரியிலை ஒரு மத்தியதர வர்க்க குடும்பத்திலிருந்து வந்தீங்கன்னு சொல்றீங்க. தர்மபுரி வந்து உண்மையிலேயே அதிஅரசியல் விழிப்பு கொண்ட பெயர் பெற்ற மாவட்டம். தர்மபுரி, வட ஆற்காடு எல்லாம் ரொம்ப வரட்சியான மாவட்டங்கள்கூட. ரொம்ப வறுமையில் வாடக் கூடிய மக்கள். ரொம்பப் பின்தங்கிய இடம். நிலவளமில்லாத ஒரு பகுதி. நீர் வளம் குறைந்த இடம்.

சோவியத் ரஷ்ய இலக்கியங்கள் மற்றும் நீங்க சொன்ன டிக்கன்ஸ் மற்றும் இவங்க எழுத்துக்களைப் பார்த்தீங்கன்னா பெரும்பாலும் இங்குள்ள ஐரோப்பாவின் அடித்தட்டு தொழிலாளி மக்களுடைய பிரச்சனைகளைத்தான் அதுகள் சொல்லுது. அப்ப இதெல்லாம் உங்களுக்கு ஆதர்சமாகி இருந்திருக்கு.

இத்தகைய இயல்பான உங்கள் ஈடுபாட்டில் இருந்து இந்த தற்செயலான பொருளாதாரக் காரணங்களுக்காகத்தான் இந்த வேலையைத் தேர்ந்து கொள்ளவேண்டியிருந்துது என்று சொல்றீங்க. இந்த அடிப்படை முரண் எப்படி நேர்ந்தது என்று சொல்வீங்களா?அதாவது பொருளாதார நிர்ப்பந்தம், தற்செயல் இவைகளைக் கொஞ்சம் விரிவாகச் சொல்வீங்களா?

**திலகவதி:**

அதாவது பொருளாதார நிர்ப்பந்தம் என்று நான் சொல்கிறது பொதுவாக, பெண்ணின் வாழ்க்கை என்பது யாரையாவது சார்ந்திருக்கிற வாழ்க்கையாகத்தான் இருக்கிறது. பொருளாதாரத்துக்காக ஒரு பெண் வெளியிலை போகிறதென்கிறது உயர்தர, மத்தியதர குடும்பங்களில் அனுமதிக்கப்பட்ட விடயம் இல்லை. அங்க வந்து அப்பா சம்பாதிப்பாரு. அம்மா வந்து சமைச்சுப் போடுவாங்க. வீட்டிலை பெண்கள் உதவியாக வீட்டுக் காரியங்களைப் பார்த்துக்குவாங்க திருமணமாகிறது வரைக்கும்.

திருமணமான உடன அவங்களுக்கு கணவன் வந்து பொருளாதார வசதியை செய்து கொடுக்கிறான். இதுதான் ஒரு அங்கீகரிக்கப்பட்ட மரபாக இருந்தது. ஆனா எனக்கு அடிப்படையிலேயே நான் அந்த மாதிரி பொருளாதார ரீதியில யாரையாவது சார்ந்து இருக்கக்கூடாது என்கிற எண்ணம் எனக்குள்ளே இருந்தது. இதுக்கிடையில என்ன பண்ணினேன்னா- நான் ஒரு தவறான முடிவெடுத்தேன்- ரொம்ப சிறிய வயசிலேயே என்னுடைய திருமணத்தைப்பற்றி நான் ஒரு முடிவெடுத்தேன். அந்தத் திருமணம் முறிஞ்சு போச்சு. அது முறிஞ்சு போனத்துக்குப் பிறகு என்னுடைய பெற்றோரை அணுகிறத்துக்கு எனக்கு முகமில்லாமப் போச்சு. அது ஒரு நெருக்கடியான சூழ்நிலையாய் எனக்கு ஆச்சு. அப்பா கடுமையான மனவருத்தத்திலை இருந்தாரு. என்னுடைய தேர்வைப்பற்றியும் முறிவைப்பற்றியும் ரொம்பக் கசந்து போய் இருந்தாரு. அந்த நேரத்திலை வந்து பள்ளியாசிரியையாய் இருந்த என்னுடைய அம்மா, என்னுடைய கல்லூரிப் படிப்புக்கும் மேல்நிலைப் படிப்புக்கும் முதுநிலைப் படிப்புக்கும் பணம் உதவி பண்ணினாங்க. இதுக்காக அவங்க எங்க அப்பாகூட தொடர்ந்து விவாதம் செய்ய வேண்டி இருந்தது. இந்தச் சூழ்நிலையில வந்து எவ்வளவு சீக்கிரத்தில முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில நாம வந்து சொந்த காலிலை நிக்கிறத்துக்கு ஒரு வழி செஞ்சுக்கணும் அப்படீன்னு ஒரு உந்துதல் எனக்கிருந்தது. அப்படியான ஒரு சூழ்நிலையில நான் நிறைய வேலைகளுக்காக முயற்சி செய்தேன். அப்ப எனக்குக் கிடைச்ச ஒரே வேலை காவல்துறை வேலைதான். ஆகவே இதை விட்டுட்டாக்க இந்தியச் சூழ்நிலையில நீங்க வேற வேலை தேர்ந்தெடுக்க முடியாது. உங்களுக்கு எந்த வேலை கிடைக்கறதோ அந்த வேலையிலதான் நீங்க இருக்கணும். இல்ல அந்த வேலையை விட்டிட்டு நீங்க வெளியில வந்துடணும். இதுதான் உங்கட, விட்டு வைக்கப்பட்ட வழி, choice. இது பிச்சைக்காரனின் முன் உள்ள வழி போன்றது. It is a begger choice. அப்போ எனக்கு வந்து வேலை பார்த்தாக வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அதை விட்டா வேறு வழியில்ல என்கிற நெருக்கடி இருந்தது. எனக்குக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"இந்த உலகம் பூராவும் ஒரு ஊழலற்ற சமூகம் அமைய வேண்டும் என்று நினைக்கிறேன். உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் அடுத்தவனை அன்பாகவும் சமமாக வும் நடத்தவேண்டும் என்று நான் நினைக்கிறேன்."**



கிடைச்சது இது ஒரு வேலைதான். அதனால இந்த வேலையில நான் அப்படியே ஒட்டிக்கிட்டேன்.

அதே காரணங்களுக்காகத்தான் நான் அதே வேலையில இன்னும் இருந்துக்கிட்டிருக்கேன். ஆனா இந்த வேலைக்குப் பதிலாக இன்னொரு வேலை கிடைச்சாலும் அதிலயும் சேர்ந்திருப்பேன். ஆகவே நான் இந்தக் காவல்துறையில இருக்கிறதென்பது ரொம்பத் தற்செயலான ஒரு விஷயம்னு சொல்றது அதனாலதான்.

**யமுனா:**

உங்களுடைய முதல் படைப்பு எந்த சூழலிலை வெளிவந்தது? அதற்குப் பிறகு தொடர்ந்து எழுதுவதற்கான ஒரு மன உந்துதல் அல்லது பின்னணி என்னமாதிரி உங்களுக்கு அமைஞ்சது?

**திலகவதி:**

அது வந்து, முதலாவதாக கவிதைகள்தான் எழுதியிருக்கேன்னு நான் சொன்னேன். அப்படியாக நான் எழுதிய என்னுடைய கவிதைகளை டயறி யிலேதான் எழுதி வைச்சிப்பேன். அது பதிப்பிப் பதற்கான கவிதை என்றோ, மற்றவர்கள் படிக்கக் கூடிய கவிதை என்றோ எனக்குள்ளாற ஒரு நம்பிக்கை இல்லை. இரண்டாவதாக, இந்த பத்திரிகைக் காரங்கள அணுகிறது, அதை புத்தகமாக வெளிக் கொண்டு வருவது இது மாதிரியான விஷயங்கள் எல்லாம் எனக்குத் தெரியவும் இல்லை. இந்தக் காரணங்களுக்காக எழுதி எழுதி நானே அப்பிடியே வச்சுக்குவேன். அப்படியாக இருந்தபொழுது தற்செயலாக 'அமுதசுரபி' தீபாவளி மலருக்கு ஒரு 86வது வருஷத்தில ஒரு கவிதை எழுதி அனுப்பிச் சேன். 'தனிமை', அதுதான் கவிதையின்ர தலைப்பு. அந்த கவிதை வெளிவந்தபோதுதான், நான் கவிதைகள் எழுதுவேன் என்கிறது ஒரு சிலருக்குத் தெரிய வந்திச்சு. அதுபற்றி அப்போ சில விமர்சனங்கள் சொன்னாங்க. அந்த விமர்சனங்கள் எழுதுறத்துக்கான தைரியத்தைக் கொடுத்தது என்று சொல்லலாம். அந்த தைரியத்துக்குப் பிறகு, ஏற்கனவே எழுதி வைத்திருந்த கவிதைகள் சிலவற்றை நானாகவே தேர்ந்தெடுத்து அதை அச்சுக்குக் கொடுக்கலாம்னு முடிவு செய்தேன்.

திருமகள் நிலையத்தார் ஒரு நண்பர்மூலமா தகவல் தெரிஞ்சு அவங்க எங்கிட்ட கேட்டாங்க. அப்போ அந்த தொகுதியை அவங்ககிட்ட கொடுத் தேன். 'அலை புரளும் கரையோரம்', அதுதான் முதல் கவிதைத் தொகுதியாக வெளிவந்தது. அப்பதான் இவங்க இலக்கியத்தில ஆர்வமுடையவங்க, கவிதை எழுதக் கூடியவங்க, அப்படீங்கற செய்தி தெரிய வந்திரிச்சு வெளில. தெரிய வந்தவுடனே பார்த்தாக்க நம்ப வெகுஜனப் பத்திரிகைகள் வந்து, நான் தமிழ் நாட்டிலேயே முதல் பெண் IPS அப்படீங்கிற முறையில என் மேல ஒரு வகையிலை தேவைக்கதிகமாகவே ஒரு வெளிச்சத்தைப் பாய்ச்சினாங்க. அப்படி அவர்கள் பாய்ச்சியபோது, அதை மறுக்கக்கூடிய உரிமையும் சுதந்திரமும் என்னட்ட இருக்கல. ஏன்னா ஒரு துணுக்காக, செய்தியாக அதை அவங்க பிரசுரிக்கும் போது, அதைச் செய்யக்கூடாதுன்னு சொல்றத்துக்கு எனக்கு உரிமை இருக்கிறதா நான் கருதல்ல. இன்னொன்றுகூட நான் நினைச்சேன். இந்த மாதிரி ஒரு பேட்டியோ, அல்லது இதுபோல ஒரு செய்தியோ வெளிவருவது இன்னும்கூட நிறையப் பெண்களுக்கு தாங்கள் இப்படியான வேலைகளுக்குப் போகலாம், தாங்கள் இப்படித் தனித்துவமாக இயங்கலாம், தங்களுடைய பொருளாதாரத் தேவைகளைத் தாங்களே கவனித்துக் கொள்ளலாம என்று உந்துதல் பெறலாம்- இப்படியான கருத்துக்கள் இன்னும் நிறையப் பெண்கள் மனசில் வந்தால் நல்லதுதானே- அதற்கு இது ஏதாகிலும் ஒரு சிறு பொறியாய் உதவுமாய் இருந்தால் நல்லதுதானே- அந்தமாதிரி ஒரு சமாதானமும் இருந்தது. எனக்கு இதற்கு முன்னாலேயே வெகுஜனப் பத்திரிகையாளர்களோடு ஒரு தொடர்பு இருந்தது. அந்தத் தொடர்பின் காரணமாக அவங்களுக்கு நான் இலக்கிய ஆர்வம் உடையவள் என்று தெரிய வந்தபோது அவங்க நீங்க சிறுகதை எழுதித் தரணும், தொடர்கதை எழுதித் தரணும்னு கேட்டாங்க. எழுதுறது என்கிறதிலை எனக்கு ஏற்கனவே உள்ளுக்கு ஒரு ஆர்வம் இருந்த தாலயும் அதுக்கான தளத்தை அமைத்துக் கொடுக்க அவர்கள் தானாகவே முன்வந்த காரணத்தினாலும் நான் வந்து எழுத ஆரம்பிச்சேன். அன்னிக்குப் பார்த்தீங்கன்னா 80, 87வது வருஷத்திலை எல்லாம் இந்தப் பெண்சிசுக்கொலையைப்பற்றி அப்பொழுது தான் முதல் முறையாக வெளிச்சத்துக்கு வந்தது. எல்லாரையும் ரொம்ப மனம் கலங்கப் பண்ணி இருந்த நேரம். அப்போ என்னிடம் சிறுகதை கேட்டபோது நான் அதைத்தான் கருப்பொருளாக வைத்து 'விதைத் தாலும் ஆண்மக்கள்' என்ற தலைப்பில ஒரு சிறுகதை தினகரன் பத்திரிகைக்குக் கொடுத்தேன். அந்தக் கதைக்கு நிறையக் கடிதங்கள் எல்லாம் வந்தது.

இந்த அனுபவம், நிறையப் பேர் இதைப் படிக்கிறாங்க. இது பற்றிச் சிந்திக்கிறாங்க. நாங்க ஏதோ ஒரு மூலையில் இருந்துகொண்டு, நாம வந்து சில கருத்துக்களை பெருவாரியான ஜனங்களுக்கு சொல்றத்துக்கான ஒரு ஊடகமாக இந்தப் பத்திரிகை இருக்குது அப்படீன்னு ஒரு உணர்ச்சியையும் ஒரு திருப்தியையும் எனக்கு ஏற்படுத்திச்சு. அதோட கூட நான் இன்னுமோர் முடிவுக்கு வந்தேன். அது என்னன்னா என்னுடைய சில கவிதைகள் அதற்கு முன்னே பத்திரிகைகள்ல வந்திருந்தாலும்கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதுக்கு இப்படியான ஒரு எதிர்வினை இல்லை. அந்தக் கவிதைகள் குறித்து இந்த மாதிரிக் கடிதங்களோ விசாரணைகளோ இல்லை.

ஆனா, இந்தக் கதை வந்த பிறகு நிறையப் பேர் இந்தக் கதை குறித்து எங்கிட்ட பேசினாங்க. அப்போ எனக்கு என்ன தோணிச்சுன்னு சொன்னா இந்தக் கவிதைகளைக் காட்டிலும் இந்த சிறுகதைகள் வந்து ஒரு தாக்கத்தை வாசகர்கள் மனசில் ஏற்படுத்துகிறது என்ற எண்ணத்தை என் மனசில தோற்றுவித்தது. அதைத் தொடர்ந்து, நான் பல விஷயங்களைப்பற்றி என்னுடைய மனசில் இருந்த பல கருக்களைப்பற்றி அவற்றைப் பதிவுபடுத்த ஆரம்பித்தேன். அப்படியாக பதிவுபடுத்திய விஷயங்கள வந்து ஒரு தொகுதியாக வெளியிட்டேன். அதில பெரும்பாலான கதைகள் வந்து எந்த வெகுஜனப் பத்திரிகைகளிலும் வெளிவராதவை. நான் கதைகளாக எழுதி ஒரு தொகுதியாக மட்டும் வெளிவந்தது. 'தேயுமோ சூரியன்' என்ற தலைப்பில ஒரு சிறிய பதிப்பாளர், சுப்பையா சிறீதர் அவங்க, அதைப் போட்டாங்க. அவர் அதைப் போட்டபோது சிலம்பொலி செல்லப்பா அப்புறம் அன்னிக்கு வெகுஜனப் பத்திரிகையிலை எழுதிக் கொண்டிருந்த எழுத்தாளர்கள் எல்லாரும்கூட அதைப் படிச்சிட்டு நல்லாவே இருக்கு அந்தக் கதைங்க. வடிவம் நல்லா இருக்கு, அப்படின்னு சொன்னாங்க. அது எனக்கு இன்னும் கொஞ்சம் நம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுத்தது. இப்படியாக கதைகள் எழுத ஆரம்பிச்சேன். அதுக்கப்புறம் தொடர் கேட்டாங்க, தொடர் எழுத ஆரம்பிச்சேன். நான் தொடர்ச்சியாக எழுதறதில பத்திரிகையாளர்களுக்கு முக்கியமான பங்கு உண்டு, முக்கியமாக வெகுஜனப் பத்திரிகையாளர்களுக்கு என்றுதான் நான் சொல்வேன். நாங்க இப்பிடி வெகுஜனப் பத்திரிகைகளிலே எழுதுறத்தைக் குறித்து விமர்சனங்களும் உண்டு. நான் வெகுஜனப் பத்திரிகைகளில் எழுதுகின்ற காரணத்தாலேயே சில பேர் வந்து எனக்கு எழுத்தில தீவிரம் இருக்காது அப்பிடிங்கற மாதிரியும் அது ஒரு நேர்மையான எழுத்தாக இருக்குமா - நிச்சயம் கமர்ஷியல் எழுத்தாகத்தான் இருக்கும் - என்கிற மாதிரியும் விமர்சனங்கள் உண்டு. ஆனா எனக்குள்ள ஒரு சமாதானம் என்ன என்று சொன்னா - நான் வந்து எழுதும்போது எந்த சமரசத்தையும் செய்கிறதில்ல. அப்புறம் எந்தப் பத்திரிகையையும் மனசில வைச்சுக் கொண்டு அந்தப் பத்திரிகையிட தேவைக்கு ஏற்ப தகுந்த மாதிரியான படைப்பையும் செய்கிறதில்ல. நான் வந்து கதை எழுதுறத்துக்கு கருப்பொருள் கிடைத்திருக்கும்போது நேரம் கிடைக்கும்போது எழுதி வைச்சுக்குவேன். அது என் கைவசம் இருக்கும் அதில வந்து அப்பப்ப மாற்றங்கள் செய்வேன். திருத்துவேன். சிலதை வெட்டுவேன். சிலதைச் சேர்ப்பேன். இந்தப் பயிற்சி ஒரு புறம் நடந்துகொண்டே இருக்கும். இது இப்பிடி நடந்து கொண்டிருக்கும்போது யாராவது ஒரு பத்திரிகைக்காரர் வந்து கேட்டாக்க, அவங்களுக்கு அந்தக் கதை போகும். இதனாலை சில வேடிக்கை எல்லாம் கூட நடந்தது.

தாமரை இலக்கிய இதழுக்கு, - தொழிற்சங்க இயக்கங்களின்மீது நம்பிக்கையைப் போதிக்கிற கொள்கை உடைய இலட்சியப் பத்திரிகைகள் செம்மலர், தாமரை போன்ற பத்திரிகைகள்..., தொழிற்சங்க அமைப்பை விமர்சிக்கிற அதன்மீது நம்பிக்கையை இழந்துவிட்ட ஒரு பெண்ணைக் குறித்து ஒரு கதையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். 'கனவுகளைத் தொலைத்தவள்' அப்படீன்னு அந்தக் கதையோட பேரு. கல்லூரிப் பேராசிரியர்களுக்கான ஓர் அமைப்பு. அமைப்பிலை வந்து தலைமைப் பதவியாக ஒரு பொறுப்பை எடுத்து போராட்டம் நடத்தி அதன்மூலமாக பல சிக்கல் களுக்கு ஆளாகிய ஒரு பெண்ணை, அந்தச் சிக்கல்களுக்கு ஆளாகிற வரைக்கும் அவளைக் கொம்பு சீவி விட்டுக் கொண்டிருந்த அந்த இயக்கத் தினுடைய பின்னணித் தலைவர்கள் எல்லாம் அவளுக்கு பெரியதொரு சிக்கல் வந்த பிறகு முற்றா கக் கை கழுவுகிறார்கள். அப்பிடி ஒரு அனுபவம் இருக்குது. அதனாலை அவ வந்து பிற்காலத்திலை திருமணம் முடிந்து கையிலை குழந்தையோடை குடும்பம் நடத்துகிற கால கட்டத்திலை கணவன்கூட ஒரு நாள் அவனுடைய தொழிற்சாலைப் பிரச்சி னைகள் பற்றி அவங்க வீட்டிலை பேசிக்கிட்டிருக் கிறாங்க, அப்புறம் பேசிக்கிட்டிருந்திக்கிட்டு கணவன் வீட்டை விட்டுக் கிளம்பும்பொழுது இவ வந்து அவருக்கு அறிவுரை சொன்னா. நீங்க வந்து உங்க பாட்டுக்கு நீங்க உண்டு உங்க வேலையுண்டு அப்படீன்னு இருங்க. சரிப்பட்டு வரலைன்னாக்க நீங்க லீவு மாதிரி போட்டுட்டு வாங்க. ஆனா தொழிற் சங்கத்திலையெல்லாம் சேர்ந்துக்காதீங்கன்னு. அப்படின்னு சொல்லுற மாதிரி ஒரு கதை. இப்பிடியான ஒரு கதை அப்பிடியான ஒரு பத்திரிகையில வரமுடியாது.

அது மாதிரி பிராமணர்களுடைய ஆதிக்கம் மிகுந்த பத்திரிகை என்று சொல்லிக் கருதப்படுகிற பத்திரிகை வந்து 'அமுதசுரபி'. அந்தப் பத்திரி கையில வந்து நான் பைபிள் மொழியில, 'கடைசித் துளி இரத்தம்' அப்படீன்னு ஒரு கதை எழுதினேன். அந்தக் கதையினுடைய கருவை நான் என்னவென்று எடுத்தேன்னாக்க, பைபிளில ரொம்பப் பேசப்படுகிற ஒரு சின்ன நிகழ்ச்சி, விபச்சாரி ஒருத்திமீது



**"நீங்க வந்து உலகம் முழுவதையும் தலைகீழாகப் புரட்டிப் போடமுடியாது. அப்பிடியான நம்பிக்கை எனக்குக் கிடையாது. ஆனா அப்படியான ஒரு மாற்றம் ஆரம்பிக்கவேணும் என்றால் அதை நீங்கள் உங்களிடத்தில் இருந்து ஆரம்பிக்கவேணும்."**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊராட்கள் கல்லெறியிறத்துக்கு தயாராக இருக்கிற போது யேசுநாதர் வந்து, உங்களில் தவறு செய்யா தவர் யாராகிலும் அவள்மேல் முதல் கல்லை எறியக் கடவர். உடனே எல்லாரும் அவங்க கையில இருந்த கல்லைப் போட்டுட்டாங்க. அப்படீங்கிறதுதான் அந்த நிகழ்ச்சி.

அதை வந்து இப்போ மறுபடியும் படிச்சபோது எனக்கு வந்து மீள்பரிசோதனை பண்ணனும்னு தோணிச்சு - இன்னிக்கு இருக்கிற காலகட்டத்தில இன்னிக்கு இருக்கக்கூடிய, சுயநலமே பெரிதாக இருக்கிற ஒரு சமூகத்தில, இந்த யேசுநாதர் வந்து இம்மாதிரி நிகழ்ச்சியைக் கையாளுவாராக இருக்கும் பட்சத்தில் எல்லாருமே அந்தக் கல்லை மிக வேகமாக விட்டெறிவாங்க. ஏன்னா கொஞ்சம் நிதானிச்சு விட்டெறிந்தாலும்கூட, தான் தவறு செய்தவன் என்று அடுத்தவன் நினைச்சுக்குவானோ என்பதற்காக வேண்டி, நிச்சயமாக எல்லாரும் கல்லை எடுத்து எறிவாங்க. அப்போ அந்தப் பெண் வந்து அதிகப் படியான கல்லடிகளை வாங்குறத்துக்கு தான் காரண மாயிட்டமே என்று சொல்லிட்டு யேசுநாதர்தான் தலை குனிந்து போவாரு. அப்படியான ஒரு காலம்தான் இப்ப இருக்குதுன்னு என் மனசிலை பட்டது.

**யமுனா:**

ஏதோ ஒரு வகையில வந்து நாங்க பழகுற மனிதர்கள் சொந்த வாழ்க்கை அனுபவங்கள் நாங்க வேலை செய்கிற இடத்திலை கிடைக்கிற அனுபவங்கள் இதுதான் எங்களை எழுதத் தூண்டுது. உதாரணமாக வந்து நீங்க கவிதைக் கும் சிறுகதைக்கும் உள்ள வித்தியாசத்தைச் சொல்லும்போது பார்த்தேன். என்னன்னா கவிதை என்கிறது ஒரு வகையில தன்மயமானது - பெர்ஸனல் - பெரும்பாலும் நாங்கள் தனிமனித அனுபவங்களைத்தான் கவிதையில சொல் லுறம். பெரும்பாலும் சமூக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்றேல்லை. கவிதை எப்ப சமூக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தொடங் குதோ அப்போதே கவிதை வந்து தன்னுடைய தன்மையை இழந்திடுது என்றுதான் சொல்லுவன். கவிதையைப் பொறுத்த அளவிலை தன்வய மானதுதான். அப்ப சிறுகதை உங்களுக்கு பரந்துபட்ட அளவிலை போகுது. தனிநபராக தொழில் என்ற அளவிலை உங்களுக்குப் பல விஷயங்கள் நடந்துகொண்டு இருக்குது. உதாரணமாக நீங்கள் காவல்துறையில் இருந்திருக்கிறீங்கள், அதில்பதவி வகித்திருக் கிறீங்கள் உங்களுடைய அனுபவங்கள் என்கிறது வந்து, உங்களுடைய சொந்த வாழ்க்கை அனுபவங்கள், உங்களைச் சார்ந்தவர் களுடைய அனுபவங்கள், இப்ப இருக்கிற அனுபவங்கள். எழுத்தாளனுடைய எழுத்துக் கான மிக அடிப்படையான விஷயமே ஒரு தார்மீகக் கோபம்தான், சமூகக்கோபம்தான். நீங்க சொன்ன மாதிரி சிசுக் கொலையைக் கண்டு நீங்கள் எழுதுகிறீங்கள். அதேமாதிரி எல்லா அமைப்புகளிலுமே (எந்த அமைப்பென்று வித்தி யாசம் இல்லை) மனித உறவுகளானாலும் சரி அமைப்புகளானாலும் சரி. இதில வந்து தார்மீகத் தன்மையை இழக்காமல் இருக்கிறதுதான் முக்கியம். நாங்க போராடணும். அதிலை வந்து உங்களுடைய அமைப்பு சார்ந்து தார்மீகக் கோபம் வரக்கூடிய அளவுக்கு விஷயங்கள் இருந்ததா? இதற்கு நீங்கள் எப்படி ரியாக்ட் பண்ணினீங்க?

**திலகவதி:**

வேலை என்கிற முறையில கதை எழுத தூண்டச் செய்வதான பல விஷயங்கள் வந்து வாய்க்கும். அதை வந்து நாம கதைக் கருவா எடுத்திட்டுக் கையாள்றது உண்டு. நீங்கள் சொல்றது மாதிரியாக காவல்துறையின் மீதான கோபம் அப்படீங்கறதுன்னு சொல்றத்துக்கில்ல. அந்த மாதிரியான ஒரு கோபம் வந்து எனக்கு வந்ததே கிடையாது.

என்ன மாதிரிச் சொல்லலாம், அப்பிடீன்னு சொன்னா, பொதுவாகவே இந்த முற்போக்குவாதிங்க என்று அறியப்படுகிறவங்க இந்தக் காவல்துறையைத் திட்டிறதை ஒரு பொழுதுபோக்காக வச்சுக்கிட்டி ருக்காங்க. அதை வந்து அவங்கட முற்போக்குத் தன்மைக்கு ஒரு அடையாளமாகக்கூட அதைக் கொள்றாங்க. ஆனால் நான் காவல்துறையிலையே இல்லாம இருந்திருந்தாலும் கூட, அவங்களை இவ்வளவு நெருக்கத்திலை அறியக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைச்சிருக்கும் என்று நான் நினைக்கல. அங்க இருக்கக்கூடிய, அவங்க அனுபவிக்கிற துன்பங்களும், அவங்களுடைய சொந்தங்க அவங்கள எப்படி நடத்துறாங்க, அவங்க எவ்வளத்துக்கு ஓவர் வொர்க்ட் ஆக இருக்கிறாங்க, அவங்களுடைய சொந்த வாழ்க்கையில ஏற்படுகிற பாதிப்புகளால எவ்வளவு தூரத்திற்கு இயந்திரமாய் இருக்கிறாங்க, இப்படியான விடயங்கள் எல்லாம் ரொம்பப் பரிதாபத்திற்குரியதாய்த்தான் எனக்கு மனசில படுகுது.

எல்லா மட்டங்களிலையுமே, அதிகாரிகள் மட்டத்திலையும் சரி, கீழ்மட்டத்திலையும் சரி, அப்புறம் உலகத்தில எல்லா இடத்திலயும் இருக்கிறது மாதிரியாகவே இங்கயும் சிலபேர் வந்து

**“சேகுவேராவை ஏன் பிடிக்குதென்னாக்க அவர் தொடர்ந்து ஒரு போராளியாகவே இருக்கிறாரு. சமீபத்தில நைஜீரியாவிலா தூக்கில போட்டாங்களே கென்சரவேவா, அதுமாதிரியான ஆட்களைத்தான் ரொம்பப் பிடிக்குது.”**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## "என்னதான் பெற்ற குழந்தையையே கொல்லும்படியான ஒரு சங்கடத்துக்கு ஒரு பெண் ஆளாக்கப்படுகிறான்னா அவளுடைய மனநிலை எவ்வளவு பரிதாபத்திற் குரியதுன்னுதான் எனக்குத் தோணிச்சு."

சந்தர்ப்பவாதிங்களாக இருக்கிறாங்க - இந்தமாதிரி ஆட்கள் எல்லா இடத்திலையும் உண்டு. அப்படித் தானே தவிர, காவல்துறை அப்படிங்கிறதை முகமில் லாத ஒரு அமைப்பாக வைத்து அதுமேல அப்படியே ஒரு தாங்க முடியாத கோபம் அப்படிங்கிறமாதிரி எல்லாம் எனக்கு எப்போதும் வந்தது கிடையாது.

ஆனா காவல்துறையில இருக்கக்கூடிய தனி மனிதர்களுடைய வாழ்க்கைச் சிக்கல்கள் அத வந்து என்னுடைய கதைகளுக்கு கருவாக ஆக்கி இருக்கிறேன்.

அதாவது வந்து, என்னுடைய கதைகள்ல ஒரு ஐந்திலொரு பங்கு கதைகள் என்னுடைய காவல் துறை அனுபவங்களைப் பிரதிபலிப்பதாக இருக்கும். காவல்துறையில இருக்கிறது என்னுடைய எழுத்தை வேறொரு விதத்திலயும் பாதிக்குது. எப்படின்னு கேட்டீங்கன்னாக்க எங்களுக்கு நிறைய சர்வீஸ் சட்ட திட்டங்கள் எல்லாம் இருக்கு. சர்வீஸ் சட்ட திட்டங் கள்லே நாங்க என்னென்ன விஷயங்களைப்பற்றி கருத்துத் தெரிவிக்கக் கூடாதுன்னு சொல்லி சட்ட திட்டங்கள் இருக்கு.

அதனால நாங்க வந்து எழுதும்பொழுது மிகச் சுதந்திரமான வெளிப்பாடு அப்படிங்கிறது ஓரளவுக்கு மட்டுப்படுத்தப்படுகிறது. அதாவது காவல்துறையில இல்லாவிட்டால், நான் இந்த விஷயங்களை இன்னும் கொஞ்சம் கூடக் கூர்மையாக, கொஞ்சம் கூடக் காத்தி ரமாக சொல்லி இருந்திருக்கக்கூடும். அப்படியான விஷயங்களை நான் தவிர்ப்பதும் உண்டு. அந்த விதத்திலை அது ஒரு நேர்மையில்லாத செயல்தான்.

**யமுனா:**

நான் ரொம்ப ஸின்ஸியராக இந்த விஷயங்களை பார்க்கிறன். உதாரணமாக ஆயுதம் தாங்கிய அமைப்புகள் என்கிறது புரட்சிகர அமைப்புக ளுக்கும் இருக்கு. இப்ப அரசு என்று எடுத்துக் கொண்டாலும் அரசை நெறிமுறைப்படுத்துவதற் குத்தான் இந்த அமைப்புகள். அதன்கீழ் உள்ள பல்வேறுவிதமான மக்களைக் கட்டுப்படுத்து வதற்காகத்தான் இந்த ஆயுதம் தாங்கிய அமைப்புகள் எல்லாமே இருக்குது. புரட்சிக்குப் பின்னான சமூகங்களிலையும் இந்த அமைப்புகள் இருக்குது. எழுத்து, எழுத்தாளன் அது சம்பந்தமாகத்தான் உங்களை ஒரு சிக்கலில் வைத்து பார்க்கிறன் நான். இது வெரி பேசிக் கிரைஸிஸ் என்றுதான் நான் நினைக்கிறன். நீங்க சரியான வார்த்தைகூட அதுக்குப் பாவிக்கிறீங்க. நான் என்ன கேக்கிறேன்னு கேட்டீங்கன்னா - crime and punishment - குற்றமும் தண்டனையும், என்று சொல்கிறன். எழுத்தாளன் என்கிற முறையிலை நாங்க எந்த மனுசனையும் குற்ற வாளி என்ற அடிப்படையிலை பார்க்க மாட்டம். உதாரணமாக, நாங்க தஸ்தாவேஸ்கியை எடுத்தமென்றால் அவர் அப்பிடிப் பார்க்கேல்லை. பல்வேறு crime fictions எழுத்தாளர்கள்கூட அதி அற்புதமாக மனித உன்னதங்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் காவல்துறையில் இருக்கும்போது ஒரு காவல்துறை அதிகாரியாக உங்களுக்கிருக்கிற பிரச்சினை என்னென்றால் குறைந்த பட்சம் வந்து நீங்கள் அதே இடத்தில் - on the spot - இலை குற்றமும் தண்டனையும் சம்பந் தமான விஷயங்களிலை நீங்க குற்றவாளியை குறைந்த பட்சமாவது அடையாளம் காண வேண்டி இருக்கும். உதாரணமாக, நான் கேள்விப்பட்ட வரையிலும் - மற்றது இந்த மனித உரிமை அறிக்கைகள் வாசிக்கிற பொழுதும்கூட காவல்துறையில வந்து இந்த வன்முறை அதிகமாய் இருக்குது என்று தெரிகிறது. உதாரணமாக, ஒருத்தர் வந்து குற்றவாளியா இல்லையா என்று தீர்மானிக்கப் படுகிறத்துக்கு முன்னாடிகூட இந்தப் பிரச்சினை ஒன்று இருக்கு. இந்தப் பிரச்சினையிலை இருந்து ஒரு தனிநபர் என்ற அளவிலை அந்த அமைப்போடு சம்பந்தப்பட்ட எவருக்கும் வன்முறையிலீடுபடுவது தவிர்க்க இயலாமல் போகும். ஆனா ஒரு படைப்பாளி என்றளவிலை உங்களுக்கு மிகப் பெரிய நெருக்கடி ஒன்று அதில் இருக்கு. உதாரணமாக எந்த மனிதர் களையும் அடிப்படையில நாங்க குற்றவாளி களாகப் பார்க்க இயலாது. எந்த மனிதர்கள்மீதும் வன்முறை செலுத்தவேணுமென்று நாங்கள் நினைக்கக்கூடாது. மற்றது எழுதுவதற்கான மிக அடிப்படையான விஷயமே தார்மீகக் கோபம், சமூகத்தின் மீதான, எங்கள்மீதான கோபம்தான். அப்பிடிப் பார்க்கும்போது ஒரு காவல்துறையைச் சார்ந்து இயங்குகிற ஒரு அதிகாரிக்கும் படைப் பாளிக்கும் இடையிலான முரண்பாடு conflict ஒன்று வரும். இந்த நெருக்கடியை நீங்கள் என்ன மாதிரிக் கடந்தீர்கள்?

**திலகவதி:**

என்னளவிலை நான் வந்து விசாரிக்கக்கூடிய குற்றம் என்று இருக்கிறது. நீங்க சொல்றது ரொம்பச் சரியான விஷயம். என்னுடைய பயிற்சிக் காலத் திலேயே இதை வந்து நான் யோசித்தேன். அப்ப எங்களுக்கு வந்து, காவல்துறைப் பயிற்சி ஐதரா பாத்தில் குடுத்தபோது அந்தப் பயிற்சிக் கல்லூரி யினுடைய தலைவராக இருந்தவர் எஸ். எம். பயஸ். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அதனால அவரை அணுகிறது எனக்கு கொஞ்சம் சுலபமாகக்கூட இருந்தது. அவரிடம்நான் இந்தக் கேள்வியைத்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"என்னுடைய தொழில் வந்து எனக்கு காவல் துறையாக அமைந்தது. இது ஒண்ணும் நான் தேர்ந்தெடுத்த விடயம் கிடையாது. இது நான் திட்டமிட்டு அடைஞ்ச ஒரு விஷயமும் கிடையாது."**



கேட்டேன். எனக்கு வந்து யாருடைய செயலுமே குற்றம் காணக்கூடியதாக இல்லை. தப்பித் தவறிக் குற்றம் நிருபிக்கப்பட்ட பின்னும்கூட எனக்கு அந்த நபரின்மீது கூடிய அனுதாபம்தான் இருக்கும். இப்பிடிப் பண்ணும்படி ஆயிடுச்சே என்றுதான் நான் நினைக்கிறேன்.

சிசுக்கொலைக்காக மதுரையில கருப்பாயி என்கின்ற ஒரு அம்மாக்கு தண்டனை குடுத்தாங்க கோட்ல. அன்னிக்கு எனக்கு, இறந்து போன குழந்தைக்காக எவ்வளவு துாரம் மனசு கவலைப் பட்டதோ அதே அளவு எனக்கு கருப்பாயியைப் பற்றியும் இருந்தது. என்னதான் பெற்ற குழந்தை யையே கொல்லும்படியான ஒரு சங்கடத்துக்கு ஒரு பெண் ஆளாக்கப்படுகிறான்னா அவளுடைய மனநிலை எவ்வளவு பரிதாபத்திற்குரியதுன்னுதான் எனக்குத் தோணிச்சு. இந்த விஷயமெல்லாத்தையும் நான் அவர்கிட்ட சொன்னேன். எங்களுடைய பயிற்சிக் கல்லூரியின் முதல்வர், இயக்குனர் அவர்கிட்ட சொல்லி, இந்தமாதிரி மனநிலை எங்கிட்ட இருக்குது. நான் வந்து ஒரு நல்ல காவல்துறை அதிகாரியாக இயங்கமுடியும்னு நீங்க நினைக்கிறீங்களா? இல்லை நான் ஒரு தகுதியற்றவளாக ஆகிடுவேனா இந்தத்துறைக்கு என்று நான் அவங்ககிட்ட கேட்டபோது அவர் என்ன சொன்னாருன்னா- இன்றைக்கு காவல்துறை உங்களைப்போன்ற மனநிலையில் இருக்கிறவங்களத்தான் அதிகாரி களாக எதிர்பார்க்கிறது. அதனால இந்த மாதிரி மனநிலையில இருக்கிறவங்களத்தான் இன்னைக்கு எங்களுக்குத் தேவை என்றார்.

அந்த மாதிரியான நெருக்கடி எனக்கு வாழ்க்கையிலே வந்ததே கிடையாது. ஏன்னு கேட்டீங்கன்னா, நமக்கு வந்து சட்டம் இருக்குது தானுங்களே அது வந்து திட்டவட்டமாக உங்க ளுக்கு இது இது குற்றம் என்று சொல்லுது. இப்ப வந்து மனித உரிமை பற்றி நீங்க பேசுறீங்க. உதாரணமாக, முகமூடி அணிந்த சில கொள்ளையர்கள் ஒரு வீட்டுக்குள்ள புகுந்து மது என்கிற 19 வயதுப் பையனை தலையில அடிச்சுக் கொன்னுட்டாங்க. அந்தப் பையன் இறந்து போயிட்டான். இந்த இறந்துபோன பையனை வந்து, அவனுக்கு மனித உரிமை உண்டுதானே. இப்படியான ஒரு கொலையைச் செய்தவன் மனித உரிமையை மீறினவன் தானே. அப்போ அவனுக்குரிய தண்டனையைக் கொடுக்கத் தானே வேணும்.

ஆகவே, அவனைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியது எங்களுடைய வேலையாக இருக்கின்றது. ஆனா, நான் சம்பந்தப்பட்ட எந்த ஒரு விசாரணை யிலயும் தவறான நபர்களைக் கொண்டு வந்து அவங்களை அடிச்சுத் துன்புறுத்தியோ வருத்தியோ அடிக்கு பயந்து குற்றத்தை ஒப்புக் கொள்ள வைக்கணும்கிறதிலையோ. அதுமாதிரியான விஷயங்களை நான் எப்பொழுதும் செஞ்சதே கிடையாது. எனக்கே என்னுடைய விசாரணையின் பிறகு இவங்கதான் செஞ்சாங்கிறது தீர்மானமாகத் தெரிந்த பிறகுதான் நான் அவர்களிடம் சொல்லுவேன்.

அதற்கிடையில அந்தக் குற்றம் செய்த நபரேகூட இந்த மாதிரி சூழ்நிலையிலை நான் செய்யும்படியாக ஆயிடுச்சு. அதனால 'I differ punishment' அப்ப டீன்னு சொல்லும்படியான சூழ்நிலைதான் அமையும். நீங்க சொல்றதுமாதிரி எனக்கு வந்ததே கிடையாது. விசாரணையின்போது பாருங்க, மனுசங்கட மனசு என்னென்ன மாதிரியெல்லாம் விசித்திரமாக வேலை செய்யுது, அப்படீங்கற பெரிய விழிப்புணர்வே எனக்குக் கிடைச்சுது.

மது கேஸ் வந்து இன்னும் நடந்துகிட்டுத்தான் இருக்கு. அந்த கேஸ் வந்து வெற்றிகரமாக முடியுமாங்கிறது தெரியலை. எதனாலைன்னு தெரியுமா? இந்தப் பையன் தலையில அடிச்சாங்களே, அந்த இறந்துபோன பையனுடைய தாயார்தான் அதைக் கண்ணால் கண்ட சாட்சி. அந்தக் குற்ற வாளியை சந்தேகத்துக்கிடமில்லாமல் நாங்க கண்டு பிடிச்ச பிறகு அந்தக் குற்றவாளியே குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகு judge முன்னால வந்து ஒரு அடையாள அணிவகுப்பு வைக்க வேண்டி இருந்துது. அந்த அடையாள அணிவகுப்பை நாங்க வைச்சப்போ அந்த அம்மா வந்து, அவங்க மகனுடைய தலையைப் பிளந்துட்டுப் போனானே அந்தப் பையனைப் பார்க்கிறாங்க. நானும் அந்தப் பையனைப் பார்க்கிறேன். அந்த அம்மா அந்தப் பையனைக் கண்டு பிடிச்சுடிச்சு என்று எனக்கு என் உள்ளுணர்வு சொல்லிச்சு. அந்த அம்மாவும் அந்தப் பையனைப் பார்க்கிறாங்க. ஆனா, இதிலை யாரும் இல்லைன்னு அந்தம்மா சொல்லிடிச்சு. அதுக்கப்புறம் அந்த அடையாள அணிவகுப்பு முடிஞ்ச பிறகு அந்த அம்மாவை வந்து சந்திக்கிறேன். அப்போதுதான் என்னுடைய role change ஆகுது. இது நான் ஒரு காவல்துறை அதிகாரியாக மட்டும் இருந்திருந்தா, எனக்கு அந்த அம்மா மேல கோபம் இருந்திருக்கும், ஆத்திரம் வந்திருக்கும். ஏன்னா ரொம்பச் சிரமப்பட்டுப் பிடிச்ச ஒரு கேஸ். இதை நடத்தி முடிச்சிருந்தாக்க, நம்ம மகுடத்தில் இன்னொரு சிறகாக அது இருந்தி ருக்கும். அதுக்கு வழியில்லாம அந்தப் பொம்பிளை கெடுத்திடுச்சே என்று கோபம் வந்திருக்கும். ஆனா எனக்கு ஓரளவுக்கு பிடிபட்டது, அந்த அம்மாவி னுடைய மனநிலை. அப்போ எல்லாம் முடிஞ்ச பிறகு, நான் அந்த அம்மாவைக் கூப்பிட்டுக் கேட்டேன் "நிஜமாக உங்களுக்குத் தெரியலையா? நிச்சயமாக, நாங்க கொண்டு வந்த ஆளை நீங்க கண்டு பிடிக்கலையா?" என்று. அதற்கு அந்த அம்மா, "தெரிஞ்சுதுங்க. ஆனா இந்த வயசில இருக்கக்கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு மகனை இழக்கிற சோகம் இன்னொரு தாய்க்கு ஏற்படறத்துக்கு நான் காரணமா இருக்க விரும்பல" அப்படீன்னு அந்தம்மா சொல்லிச்சு. அது என்னவோ என்னுடைய மனசை வந்து ரொம்பத் தைத்த ஒரு விஷயமா மனசில இருந்தது. இதை 'மனிதம்' என்கிற பெயரில ஒரு சிறுகதையா எழுதினேன். இந்தியா டுடேயில வெளிவந்தது. இப்பிடியான சந்தர்ப்பங்கள் வந்து நிறைய கிடைக்கும்.

**யமுனா:**

உங்களுக்கு வாற விமரசனங்கள் பற்றி- சீரியஸ் எழுத்தாளர்கள் இருக்கிறாங்க. இடதுசாரிகள் இருக்கிறாங்க. இவர்களிடமிருந்து உங்களுக்கு எப்படியான விமர்சனங்கள் இருந்து வந்திருக்கிறது. உதாரணமாக இப்படிப் படைப்புகள் நீங்க எழுதிக் கொண்டிருக்கிறீங்க. அவங்களுடைய பார்வையில, என்னுடைய பார்வையிலகூட நான் ஒரு கட்டம்வரைக்கும் அப்பிடித்தான் சொல்லுவன். ஆனால் ஒரு எழுத்தாளர் என்ற அளவிலை நான் ஏன் உங்களுக்கு ஒரு ரெஸ்பெக்ட் குடுத்து பேசிக்கொண்டிருக்கிறேன் என்றால் உங்களுடைய படைப்புக்கள் சிலவற்றின்மீது எனக்கு ஒரு மரியாதை ஏற்படுகுது. மற்றது உங்களோடை பேசக் கூடியதாக இருக்குது. மற்றது சீரியசாக இலக்கியத்தைப் பார்க்கிற ஒரு தன்மையை நான் உங்களிடத்திலை கண்டனான். அதனாலைதான் நாங்கள் இன்றைக்கு சில விஷயங்களைப் பகிர்ந்து கொள்கிறம். அப்பிடிப் பார்க்கும்போது இடதுசாரிகளும், மற்றது தீவிரமான கலைமீதான அக்கறை உள்ளவர்களும் உங்கள்பாலான விமர்சனத்தை என்னமாதிரி முன் வைச்சாங்க. அந்த விமர்சனத்தை நீங்கள் எப்படி எதிர்கொள்றீங்க. அதிலை உள்ள நியாயங்களைப்பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க.

**திலகவதி:**

நீங்கள் கேட்கிற கேள்விக்கு நான் வந்து மூன்று தளங்களில இருந்து பதில் சொல்லணும். முதலாவதாக நான் எழுதுறன் அப்படீன்னு சொல்லும்போது நான் ஒரு அதிகாரியாக இருக்கிறேன், ஒரு காவல்துறை அதிகாரியாக இருக்கிறேன் என்கிற விஷயம் இருக்குதுதானே, இது வந்து ஒரு மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. It gains a gigantic proportion. நான் ஒரு எழுத்தாளர் அப்படீன்னு சொல்றதைக் காட்டிலும், நான் ஒரு காவல்துறை அதிகாரி என்கிறதைத்தான் என்னுடைய முகவரியாக அவங்க புரிஞ்சுக்கிறாங்க. விமர்சகர்களில் பலபேர் அப்படித்தான் புரிஞ்சுகிட்டு இருக்காங்க. அந்தப் படைப்புகளுக்குள் போகாமல்கூட இவங்க எழுத்தாளராக இருக்கிறாங்கன்னா என்ன காரணம் அப்படீன்னு சொல்லி, இவங்க வந்து பதவியில இருக்கறத்தினால இவங்க எழுதுற எதையும் பிரசுரிக்கறத்துக்கும், வெளியிடுறத்துக்கும் ஆக்கள் தயாராக இருக்காங்க. பிரசுரிக்கறத்துக்கும் வெளியிடுவதற்கும் காரணம் படைப்புத் தன்னளவில் இலக்கியமாக இருக்கிறதில்ல, இவங்க ஒரு பதவியில இருக்கறதுதான் அதற்குக் காரணம்.

இது வந்து, இலக்கியத்தில் பல பிரிவுகள் இருக்குப் பாருங்க பெண்ணியம், தலித்தியம் என்று. அதுமாதிரிப் பதவி இலக்கியம் என்று ஒன்று இருக்கு. இது முத்திரையிடப்படாத ஒரு பெயர். அதாவது இவங்க பெரிய பதவியில இருக்காங்க, எழுதினாக்க சில பக்கங்களை ஒதுக்கிறது, இந்தமாதிரிப் பழக்கம் ஒன்று இருக்கிறது. அதனால இவங்க எழுதுகிற எழுத்தும் வெளிவருகிறது. அப்படீன்னுட்டு தீவிரமான இலக்கிய விமர்சகர்கள் பலபேர் நினைச்சுக்கிறாங்க. பதவின்னாலும்கூட, நீங்க வந்து ஒரு கல்லூரிப் பேராசிரியராக இருக்கலாம், அல்லது யூனிவர்ஸிடியில் ஒரு ஆராய்ச்சியாளராக இருக்கலாம், அல்லது உளவுத்துறையில் வேலை பண்ணலாம், நீங்க வந்து வருமான வரித்துறை ஆபீசராக இருக்கலாம், இந்திய நிர்வாகத்துறை அதிகாரியாக, கலெக்டராக இருக்கலாம். அதையெல்லாம் மன்னிக்கத் தயாராக இருக்காங்க. ஆனால், ஒரு காவல்துறை அதிகாரி எழுதுறது இருக்கிறது பாருங்க அதை மன்னிப்பதற்கு அவங்க தயாராக இல்லை. அவங்களுடைய எளிமையான விளக்கம் என்னன்னு கேட்டீங்கன்னாக்க காவல்துறை அதிகாரிங்களுக்கு இதயமே கிடையாதுங்கறது. அப்ப இதயமே இல்லாதவங்க எப்பிடி வந்து இலக்கியம் பண்ணமுடியும். அப்படீங்கிறதை ஒரு விமர்சனமா வைச்சுக்கிறாங்க. இது ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம் வந்து எப்படி இவங்க காவல்துறை வேலை செய்யும்பொழுது இலக்கியத்துக்கெல்லாம் இவங்களுக்கு எப்படி நேரம் இருக்கும், அதுவும் ஒரு விஷயமா இருந்துது.

இன்னொன்று சிலபேர் உண்மையாகவே படிச்சிட்டு படைப்பு நல்லாக இருக்குது, நல்ல கருத்துச் சொல்லுது, நல்ல மொழிநடை உங்களுக்குக் கைவந்திருக்குது, உத்தி கைவந்திருக்குது, வடிவம் நல்லா வந்திருக்குது. இப்படி எல்லாம் பேசக் கூடியவங்ககூட அந்த மாதிரியான விமர்சனங்களை என்னை எங்காவது தனியே பார்க்கும்போது (கூட்டங்களிலே, நிகழ்ச்சிகளிலே) வாய்ச் சொல்லாகச் சொல்லுவாங்களே தவிர, இதே நபர்கள் எழுத்து அப்படீன்னு வரும்போது இந்த விஷயங்களைப் பதிவு செய்வதற்கு முன் வருவதில்லை. இது எதனாலைன்னு கேட்டாக்க, இதைச் சொன்னாக்க



**"அப்பாவினுடைய விருப்பத்துக்கு விரோதமாகத்தான் நான் காவல்துறை அதிகாரியாக ஆனேன். காவல் துறை அதிகாரியானத்துக்குப் பதிலாக நான் நீதித் துறைக்குப் போயிருந்தேன்னாக்க அவரு ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பாரு."**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னிடம் இருந்து சில சலுகைகளைப் பெறுவதற்காகத்தான் இதைச் சொல்றாங்க அப்படீன்னு தங்கள் மேல ஒரு பழி வந்துவிடுமோன்னு ஒரு கூச்சம். அப்படி ஏதாவது ஒரு காரணத்தினாலேயோ தெரியல, அதாவது தனிப்பட்ட முறையில எவ்வளவு பாராட்டினாலும்கூட எழுத்தில அதைப் பதிவு செய்யறத்துக்கு அவங்க ஒரு பொழுதும் முன் வந்ததில்ல.

இன்னொரு விமர்சனம் என்னன்னு கேட்டாக்க, வெகுஜனப் பத்திரிகையில எழுதுகிறேன் அப்படீங்கறது ஒரு பெரிய குற்றச்சாட்டு. தீவிரமான ஒரு எழுத்தாளரா இருந்தாக்க இவர் எப்படி வெகுஜனப் பத்திரிகைகளுக்கு எல்லாம் எழுதப் போகலாம்?

ஒரு முறை வந்து, ஒரு சிறு பத்திரிகையாளர் ஒரு தொகுதி தயாரிச்சார். அந்தத் தொகுதிக்கு ஒரு மொழிபெயர்ப்புத் தேவைப்பட்டது. அதுக்கு முன்னாலேயே நான் என்னுடைய மொழிபெயர்ப்புகள் சிலவற்றை வெளியிட்டிருந்தேன். சாகித்ய அகாடமியும் ஒரு மொழிபெயர்ப்பை வெளியிட்டிருந்தது. ஆகவே நான் ஒரு மொழிபெயர்ப்பாளராகவும் அறியப்பட்டிருந்தேன். இந்த சூழ்நிலையில இந்த ஆசிரியர்குழுக் கூட்டத்தில இந்த மொழிபெயர்ப்பை நாம திலகவதியைச் செய்யச் சொல்லாம் என்று சொல்லி ஒருவர் சொன்னபோது மற்ற நாலு பேரும் அதைக் கடுமையாக எதிர்த்தாங்க. அப்ப அவங்க வைச்ச ஒரே ஒரு விஷயம் என்னன்னாக்கா, அவங்க வந்து வெகுஜனப் பத்திரிகையிலை எழுதுறவங்க. ஆகவே அவங்கள நாம சிறு பத்திரிக்கை உலகத்துக்குள் கொண்டு வரவே கூடாது. தீவிர இலக்கியவாதி என்கிற கணக்கில நாம அவங்கள எடுத்துக்கொள்ளவே கூடாது. அப்படீங்கறது மாதிரியான ஒரு விமர்சனம்.

எல்லாவற்றையும்விட அடிப்படையாக, பெண்கள் செய்யக்கூடிய எந்த ஒரு விஷயமும் அது எந்த முக்கியத்துவத்தைப் பெறவேண்டுமோ அந்த முக்கியத்துவத்தைப் பெறுவது கிடையாது. இது வந்து எழுத்துத்துறையிலை மட்டும் கிடையாது. எல்லாத்துறையிலும் இருக்கக்கூடிய எல்லாவிதமான வேலைகளுக்கும் இது பொருந்தும். கொத்தனார், சித்தாள் வேலையில இருந்து அதிகப்படியான வருமானத்தைப் பெறுகிற சினிமாத்துறைவரை நீங்க பார்த்தீங்கன்னாக்க அதேவேலையை ஒரு ஆண் செய்கிறபோது அது பெறுகின்ற மதிப்பும் கவனமும் வேற. அதையே ஒரு பெண் செய்தா அது பெறுகிற மதிப்பும் கவனமும் வேற.

இன்னொன்னு இன்னிக்குத் தமிழகத்தில எழுதிக் கொண்டிருக்கிற பல எழுத்தாளர்கள் ஏதாகிலும் ஒரு வட்டத்தைச் சார்ந்தவங்களா இருப்பாங்க. ஒண்ணு கொங்கு வட்டம், கரிசல் வட்டம், கணையாழி வட்டம், சிற்றிலக்கிய வட்டம் இப்படி இருக்கும் அல்லது ஜாதியைச் சேர்ந்த வட்டங்களாக இருக்கும் அல்லது கட்சியைச் சேர்ந்த வட்டங்களாக இருக்கும். இந்தமாதிரி எந்த வட்டங்களுக்குமே இணங்காதவள் நான். எந்த வட்டங்களுக்குள்ளேயுமே என்னை இருத்திக் கொள்ள என்னால் முடியவில்லை. அதனால ஒரு பரஸ்பரமாக முதுகு சொறியறத்துக்கான ஆளை என்னால கண்டுபிடிக்க முடியல.

மத்தவங்க எல்லாம் என்ன செய்வாங்கன்னா ஒரு குழுவாக இருந்துகொண்டு ஒருத்தர் எழுதுவாரு இன்னொருத்தர் பாராட்டுவாரு. இதுமாதிரி tailored சமாச்சாரம் ஒன்று நடந்து கொண்டிருக்கும். அதுமாதிரி எல்லாம் செய்ய என்னால முடியல.

இவ்வளவையும் தாண்டி பொதுவான விமர்சகர்கள் இந்து பத்திரிகையில, தினமணிக்கதிரில், சுபமங்களாவில விமர்சனங்கள் வந்தது. அப்படியான விமர்சனங்களை முகம் தெரியாத நபர்கள் செய்தபோது சிலபேர் என்னுடைய கதைகளைச் சரியானபடி விமர்சித்திருக்காங்க.

அவ்வளவுதானே தவிர மற்றப்படி என்னோடை சமகாலத்தில எழுதத் தொடங்கிய எழுத்தாளர்களுக்குக் கிடைத்த ஒரு விமர்சன பூர்வமான வரவேற்பு, என்னுடைய எழுத்துக்கு தகுதியான ஒரு ஆக்க பூர்வமான விமர்சனம் கிடைக்கவில்லை என்கிற ஒரு விஷயம் உண்மை. அது எப்போதாவது சில சமயங்களில எனக்கு வந்து சங்கடமான விஷயமாக இருந்தாலும்கூட, நான் வந்து இதையெல்லாம் எதிர்நோக்கி நிற்கக்கூடாது, எதிர்பார்த்து நிற்கக் கூடாது, யாருடைய பாராட்டையும் கருதி நான் எழுதக்கூடாது என்று நினைத்துக் கொள்வேன். எழுதுவதென்பது எனக்கு ஒரு பயிற்சி மாதிரியாக இருக்குது.

என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நான் பல காயங்களைப் பட்டிருக்கிறேன். அப்புறம் தனிமை எனக்கு வாய்த்த விஷயமாக ஆகிவிட்டது. அதில எனக்குத் தெரிஞ்சிருக்கிற ஒரே ஒரு கலை எழுதுவது மட்டும்தான்.

எழுதுவதும் எழுதுவதற்காக என்னைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கு படிப்பதும் மனிதர்களைச் சந்திப்பதும் இதுதான் என்னுடைய வாழ்க்கை முறையாக இருக்கிறது. அதனால அவங்க பாராட்டினாலும் சரி. அவங்க கண்டிச்சாலும் சரி. அவங்க ஏற்றுக்கொண்டாலும் சரி அவங்க அங்கீகரிக்காவிட்டாலும சரி. என்னுடைய வேலையை நான் செய்கிறேன்.

(மிகுதி அடுத்த இதழில்....)

**"பகத்சிங் வந்து என்னைச் சிறுவயதில் ரொம்பவும் ஈர்த்த ஒரு மனிதர். அதேபோலவே வந்து சுபாஸ் சந்திர போஸ்ஐயும் சொல்லுவேன். சேகுவேராவை ஏன் பிடிக்குதென்னாக்க அவர் தொடர்ந்து ஒரு போராளியாகவே இருக்கிறாரு."**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## 1.

ராட்சதச் சக்கரங்களுக்குள் நாழிகையாகும் நாட்கள்
மாறுதல்களோடு மனிதர்கள்
பெருவட்டங்களை விலக்கி
தன்னை நோக்கியே
ஓடுகின்றான்
சிறுவட்டத்தை சுற்றி சுயநலச் சுவர்கள்
உலகம் உறவுகள்
அவனை எட்டி தூரத்தே நிற்க
சுருங்கிய மனதிற்குள்
எரியும் மெழுகுவர்த்தி

நம்பிக்கைகள் முறிந்து போக
வாழ்க்கை போராட்டங்கள்
மனதிற்குள் போர் தொடுக்க
தனிமை இருள்
ஒடுங்கிக் கொள்ளும்
மெழுகுவர்த்தி.

## 2.

வெளுப்புகள் இல்லாமல் எங்குமே கருமை
நெருக்கங்கள் அற்று சிதறிக் கிடந்தன
வெள்ளித் தகடுகள்
அசைவுகள் அற்றுக் கிடந்த மேகங்களுக்குள்
விழித்துக் கொண்டிருந்தது நிலவு
நினைவுகள் எதுவுமின்றி
இயல்புகள் மறந்து
எல்லாமே.

ஆசைகள்
ஆவேசங்கள்
எதிர்பார்ப்புகள்
ஏமாற்றங்கள் எதுவுமின்றி
மனமும்.


தனிமையின் கதறல்களையும்
காதலின் கண்ணீரையும்
தேக்கி இறுகியிருந்த மேகங்களின் நடுவே
பூமியை நோக்கி
விழுந்து கொண்டிருந்தது
ஒற்றைச் சிறகொடிந்த குருவி ஒன்று

அவன் காதல் சொல்லிக் கொண்டிருந்தான்
இன்னொரு இதயத்திடம்.

www.tamilarangam.net

# நினைவுச் சின்னங்களின்மீது

## ஒரு துளி குருதியா? அல்லது ஒரு சிறு மலரா?



நினைவு கொள்ளலும், நினைவு அழிதலும், நினைந்து அழுதலும் நினைவுகளை அழித்து விடுவதும் ஒன்று மாறி ஒன்றாக அல்லது ஒன்றோ டொன்று சமாந்தரமாக நிகழக் கூடியன. ஒரு தேசிய இனத்தின் அல்லது ஒரு தேசியத்தின் அடையாளங் களை உருவாக்குவதிலும் கட்டமைப்பதிலும் அல்லது உருவழிப்பதிலும் கூட இவற்றுக்கு ஒரு முக்கியமான பங்கு உள்ளது.

நவம்பர் மாதம் மாவீரர்கள் வாரம் ஈழத்தவர் வாழும் இடங்களில் எல்லாம் கொண்டாடப்படுவதால் நினைவு, மறதி, தேவையானவற்றை மட்டுமே தெரிந் தெடுத்து நினைவு கொள்வது போன்ற விடயங்கள் எவ்வாறு தமிழ்த் தேசியத்தை உருவாக்குவதில் முக்கியமான பங்கு என்பதைப் பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதாகும்.

யூத மக்களுடைய அடையாளம், இஸ்ரேலுடைய அரச அடையாளம் என்பன ஹிட்லர் நிகழ்த்திய யூத இனப்படுகொலை எனும் பேரூழி (Holocaust)யுடன் தொடர்புபடுத்தப்படுகிற ஒரு நினைவு கொள்ளல் எனலாம். இஸ்ரேலியருடைய அடையாள உருவாக் கத்தில் இப் பேரூழியும் பின்னர் 1948இல் இஸ்ரேல் எனும் நாட்டின் உருவாக்கமும் அதன் பின்னரான யுத்தங்களும் அவற்றின் விளைவாக உருவான தியாகங்களும் தொடர்ந்தும் கிரமமான முறையில் நினைவு கொள்ளப்பட்டு ஆண்டுதோறும் கொண்டா டப்படுகின்றன. இந்த நினைவு கொள்ளலில், பலஸ்தீனமும் பலஸ்தீனிய மக்களது அகதி வாழ் விலும் இழப்பின் கொடூரத்திலேயுமே இஸ்ரேலிய அடையாளம் கட்டப்பட்டுள்ளது என்பதை இஸ்ரேல் அரசும் இஸ்ரேலின் தேசியவாதிகளும் சியோனிஸ்டு களும் மறைத்து விடுவார்கள். தமது பாடசாலை களிலும் விழாக்களிலும் தமது மாவீரர் தினக் கொண்டாட்டங்களிலும்கூட எல்லாம் இழந்தவர் களாகவும் வரலாற்றில் வஞ்சிக்கப்பட்டவர்களாக வும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்படுகிற அப்பாவித் தேசியமாகவுமே இஸ்ரேல்-யூத அடையாளம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள், துன்புற்றோர் என்றால், எம்மால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய எமது நிலைப்பாடு என்ன?"**

வடிவமைக்கப்பட்டு தலைமுறை தலைமுறையாக திணிக்கப்படுகின்றது.

இந்த வரலாற்றை ஈழத்தமிழர்கள், குறிப்பாக புலம்பெயர்ந்த/புகலிட ஈழத்தமிழர்கள் கவனத்துடன் பரிசீலிப்பது அவசியமானதாகும்.

ஆண்டுதோறும் நாம் நினைவுகொள்ள நிர்ப்பந் திக்கப்படுவது என்ன?

ஜுலை மாதம் 'கறுப்பு' ஜுலை, பின்னர் கரும் புலிகள் தினம், அன்னை பூபதி நினைவு தினம், தியாக திலீபன் நினைவு தினம், மாவீரர் வாரம், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாள் என்பன முக்கியமானவை. கூடவே சிவகுமாரன் நினைவும் மாணவர் அமைப்புகளால் இப்போது நினைவு கொள்ளப் படுகின்றது.

## சேரன்

இந்த நிகழ்வுகளின் வரலாற்று முக்கியத்துவம் பற்றியோ அல்லது இவற்றை நினைவு கொள்வதில் உள்ள சாதக, பாதக அம்சங்கள் பற்றியோ கேள்வி எழுப்புவது இப்போது என்னுடைய நோக்கம் அல்ல. மாறாக, ஈழத்தமிழர் அல்லது ஈழத் தமிழ்த்தேசியம் என்பதை உருவகப் படுத்துகிறபோது வேறு பல முக்கியமான வரலாற்று அம்சங்களை நாங்கள் ஏன் வசதியாக நினைவு கொள்ள மறந்துவிட்டோம் என்பதையே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக, ஜுலைப் படுகொலைகளின் போது நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள், துன்புற்றோர் என்றால், எம்மால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய எமது நிலைப்பாடு என்ன?

காத்தான்குடியிலும் கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் முஸ்லிம் மக்கள் படுகொலைகள், முஸ்லிம் மக்களை வடக்கில் இருந்து விரட்டி அடித்தமை, நமக்குள்ளே 'மறைவாக' இடம்பெற்ற உட்படு கொலைகள் போன்றவற்றின் இடம் என்ன? நினைவு கொள்வதிலும் நினைந்து அழுவதிலும்கூட தெரிந்து எடுத்து சிலவற்றை மட்டும்தான் நாம் நினைவு கொண்டு கொண்டாடுவதா? இந்தக் கேள்விகளை நான் எழுப்ப



இன்னுமொரு தூண்டுகோலாக அமைந்தது அண்மையில் நான் வாசித்த James E Young என்பவருடைய At Memory's Edge: After Images of the Holocaust in Contemporary Art and Architecture (நினைவுகளின் விளிம்பில் - சமகாலக் கலைகளிலும் கட்டிடக் கலையிலும் பேரூழிக்குப் பின்பான படிமங்கள்) என்னும் நூலாகும். ஜேம்ஸ் யங், மசாச்சூசெட்ஸ் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் மற்றும் யூதவியல் கற்கைக்கான பேராசிரியராக இருக்கிறார். யூதப் படுகொலைகளை நினைவு கொள்ள அமைக்கப்பட்டுள்ள பல்வேறு நினைவுச் சின்னங்கள்பற்றிய அவருடைய விமர்சனரீதியான ஆய்வு. The Texture of Memory (நினைவுகளின் இழைப்பின்னல்) என்று வெளியாகி இருக்கிறது. நினைவுகளும் மறதியும் உத்தியோக பூர்வமாக நினைவு கொள்ளப்படுவதும் கொண்டாடப்படுவதும் உத்தியோக பூர்வமாக மறக்கப்படுவதும் எவ்வாறு வரலாற்றிலே தேசிய அடையாளங்களை உருவாக் குகின்றன, தீர்மானிக்கின்றன என்பது பற்றிய ஆய்வுகளில் யூதர்கள்/இஸ்ரேலியர்கள் தொடர் பான விடயங்களில் குறிப்பிடத் தகுந்த நூல்கள் வெளியாகியுள்ளன. இவற்றை holocaust industry (பேரூழியின் நினைவுத் தொழிற்சாலை!) என்று இன்னொரு விமர்சகர் கேலியாகக் குறிப்பிடுவார்.

நமது மாவீரர் வாரக் கொண்டாட்டங்களும் புலம்பெயர்ந்த/ புகலிடச் சூழலில் ஒரு நினைவுத் தொழிற்சாலையாகத்தான் மாறிவிட்டதோ என்று ஐயுற வேண்டி இருக்கின்றது. தேசியத் தலைவரின்

**"இதுவரை கால வரலாற்றில் எந்த நாடுமே அல்லது எந்தத் தேசியமுமே தனது குற்றங்களையும் தான் இழைத்த அநியாயங்களையும் குருதி படிந்த தனது கரங்களையும் நினைவு கொண்டு மனம் வருந்துவதைத் தனது தேசிய அடையாளமாகவும் மனச்சாட்சியாகவும் உருவாக்கியதில்லை. எனவே, தன்னால் பாதிக்கப்பட்டவர்களை ஒரு தேசம் அல்லது ஒரு தேசியம் எவ்வாறு நினைவு கொள்வது?"**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"இந்த நினைவு கொள்ளலில், பலஸ்தீனமும் பலஸ்தீனிய மக்களது அகதி வாழ்விலும் இழப்பின் கொடூரத்திலேயுமே இஸ்ரேலிய அடையாளம் கட்டப்பட்டுள்ளது என்பதை இஸ்ரேல் அரசும் இஸ்ரேலின் தேசியவாதிகளும் சியோனிஸ்டுகளும் மறைத்து விடுவார்கள்."**

படங்கள், அவருடைய படம் போட்ட மணிக்கூடுகள், புலி இலச்சினை பொறித்த நினைவுச் சின்னங்கள், சங்கிலிகள், பதக்கங்கள் என்று வியாபாரம் தூள் கிளப்புகிறது. மாவீரர்களை நினைவு கொள்வது என்ற பெயரில் வீரத் தேசியத்தின் உருவாக்கமும் அதனுடைய விற்பனையும் நடக்கிறது. இந்த அம்சத்தில் இஸ்ரேலும் சியோனிஸ்டுகளும் எங்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்துவிட்டார்களோ என்று எனக்கு அச்சமாக இருக்கிறது.

இதேவேளை, யூத இனப் படுகொலைகளுக்கும் பேரழிக்கும் பொறுப்பான ஜேர்மானியர்களுடைய நிலை என்ன? அவர்களுடைய தேசியத்தின் மனச்சாட்சி எப்படி வேலை செய்கிறது? தமது அடையாளத்திலும் வரலாற்றிலும் படிந்துவிட்ட பெரும் இரத்தக்கறையை அவர்கள் துடைத்தெறிந்து விட்டார்களா? அல்லது துடைத்தெறிய முற்பட்டார்களா அல்லது துடைத்தெறியத்தான் முடியுமா? இத்தகைய முக்கியமான கேள்விகளை ஜேம்ஸ் யங் இனுடைய நூல் எழுப்புகிறது. இத்தகைய கேள்விகளை நாங்களும் எழுப்பித்தான் ஆகவேண்டி இருக்கிறது.



ஐரோப்பாவில் படுகொலை செய்யப்பட்ட 60 இலட்சம் யூத மக்களுக்கான நினைவுச் சின்னம் ஒன்றை அமைப்பதற்கான போட்டி ஒன்றை 1995இல் ஜேர்மனி அரசு ஏற்பாடு செய்திருந்தது. கட்டிடக் கலைஞர்கள் பலர் ஏராளமான நினைவுச் சின்ன மாதிரிகளைப் போட்டிக்கு அனுப்பி இருந்தனர். அவைபற்றிய குறிப்புக்களையும் விபரங்களையும் கூட ஜேம்ஸ் யங் தன்னுடைய நூலில் தருகிறார். நினைவு கொள்ளலுக்கும் ஞாபகங்களுக்கும் வரலாற்றுக்கும் இடையே ஏற்படுகிற விசித்திரமான உறவு பற்றியதே இந்த நூல் என்று தோன்றுகிறது.

நினைவுச் சின்னங்கள் அமைப்பதென்பது ஒரு கருத்தியல் மட்டுமல்ல அது பரவலான நடைமுறையாகவும் இருந்து வருகிறது என்பதையும் காலம் தோறும் நினைவுச் சின்னங்கள் எவ்வாறு மாற்றமடைந்து வருகின்றன என்பதையும்நூலின் முக்கியமான ஒரு அத்தியாயமான 'நினைவுகள், எதிர் நினைவுகள் மற்றும் நினைவுச்சின்னங்களின் முடிவு' என்னும் அத்தியாயத்தில் ஜேம்ஸ் யங் விளக்குகிறார். எதிர் நினைவுகள் என்று நான் இங்கு புரிந்து கொள்வது குறிப்பிட்ட ஒரு நினைவில் மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட அம்சங்களை வெளியே கொண்டு வருவதாகும். உதாரணமாக, பண்டாரவளை, பிந்துனுவெல சிறைப் படுகொலைகளைக் கண்டித்து நினைவு கொள்கிறபோது வெலிக்கடைப் படுகொலை, களுத்துறைப் படுகொலைகள் இரண்டையும் நாம் எல்லாரும் பரவலாக நினைவு கூருகிறோம். இந்தச் சிறைப்படுகொலைகள் மட்டுமே தமிழ் ஊடகங்களில் பேசப்படுகின்றது. ஆனால் கந்தன் கருணைப் படுகொலைகள், துணுக்காய் சிறைப் படுகொலைகள் என்பவற்றை நாம் வசதியாக மறந்துவிடுகிறோம். இவற்றை நினைவுகொள்ள வேண்டும் என்று நான் கேட்கிறபொழுது அது எதிர்நினைவு ஆகிறது எனலாம்.

19ம் நூற்றாண்டு வீர நினைவுச் சின்னங்களையும் சமகால வீர நினைவுச் சின்னங்களையும் ஒப்பிடுகிற பொழுது தெரிய வருவதாக ஜேம்ஸ் யங் குறிப்பிடும் ஒரு அவதானம் முக்கியமானதாகும்: 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் வீரத்தைக் கொண்டாடுபவையாகவும் தனிநபர் வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையாயும் தேசியத்தின் வெற்றியைப் பிரபலப்படுத்துவனவாயும் அமைந்திருந்தன. எனினும் இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது. வீரவழிபாட்டுக்கு எதிரானதாகவும் முரண்நகை நிறைந்ததாகவும் சுயவிமர்சனம் செய்பவையாகவும்தான் இபபோது நினைவுச் சின்னங்கள் அமைந்துள்ளன என்கிறார் ஜேம்ஸ் யங்.

20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சி பெற்றிருந்த பின்நவீனத்துவமும் (இந்த எழுச்சி ஆரம்பத்தில் கட்டிடக்கலையோடுதான் தொடங்கியது) அதனுடைய முக்கியமான அம்சங்களுள் ஒன்றான 'நிச்சயமின்மை' என்பதும் இந்த மாற்றத்

**"மாவீரர்களை நினைவு கொள்வது என்ற பெயரில் வீரத் தேசியத்தின் உருவாக்கமும் அதனுடைய விற்பனையும் நடக்கிறது. இந்த அம்சத்தில் இஸ்ரேலும் சியோனிஸ்டுகளும் எங்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்துவிட்டார்களோ என்று எனக்கு அச்சமாக இருக்கிறது."**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திற்கான பகைப்புலம் என்று கருதுகிறார் அவர். யூதஇனப் படுகொலைகளை நினைவுகொள்ளும் வகையிலான தேசிய நினைவுச் சின்னம் ஒன்றை ஜேர்மனியில் அமைப்பது தொடர்பாக இரண்டு போட்டிகளை ஜேர்மனி அரசு நடத்திற்று. அவ் விரண்டு போட்டிகளிலும் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய நினைவுச் சின்ன மாதிரிகளில் இருந்து ஒன்றைத் தெரிவு செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஒரு குழுவில் ஜேம்ஸ் யங் உம் உறுப்பினராக இருந்தார். அவருடைய அந்த அனுபவம் நூலுக்கு வளம் சேர்க்கிறது.

ஜேம்ஸ் யங் எதிர்நோக்கிய முக்கியமான சிக்கல் என்னவென்றால், இதுவரை கால வரலாற்றில் எந்த நாடுமே அல்லது எந்தத் தேசியமுமே தனது குற்றங்களையும் தான் இழைத்த அநியாயங் களையும் குருதி படிந்த தனது கரங்களையும் நினைவு கொண்டு மனம் வருந்துவதைத் தனது தேசிய அடையாளமாகவும் மனச்சாட்சியாகவும் உருவாக்கியதில்லை. எனவே தன்னால் பாதிக்கப் பட்டவர்களை ஒரு தேசம் அல்லது தேசியம் எவ்வாறு நினைவு கொள்வது?

ஜேர்மனியைப் பொறுத்தவரை இந்தக் கேள்வியை அது நீண்டகாலமாகக் கேட்டு வருகிறது மட்டுமல்ல, குந்தர் கிராஸ், ஸிக்ஃபிரீட் லென்ஸ் போன்ற முக்கியமான ஜேர்மன் எழுத்தாளர்களும் கலைஞர்களும் இதற்கான விடையையும் அளித்து விட்டார்கள். தமது குற்றங்களை ஒப்புக்கொள் ளாமல் வரலாற்றை நாம் நினைவுகொள்ள முடியா தென்பதே அது. யூத, யப்பானிய, சீன மற்றும் சிங்களத் தேசியங்கள் இந்தக் கேள்வியைக்கூட இன்று எழுப்பத் தயாராக இல்லை.

இன்று பாதிக்கப்பட்டவர்களாக தமிழ்த்தேசியம் பேசுகிற எல்லோரும் தம்மையும் தமது மனச்சாட்சி யையும் பார்த்து ஒரு கேள்வி கேட்கவேண்டி இருக்கின்றது.

தமிழ்த்தேசியத்தின் பலிக்கடாக்களுக்கான நமது தேசியச் சின்னம் என்ன? ☯

---

# -20

**மாரிமுத்து யோகராஜன்**

காணவில்லை !
காணவில்லை !
காணவில்லை !

நீ கண்டாயா ?
அவன் கண்டானா ?
அவர்கள் கண்டார்களா ?

இல்லவே இல்லை
காணவில்லை !

ஒன்று இரண்டா ?
இருபது ஆச்சே....

இரண்டு தசாப்தங்கள்
என்ன நடந்தது ?

நான் சொல்கிறேன் :

நீ யார் ?

'இரண்டாயிரம் சய இருபது'

என்றால் யார் ?

அது என் பெயர்.

சொல் பார்க்கலாம் ?

அந்த இருபது வருடமும்
இருட்டறை வாழ்க்கை.
கொஞ்சம் கொஞ்சம்
குண்டு விழும் சத்தம்.

இன்னும் கொஞ்சம்
பிணக்குவியல்.

மிகுதி அகதி ! ☯



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோய் காவிகளும் முழித்திருக்கும் ஆந்தைகளும்

சி.புஸ்பராஜா

மிக நிதானமாக அந்த வளைவில் திரும்பி கார் தரிப்பிடத்தை நோக்கியபொழுது மனதில் மகிழ்ச்சியாகவிருந்தது. அங்கே நிறைய இடங்களிருந்தது. வழக்கமாக அந்த இடத்தில் கார் நிறுத்த இடம் கிடைப்பதே பெரும் கஷ்டமான விடயம். ஆனால் இன்று அப்படியில்லாதிருந்தால் மகிழ்ச்சியாகத்தானேயிருக்கும். பக்குவமாக அங்கு விடுவதா, இங்கு விடுவதா எனத்தடுமாறி ஒரு இடம் மனதுக்குத் திருப்தி தர அங்கு காரை நிறுத்தி பூட்டித் திறப்பை எடுத்துக் கொண்டேன். கொஞ்சத்தூரம் நடந்திருக்க மாட்டேன். திரும்பவும் காரை நெருங்கி கண்ணாடிகள் ஒழுங்காகப் பூட்டப்பட்டுள்ளதா - கதவுகள் நன்றாகப் பூட்டப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தி, மனத் திருப்தியுடன் மீண்டும் நடக்கத் தொடங்கினேன்.

எனது நண்பன் வசிக்கும் அந்தத் தொடர்மாடியின் பிரதான கதவைத் திறந்து கொண்டு உள்ளே போன பொழுது லி∴ப்ட் பழுதாகியிருந்தது. ஆறு மாடி ஏற வேண்டும், சலிப்பு ஏற்படத்தான் செய்தது. ஆனாலும் எனது நிலைமையில் இன்று ஐம்பது மாடியானாலும் ஏறியே ஆக வேண்டும். மனிதனின் முடிவுகளை சூழ்நிலையே தீர்மானிக்கின்றது.

எனது சூழ்நிலை என்னைத் தீர்மானிக்க வற்புறுத்துகிறது என்பதே உண்மை. உடலுக்கு களைப்பு ஏற்படாவண்ணம் மிக மெதுவாக மாடியில் ஊரத் தொடங்கினேன். மிக நம்பிக்கையுடன் மாடிப்படிகளை காலால் தள்ளிக் கொண்டிருந்தேன், மனதுக்குள் வருத்தமாக அல்லது உறுத்தலாக அல்லது இரண்டுமாகவிருந்தது. இப்படி ஒரு நிலை அடிக்கடி எல்லோருக்கும் ஏற்படுவதுதான் என நினைக்கிறேன், ஆனால் இந்த அந்நியநாட்டு வாழ்வில் எனக்கு முதல் தடவையாக ஏற்பட்டதால், பழக்கமில்லாததால் கொஞ்சம் சமாளிக்கமுடியாமல்த்தான் உள்ளது. விடயம் பெரிதாக ஒன்றும் இல்லை.

கடந்த இரண்டு வருடங்களாக வேலையில்லாததால் அரசாங்கப் பண உதவியுடன் மட்டும் காலம் தள்ள முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறேன். இந்த நாட்டுக்கு வந்த நாள் தொடக்கம் வேலையில்லாமல் எப்பவும் இருந்ததில்லை.

கை நிறையச் சம்பளம் - கடனில்லா வாழ்க்கை எனப் பழக்கப்பட்டுப் போனதால் திடீர் என ஏற்பட்ட மாற்றத்தை முகம் கொடுக்க பழக்கமில்லாமல் போய்விட்டது.

வந்த வருமானத்தில் மனைவி, பிள்ளைகளின் தேவைகள் அது இது என்று சமாளிக்க முடியாமல் போனதால் கடந்த ஆறு மாதங்களாக வீட்டு வாடகை கட்ட முடியாமல் போய்விட்டது.

நினைக்கவே வேதனையாக இருக்கிறது. வீட்டு முதலாளி கடைசியாக வந்தபொழுது கத்தோ கத்தெனக் கத்தி விட்டான். அயல் வீடு, முன்வீடு என பல இனக் குடும்பங்களுக்கும் எனது வக்குத் தெரிந்து விட்டது. மானம் பறிபோனமாதிரி, நிர்வாண நிலையாக உணர்ந்தேன். வீட்டை விட்டே வெளியே வர கூச்சமாக - உடல் கூனிக் குறுகிக்கொண்டது.

இரண்டு நாட்களுக்குள் வாடகை தந்துவிட வேண்டும் அல்லது மரியாதையாக வீட்டைக் காலி பண்ணவேண்டும் எனக் கூறிய வீட்டு முதலாளி தனது மொழியில் (அவன் ஒரு யூதன்) ஏதோ ஏசிக்கொண்டு போனான். என்ன பேசியிருப்பான்? தூசண வார்த்தைகளால் திட்டியிருப்பானா? அல்லது திருட்டுப்பயல் என திட்டியிருப்பானா...? இப்படி பல கற்பனைகள் வளர கோபமும் வெட்கமும் கழுத்தை நெரித்துக் கொண்டது.

நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாக வேண்டும்போல் தோன்றியது. ஏதோ தெரியவில்லை மனைவியின் முகத்தைப் பார்க்கவே வெட்கமாகவிருந்தது. மனதுக்குள் என்ன நினைப்பாளோ, வேலைவெட்டியில்லாதவன் என நினைப்பாளோ? வெட்கமில்லாத சோப்பளாங்கி என நினைப்பாளோ...? ஆனால் எப்பவும் போல்த்தான் அன்பாக இருக்கிறாள். எனக்குத்தான் மண்டைக்குள் கிறுகிறுப்பு ஏற்பட்டு விட்டது.

சொந்தம் பந்தம் உற்றார் உறவினர் ஊரார் என வாழ்ந்த வாழ்வைத் தொலைத்துவிட்டு இங்கு முகமறியாத் தேசத்தில் வெறும் இயந்திரமாக வாழப் பழக்கப்பட்ட எமக்கு ஒரு பொறி பிழைத்தாலே அனைத்தும் தம்பிதம் என்பதை அறிய நாட்கள் பல எடுக்கத்தான் செய்கிறது. அந்நியதேசம் நோக்கி பரதேசியாக புறப்படும்பொழுதே எமது இன்பங்களை எல்லாம் இறக்கி வைத்து துன்பங்களையே சுமக்க புறப்படுகிறோம் என யாரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்ந்துகொள்வதில்லை.

மடையன்மாதிரி ஒரு சின்னப் பிரச்சனைக்கே நான் இப்படி அலட்டுகிறேன். மற்றவர்கள் போல் பெரிய பிரச்சனைகளில் மாட்டுப் பட்டால் என்னைப்போல் ஒருவன் என்ன பாடுபடவேண்டிவரும்.... பயமாகத்தான் இருக்கிறது.

திடீர் எனத்தான் அந்த யோசனை வந்தது. அட! நம்ம சிவராஜன் நல்லாத்தானே இருக்கிறான் அவனிடம் கேட்டுப் பார்த்தால் என்ன?

"மச்சான் நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை. உன்னைத் தெரியாதே எனக்கு.... நீ கனக்க கதைக்கவேண்டாம். உடனை வா. ஒரு பத்தாயிரம் இருக்கு. மேலும் வேண்டும் என்றால் ஒரு அஞ்சாறு நாளிலை தாறன்.... அது ஒரு கரச்சலுமில்லை. நீ உடனை வரலாம்"

உடலெல்லாம் குளிர்வது போன்ற மகிழ்ச்சி. என்ன செய்வது என்று தெரியாத பதட்டம். தண்ணி குடிக்க வேண்டும்போல் தோன்றியது, வயிறு முட்ட ஊற்றிக் கொண்டேன்.

மனைவியிடம் போகுமிடம் - விடயம் கூறிவிட்டு தட தட எனக் கீழே வந்து காரில் பாய்ந்தேறிக் கொண்டேன். எனது வாய் பாடல் ஒன்றை முணுமுணுத்துக் கொண்டது.

ඊ ඊ ඊ ඊ

நண்பனின் கதவைத்தட்டும் பொழுது மூச்சு வாங்கியது. இரண்டு வருடங்களாக வேலையில்லாது இருப்பதால் உடம்பு சோம்பல் கண்டு விட்டதா? அல்லது உடலில் ஏதாவது வருத்தமா? எதுக்கும் ஒருக்கா டொக்டரைப் பார்க்கவேண்டும். சந்தானத்தையா.... சுப்பிரமணியத்தையா...? அட! சீ இதுவா இப்ப முக்கியம்.

நண்பர் சிரித்த முகத்துடன் கதவைத் திறந்தது மனதுக்கு இதமாக இருந்தது. உள்ளே வரும்படி அழைத்தார்.

உள்ளே பலர் உட்கார்ந்திருந்தார்கள். சிவராஜனின் நண்பர்களாக இருக்க வேண்டும். அதில் யாரையும் எனக்குத் தெரியவில்லை. சாப்பாட்டு மேசையில் குடிவகைப் போத்தல்கள் - சிற்றுண்டிகள் - வகையான சாப்பாடுகள். மேசையின் ஒரு மூலையில் கடித்து துப்பிய எலும்புத் துண்டுகள்.

அட! இன்று சனிக்கிழமை அதுவும் மத்தியான நேரம்.... பித்துக்குளிபோல் நான்தான் வந்துவிட்டேன் என மனதுக்குள் நான் நினைப்பதை ஊகித்துக் கொண்டது போல்,

"பரவாயில்லை நீ உள்ளே வா.... இது எல்லாவற்றையும் விட நீதான் எனக்கு முக்கியம்.... நீ இஞ்சை வாறது முக்கியம் மச்சான்" நண்பர் உபசரித்தார்.

அங்கிருந்தவர்கள் என்னைப் பார்த்து Bonjour (வணக்கம்) சொன்னார்கள். அவர்களுக்குப் பக்கத்திலிருந்த ஒரு ஆசனத்தை எடுத்து தனியாக - மையமாக - ஒரு இடத்தில் போட்டு என்னை இருக்கும்படி சிவராஜன் கேட்டான்.

கடன் கேட்டு வந்த எனக்கு, தான் கடன் கேட்பதுபோல் சிவராஜன் செய்யும் உபசரிப்பு என்னைக் கொஞ்சம் கூச்சப்படுத்தியது.

"இவன்ரை பெயர் சிலுவைதாசன், ஆனால் நாங்கள் சிலுவை எண்டுதான் கூப்பிடுவோம்" என என்னை அறிமுகப்படுத்திய கையுடன் அங்கிருந்த மற்றவர்களின் பெயர்களையும் கூறி எனக்கு அறிமுகம் செய்து வைத்தான். நான் மீண்டும் அவர்களுக்கு வணக்கம் சொல்லி மௌனியானேன்.

ஒரு கிளாசில் விஸ்க்கி ஊற்றி சிவராஜன் என்னிடம் நீட்டினான். கையைக்காட்டி எனது மறுப்பைத் தெரிவித்தேன். நான் நன்றாகக் குடிவகைகள் அருந்துவேன். ஆனால், தெரியாதவர்கள் - பழக்கமில்லாதவர்களுடன் எந்த சந்தர்ப்பத்திலும் நான் மதுவகைகள் அருந்தமாட்டேன். இயன்றளவு தவிர்ப்பேன் என்பது சிவராஜனுக்குத் தெரியும்.

மடையன்போல் எனக்கு மிக நெருக்கமாக வந்து மீண்டும் மீண்டும் விஸ்க்கி கிளாசை நீட்டி.... ஒரு வகையில் என்னை வற்புறுத்துவதுபோல் சிவராஜன் நின்றான். மெதுவாக அவனை நடைபாதைக்கு அழைத்துச் சென்று "மச்சான் உனக்குத் தெரியும் தானே நான் தெரியாதவர்களுடன் தண்ணியடிக்க மாட்டேன் என்று.... please என்னை force பண்ணாதை...." நான் முடிப்பதற்குள் "அவங்களெல்லாம் என்ரை நல்ல பிரண்ட்ஸ். நீ பயப்படாதை, வந்து குடி" என எல்லோருக்கும் கேட்கும்படியாக உரத்த குரலில் கூறிக்கொண்டு என்னை இழுத்துக் கொண்டு போனான் சிவராஜன்.

அவன் தந்த விஸ்க்கி கிளாசை மனம் இன்றி வாங்கிக் கொண்டேன். கடன்பட்டார் உள்ளமே கலங்கிப் போகுமாம்.... கடன்படப் போவோர் உள்ளம் என்ன நிலையில் இருக்கும் என்பதை கம்பர் சொல்லாமலே நான் உணர்ந்து கொண்டேன். இப்போது எனது கையில் வற்புறுத்தப்பட்ட இரண்டாவது கிளாஸ் விஸ்க்கி.

சிவராஜனின் கண்கள் நன்றாக சிவக்கத் தொடங்கியது. மற்றவர்களுக்கும்தான் கண்கள் சிவந்து முகமெல்லாம் எண்ணை பூசி விடப்பட்டது போல் வியர்வை தோய்ந்திருந்தது. அவர்களிடமிருந்து ஒரு வித நெடி வீசியது. என் குடித்தோற்றத்தை நான் பார்க்க முடிவதில்லை, இப்படித் தானே இருக்கும்.... நினைக்கவே உற்சாகமாக இல்லைத்தான்.

யார் என்ன கதைக்கிறார்கள் என்றே விளங்கவில்லை. ஒருவர் கதைப்பதை ஒருவர் தடுக்கிறார். பின்பு தடுத்தவரே சத்தம் போட்டுக் கதைக்கிறார். கொஞ்சம் பொறு.... கொஞ்சம் பொறு, நான் சொல்றதைக் கேள்.... என்ற சொற்கள் மட்டும் எல்லோரிடமிருந்தும் அடிக்கடி வருகிறது. இதற்கிடையில் கொஞ்சம் விஸ்க்கி குடிப்பதுவும், ஏதாவது எடுத்து கடித்துக் கொள்வதுமாக அவர்கள் இருக்கிறார்கள்.

சிவராஜன் எல்லோரையும் பார்த்து, "ஏ! உங்களுக்கெல்லாம் இவனை என்னைக்காட்டி, தெரியுமா யார் எண்டு? இவன் சும்மா ஆளில்லை.... நல்லாய் படிச்சவன்...." என்று தொடங்கி, எனது முடிவு பெறாத படிப்புகளைப் பற்றியும் ஏதேதோ அரசியல்பற்றியும் அவன் கதைப்பவைகளைப் பார்க்க எனக்கு உடலெல்லாம் கூசியதுபோல் இருந்தது.

அவன் பேசிக் கொண்டிருப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைத் தடுத்து நான் வந்த விடயத்தை சைகையால் காட்டினேன்.

"கொஞ்சம் பொறு, மச்சான்.... அதுக்கொண்டும் பழுதில்லை நான் சொன்னாச் சொன்னது தான்.... ஆனால் இவங்களுக்கு நீ யாரெண்டு சொல்லவேண்டும்...." இப்படியே மேலும் மேலும் கடைசி வார்த்தையையே அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

எனக்கு சங்கடமாகவிருந்தது. எனது நிலையை நினைத்து நானே வேதனைப்பட வேண்டியதாயிற்று. வேறு ஒரு நேரம் என்றால் இந்த இடத்தில் ஐந்து நிமிடம் கூட நின்றிருக்கமாட்டேன், ஆனால் இன்றைய எனது நேரம் அப்படியில்லை.

சிவராஜனை எனக்கு ஊரிலேயே தெரியும். அவன் கொழும்பில் உள்ளூராட்சி அமைச்சில் (Ministry of Local Governments) எழுதுவினைஞராக (clerk) இருந்தவன். எனது தந்தையின் முயற்சியாலேயே அவனுக்கு அந்த வேலை கிடைத்தது. நல்ல திறமைசாலி, ஆங்கிலத்தில் புகுந்து விளையாடுவான். மற்றவர் மனம் நோகாமல் பழகுவதில் இணையற்றவன்.

காதலால் பல பிரச்சனைகளைக் கண்டாலும் உறுதியுடன் தான் இருந்தான்.... இறுதியில் பெற்றோரா, காதலியா? என்று வந்த வேளையில் தனது காலைத் தானே வாரிவிட்டான். அந்த மனச்சாட்சி உறுத்தலோ - அல்லது காதலின் வேதனையோ தெரியவில்லை, இன்றுவரை திருமண பந்தம் பற்றிய கதைக்கே இடம் கொடுக்காமல் தனியே வாழ்ந்து தொலைக்கிறான்.

அவனது வேதனையின் சரியான தளத்தை அறியாததால் நானும் இதுபற்றி ஒன்றும் கதைத்துக் கொள்வதில்லை. அது சரியோ பிழையோ எனக்குத் தெரியாது. ஆனால் கதைக்காமல் இருப்பதே நாகரீகம் மட்டுமல்ல, அவனது அமைதிக்கு இடைஞ்சலும் இல்லாமல் இருக்கும் என எண்ணுவேன். ஆனால் எத்தனை இரவுகள், தனிமையான பகலுகள் கூட அவன் என்ன பாடுபடுவான்.... துன்பப்படுவானா...? குழறி அழுவானா...? அல்லது தண்ணியடித்து விட்டுத் தூங்கி விடுவானா....? இதோ பாருங்கள், சிவந்த கண்களுடன் வெறியேறிய முகத்துடன் சிகரட் புகையை ஊதிக்கொண்டு அவன் சந்தோசப்படுகிறானா...? வேதனைப்படுகிறானா?

பத்தாயிரத்தை மறந்து, நான் வந்த விடயத்தை மறந்து , எனது துயரை மறந்து, மற்றவன் துயரப்படுகிறானா - சந்தோசப்படுகிறானா? எனத் தேவையில்லாத - தேவையான - கற்பனையில் ஆழ்ந்து போய்.... அட! அசடே.... அசடே.

அவர்களிடையே கடுமையான வாதம் தொடங்கியதுபோல் இருந்தது. இப்போ சந்தை இரைச்சல் போல் இருக்கிறது. அடிக்கடி என்னையும் பார்த்து வாதித்துக் கொள்கிறார்கள். நான் அமைதியாக இருப்பது அவர்களுக்கு விருப்பமாக இருக்கிறதோ இல்லையோ விளங்கிக்கொள்ள முடியவில்லை.

இவைகளுக்கிடையில் எனது வீட்டு முதலாளி மனதில் தோன்றி என்னை வாட்டிக் கொண்டிருந்தான். அதனாலேயோ என்னவோ என்னால் ஒன்றும் பேச முடியாமல் இருந்தது. அவன் என்னை எனக்கு விளங்காத (hebrew) மொழியில் அடிக்கடி திட்டித் தொலைக்கிறான். இங்கு கூட சாப்பாட்டு மேசையில் அவன் உட்கார்ந்திருக்கிறான். வாடை கட்டவில்லை - வீடு காலி என்பது போல் சாடை காட்டுகிறான். எட, நாசமாகப் போவானே வாய் முணுமுணுத்தது.

"என்னடா, உம் எண்டிருக்கிறாய், குடியன் மச்சான்" இது சிவராஜன். நான் சிரித்துக்கொள்கிறேன். சிவராஜனின் நண்பர்களில் ஒருவன் "கொஞ்சம் அடியுங்கோவன்.... ஏன் அமைதியாக இருக்கிறியள். எங்களோடை join பண்ணுங்கோவன்" என்றான். "சீச்.... சீ அப்படியொன்றுமில்லை ஏற்கனவே நான் உங்களுடன் join பண்ணிவிட்டேன்" என அசட்டுச் சிரிப்புடன் கூறினேன்.

"சரி.... சரி, அவரை force பண்ணாதையுங்கோ" என மற்றொருவர் கூறினார்.

மனதுக்குள் நன்றி கூறிக் கொண்டேன்.

சிவராஜன் தலையை நிமிர்த்திக் கொண்டான். "டேய்...." என பல்லை நெருமிக்கொண்டு "உங்களுக்கு இவனைப்பற்றி என்னடா தெரியும்" எனச் சொல்லிக் கொண்டே எழுந்து என்னைக் கட்டியணைத்து, "இவனோடை இருந்து தண்ணியடிக்க நீங்கள் குடுத்து வைத்திருக்க வேண்டும். இவன்ரை குடும்பமே படித்த குடும்பமடா.... இவன்ரை தேப்பன் மினிஸ்ட்ரியிலை வேலை பார்த்தவர், அந்த ஆள்த்தான் எனக்கே உத்தியோகம் எடுத்துத் தந்தவர்...." இப்படி சிவராஜன் கதைத்துக்கொண்டு போக நான் அவனை இடைமறித்து "மச்சான், நான் வந்த விடயத்தை முடி. இப்ப ஏன் தேவையில்லாத கதைகள்.... எல்லாரும் படிச்ச ஆக்கள்தான்" எனக் கூற.... அங்கிருந்தவர்களில் ஒருவர் (இப்போதான் முதல் பேசுகிறார்) "நீங்கள் அவரைக் கொஞ்சம் கதைக்க விடுங்கோ. எனக்கும் இரண்டொரு கேள்வியிருக்கு பின்பு கேட்க வேண்டும்" எனப் பொடி வைத்தார்.

"எட! என்னடா கேட்கப் போகிறாய்.... அவன்ரை மூத்தண்ணை.... சின்னண்ணை...." என எனது அண்ணன்மாரின் உத்தியோகங்கள், அவர்களின் படிப்புகள் என இடத்துக்கு சம்மந்தமில்லாமல் - சில நேரம் எனது நட்பின் உயர்வினை உணர்த்துவதற்காகவோ என்னவோ - சிவராஜன் கதைத்துக் கொண்டிருந்தான்.

"ஆனால், உங்கடை ஆட்கள் எல்லாம் அங்கை சவக்கிடங்கு வெட்டித்தானே பிழைக்கிறவை, வெளிநாட்டுக்கு வந்தவுடனை உங்கடை காலம், எல்லோருடனும் சமமாய்த் திரியிறியள்...." இதற்கு மேல் அவன் பேசியது ஒன்றும் எனக்குக் கேட்கவில்லை. சுத்தியலால் பிடரியில் அறைந்தது போல் துடித்துப்போனேன்.

சிவராஜன் கதைக்கும் பொழுது குறுக்கிட்டு எனக்கும் இரண்டொரு கேள்வி இருக்கு எண்டவன்தான் மனதிலிருந்த நஞ்சைக் கொட்டினான்.

கதிரையைக் காலால் அடித்து விட்டு எழுந்தேன். கை முறுக்கேறியது. என் குணம் தெரிந்த சிவராஜன் இரண்டு கைகளையும கூப்பிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வண்ணம் ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

மயான அமைதி.

நான் புறப்பட்டு படிகளில் இறங்கி வந்தேன். என்னுடன் தொடர்ந்து ஓடி வந்த சிவராஜன் எனது கால் சட்டைப்பையில் ஏதோ திணித்தான். நான் கேட்ட பணமாக இருக்கும்.

"எட மச்சான், இவங்கள் உடலையும், உயிரையும் மட்டும் காப்பாற்றி இஞ்சை வரயில்லை...." சிவராஜன் ஏதோ கதைத்துக் கொண்டு வருகிறான் என் காதுகளில் அவை தெளிவாகக் கேட்கவில்லை.

கார்க் கதவைத் திறந்து காலால் தள்ளி உள்ளே ஏறிக் கொண்டேன். சிவராஜனைப் பார்த்தேன்.... அவன் கண்கள் இப்போ சிவப்பாக இல்லை.... அது கலங்கியிருந்தது.... அவனது முகம் ஏதோ தேடி இரந்து நின்றது.

விர்.... என பாய்ந்து கொண்டு எனது கார் புறப்பட்டது.

என்னில் கனன்று கொண்டிருக்கும் கோபம் யார் மீது...? எதன் மீது...?





சமர் - இதழ்-27

பத்து ஆண்டுகளாக
வெளிவந்து
கொண்டிருக்கும்
'அரசியல், தத்துவார்த்த,
புரட்சிகர விமர்சன' ஏடு.

தொடர்புகளுக்கு:
P. RAYAKARAN
32 Rue Trouillet Derel
92600 Asnières sur Seine
FRANCE


# ஏற்றம்

மருத மைந்தன்

மௌனக் கருவூரின்
வாயில் கடந்ததும்
வாய்விட்டு அழுகின்றாய்.

உலக அழுத்தத்தின்
முதற்படி!

அழுகை இங்கு
மிகமிக மலிவு!

கண், வாய், மனம்
எதற்கானதும்
பெறுவது இலகுதான்!

ஆயுள் முழுவதுக்குமான
அழுகை
அமோக விளைச்சல்

இப்போது அறுவடை காலம்
அகதி முகாம்கள்
மரநிழல்கள்
அனைத்தும் நிரம்பியுள்ளன!

மீண்டும் அணுக்குண்டு இடியுடன்
ஏவுகணை மழை
ஆரம்பித்துவிட்டது.
குருதி நீரோட்டம்
வரண்ட மனங்களை
மீளவும்
குளிர்மையாக்கி விடும்

உடல் உரத்தின் சேர்வால்
அடுத்த போகமும்
அமோக விளைச்சல்தான்!

அதோ ஏவுகணை கருக்கூடங்கள்
பறக்கத் தொடங்கிவிட்டன!
ஜீவன்கள் பதுங்கு குழியைத்
தேடுகின்றன.

நீ அழுகையுடன்
வந்திருக்கத் தேவையில்லை
உன்னையே அழித்து
நீ உற்பத்தியான
நீர்த்துளியாய்
மாறியிருக்கலாமல்லவா...?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 27வது இலக்கியச் சந்திப்பு

## 23. 12. 2000 – 24. 12. 2000

## 23.12.2000
### சனிக்கிழமை

**8.30 காலை சிற்றுண்டியுடன் அமர்வுகள் ஆரம்பம்**

- சிறுசஞ்சிகைகள் விமர்சனம்
  **அம்மா**
  **சந்திரஸ், ஜேர்மனி**
  **எக்ஸில்**
  **அர்விந்த் அப்பாதுரை, பிரான்ஸ்**
  **உயிர்நிழல்**
  **வி. சிவலிங்கம், இங்கிலாந்து**
  **துளிர்**
  **கு. உதயகுமார், பிரான்ஸ்**
- உலகமயமாக்கலும் மனித சுதந்திரமும்
  **என். சண்முகரத்தினம் (சமுத்திரன்), நோர்வே**

**12.30 மதிய உணவு**

**13.30 பிற்பகல் அமர்வு**

- மூன்றாம் உலகநாடுகளும் அவற்றின் மீதான ஏகாதிபத்தியத் தலையீடும்
  **தி. உமாகரந்தன், பிரான்ஸ்**
- டொமினிக் ஜீவாவின் பிரதிகளின் மீதான ஒரு வாசிப்பு
  **கலைச்செல்வன், பிரான்ஸ்**
- போரும் சமாதானமும்
  **பரராஜசிங்கம், ஜேர்மனி**
- எதிர் இலக்கியம்
  **சாரு நிவேதிதா, இந்தியா**

இடம்:
**SALLE PASTEUR**
**Rue Louis Choix**
**95140 Garges Les Gonesse.**

தொடர்புகளுக்கு:
**S. PUSHPARAJAH**
**7 Rue Racine**
**95140 Garges Les Gonesse**
**FRANCE.**
**Tél: 01 36 86 31 30**

## 24.12.2000
### ஞாயிற்றுக்கிழமை

**8.30 காலை சிற்றுண்டியுடன் அமர்வுகள் ஆரம்பம்**

- நீட்சே
  - நீட்சேயின் மூலங்கள் – ஒரு மார்க்சிய விசாரணை
    **தமிழரசன், ஜேர்மனி**
  - இன்றைக்கான நீட்சே தேசியமும் – தேசிய மறுப்பும்
    **வின்சென்ற் போல், பிரான்ஸ்**
  - நீட்சேயும் நீட்சேயும்
    **வாசுதேவன், பிரான்ஸ்**

**12.30 மதிய உணவு**

**13.30 பிற்பகல் அமர்வு**

- ஈழத்து இலக்கியத்தில் சிற்றேடுகளின் பங்களிப்பு
  **டொமினிக் ஜீவா, இலங்கை**
- உலக அரசாட்சியில் புனித ஆவிகளும் பயங்கரவாத ஜின்களும் (இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்த விசாரணைக் குறிப்புகள்)
  **ஜமாலன், சவுதி அரேபியா**
- நூல்கள் அறிமுகம்
  **எனக்குள் பெய்யும் மழை** (மொ.பெ.: யமுனா ராஜேந்திரன்)
  **அருந்ததி, பிரான்ஸ்**
  **சனதருமபோதினி** (தொகுப்பு : சுகன், ஷோபாசக்தி)
  **அ. தேவதாசன், பிரான்ஸ்**
  **புலம்பெயர் சினிமா** (தொகுப்பு: அருந்ததி, யமுனா ராஜேந்திரன்)
  **வசந்தரூபன், பிரான்ஸ்**
  **நீ இப்பொழுது இறங்கும் ஆறு** (சேரன்)
  **சி. புஸ்பராஜா, பிரான்ஸ்**
  **பனிவயல் உழவு** (திருமாவளவன்)
  **ந. சுசீந்திரன், ஜேர்மனி**
- இலங்கையில் தேசிய இனப்பிரச்சனை
  **சிவலிங்கம், இங்கிலாந்து**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் புத்தகம்

நான் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன்
அது ஒரு பெண்ணின் வலியிலிருந்து
ஒரு ஆணின் பசியிலிருந்து பிறந்தது.

மக்கள் என் புத்தகத்தை படிக்கவில்லை
படிப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை போலும்
தங்கள் நூலகங்களிலும்
வாசகசாலைகளிலும்
அதை வைத்திருக்க வேண்டியதில்லை
என்று அவர்களுக்குத் தோன்றியது போலும்.

மறுதலிக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட
என் புத்தகம் பதிவு செய்திருப்பது
உணவுக்கும்
பால் இன்பத்திற்குமான
ஆணின் பசியை.

அவனுக்கு வயிறு பசிக்கும்போது
நான் உணவைத் தயாரிக்கிறேன்
அவனுக்கு உடற்பசி வரும்போது
நான் என்னைப் படைக்கிறேன்
அவனது உணவாகிறேன்

எப்படி இருந்தாலும் அவன் மனிதன் இல்லையா?
அவன் நியாயத்திற்காக சண்டையிடுபவன் இல்லையா?
தன் பசியைப் போக்கிக் கொள்ள
என்னைத் தின்பது
அவனது நியாயமான உரிமை இல்லையா?

தனது "இலக்கியத் தரமான எழுத்துக்களை"
கொண்டாட
என் புத்தகத்தை எரிப்பது
அவனது உரிமை இல்லையா?

இருந்தாலும் நான் இந்தப் புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன்
திரும்பத் திரும்ப
அதன் சாம்பலில் இருந்து
அதை
உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறேன்

விபச்சார விடுதிகளிலிருந்தும்
அனாதை விடுதிகளிலிருந்தும்
காப்பகங்களிலிருந்தும் சிறைகளிலிருந்தும்
துயரத்தையும் வலியையும் திரட்டுகிறேன்

பெண்ணின்
மனிதத் தன்மையை நிலைநாட்ட
நான் போராடுகிறேன்

என் புத்தகத்திற்கு
இவ்வுலகில் ஒரு இடத்தை உண்டாக்கவும்கூட.

தமிழில் : அமரந்த்தா

| | |
|---|---|
| இந்தியில் : | மணிமாலா |
| ஆங்கில மொ.பெ.: | மனுஷி இதழ் ஆசிரியர் குழு இதழ் 10, 1982 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவள் சொன்னாள்....



*தமிழில் : அமரந்த்தா*

தான் வருத்தமாக இருப்பதாக அவள் சொன்னாள்
அவளை கவனித்துக் கொள்வதாக அவர்கள் சொன்னார்கள்
தனக்கு அன்பு தேவை என்று அவள் சொன்னாள்
அதனால் அவளை பாலியல் பலாத்காரத்திற்கு ஆட்படுத்தினார்கள்
தன்னை தனியாக விடும்படி அவள் சொன்னாள்
சின்னஞ்சிறு ஒற்றை ஜன்னலைக் கொண்ட
சிறையில் தள்ளி
அவள் உடைகளை கழற்றிக் கொண்டு
விளக்குகளை எல்லாம் அணைத்துவிட்டு அவர்கள் போய்விட்டார்கள்.
நீண்ட நேரம் கழித்து அவர்கள் திரும்பி வந்த போது
"மிகவும் இருட்டாக இருக்கிறது" அவள் சொன்னாள்
அவள் முகத்தின்மீது சக்தி வாய்ந்த ஒளியை பாய்ச்சினார்கள் அவர்கள்
"எனக்கு இது பிடிக்கவில்லை" என்று அவள் சொன்னாள்
"என்ன விசயம்" என்று அவர்கள் கேட்டார்கள்
"சாப்பிட ஒன்றும் இல்லை. குடிக்க சிறிது தண்ணீர் தருவீர்களா?"
நீண்ட தண்ணீர்க் குழாயைக் கொண்டு வந்து அவள்மேல் நீரை பீய்ச்சி அடித்து
"இப்போது சந்தோசம்தானே" என்று அவர்கள் கேட்டார்கள்
"அய்யோ எனக்கு மிகவும் குளிருகிறது. எலும்புகள் எல்லாம் வலிக்கின்றன.
நான் நடுங்கிக்கொண்டே இருக்கிறேன்" என்று பதில் சொன்னாள்
பெரும்போராக சுள்ளிகளையும் செய்தித்தாளையும் கொண்டு வந்து
அவளின் சிறை அறையில் பெருந்தீயை மூட்டினார்கள்
உடலைக் குறுக்கி ஜன்னலின் வழியாக வெளியே தூரத்தில் விழுந்த அவள்
இறந்து போனாள்
பின்பு அவர்கள் சொன்னார்கள்:
"இவளைப் போன்றவர்களிடம் பிரச்சனை என்னவென்றால்,
அவர்களை சந்தோஷப்படுத்த எவ்வளவுதான் முயன்றாலும்
அவர்கள் திருப்தி அடைவதே இல்லை"
☯

ஆங்கிலத்தில் : ஜூடிகிரகன்
மனுஷி இதழ் 8, 1981



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பீனிக்ஸ் பறவையின்

## புகல்வாழ் குறிப்புகள்

**சமூகம் பேச மறுக்கப்பட்ட, விரும்பாத, புறக்கணித்த, அங்கீகரிக்காத சாதி, சமயம், வர்க்கம் கடந்து உள் ஊடாட்டமாக இயங்கிய பாலியல் உறவுகளை எழுத்தில் கொணர்ந்தாரேயொழிய மற்றும்படி இவரும் ஓர் யதார்த்தவாத இலக்கிய எழுத்துக்களையே தமிழிற்குத் தந்துள்ளார்**

இளையவி சின்னவன்

எஸ். பொ. தமிழ் இலக்கிய உலகம் நன்கு அறியப்பட்ட பெயர். அண்மையில் கனடா, லண்டன், பிரான்ஸ், நெதர்லாந்து, ஜேர்மனி என மேற்கைச் சுற்றும் ஓர் பயணத்தை மேற்கொண்டவர்.

1960களில் ஈழத்து இலக்கியப்பரப்பில் என்றுமாய் வியாபித்த படைப்பிலக்கிய கர்த்தாக்களில் எஸ். பொ. மிகவும் முக்கியமானவர்.

முற்போக்கு இலக்கிய வளர்ச்சியையும் யதார்த்தவாத இலக்கியப் படைப்புகளுக்கான முன்னுரிமையையும் தாண்டி தமது படைப்புகள் மூலம் நிலைத்தவர்.

தனது எழுத்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அதற்கெதிராக நற்போக்கு இலக்கிய இயக்கம் என அறைகூவி தனித்தே நின்று போராடியவர்.

இலக்கிய விமர்சனத்தில் கைலாசபதி, சிவத்தம்பி என ஒரு முனையும் மு. தளையசிங்கம், மு. பொ. என மறு முனையுமாக இருமுனைத் தாக்குதல்களை எதிர்கொண்டவர்.

எதிர்ப்புகள், சார்புகள், வளர்ச்சிகள், தாழ்ச்சிகள் எதுவான போதும் தனித்தே நின்றாகிலும் 60-70களில் குறிப்பிடத்தக்க படைப்பிலக்கிய நாவல்களைத் தமிழிற்கு தந்தவர். எஸ். பொ. விற்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் தவிர்க்க முடியாத இடம் உண்டு.

இரண்டாம் உலகயுத்தத்தின் காலனிய சுதந்திரத்தின் பின்னதான அதிகம் ஆதிக்கம் செலுத்திய மார்க்ஸிய சித்தாந்த பரிச்சயமும் வர்க்கப் போராட்டத்திற்கான உந்துதல்களும் பெரும்பாலான எழுத்தாளர், எழுத்தாளிகளை அதன்பால் முனைப்புக்கொள்ள வைத்திருந்தது. பெரும்பாலான இலக்கிய முயற்சிகள் வர்க்க சிந்தனையின் வெளிச்சத்தில் வளரத் தொடங்கி இருந்தன. சைவமும் தமிழும் என சனாதன இலக்கிய மரபைப் பேணும் சைவ வேளாளரின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குட்படுத்தப்பட்டிருந்தனர். சாதி ஒடுக்குமுறையுடன் வர்க்க ஒடுக்குமுறையையும் எதிர்த்த படைப்புக்கள் உருவாகின. இதற்கு கைலாசபதி, சிவத்தம்பி அவர்களது விமர்சனங்களும் ஓர் உந்துசக்தியாகவே இருந்தன. ஆயினும், இவர்கள் இதே சனாதன சைவ இலக்கிய மரபுகள் காப்பாற்றி வந்த கலாச்சார மரபுகளையும் மறைக்கப்பட்ட பாலியல் உறவு அம்சங்களையும் கணக்கிலெடுத்திலர்.

இவ்விடத்தில்தான் எஸ். பொ. முக்கியத்துவப்படுகிறார். கலாச்சார நெறிமுறைகளுள் நசுக்கப்பட்ட பாலியல் உணர்ச்சிகளையும் அதையும் மீறிக் கிளர்ந்த உள்ளூர அடைக்கப்பட்ட சமூகம் அங்கீகரிக்காத பாலியல் வாழ்க்கைகளையும் தம் இலக்கியத்தின்மூலம் வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறார்.

இதனால் இவர் ஓர் 'இந்திரிய எழுத்தாளன்' என்றுகூட ஏளனம் செய்யப்பட்டார். ஆயினும் அவரை எவ்விதத்திலும் நிராகரிக்க முடியாதபடி அவரின் படைப்புகள் சமூகத்தின் உயிர்நாடியை பற்றி இருந்தது. அவை பேச மறுக்கப்பட்ட உண்மைகளாக இருந்தன. குறித்த சமூக, தத்துவ பார்வைக்கூடாக மட்டுமே ஒரு சமூகத்தைப் பார்ப்பது தவறு என எஸ். பொ. வின் படைப்புகள் சுட்டிக்காட்டின. யதார்த்தவாத இலக்கிய வளர்ச்சிகளுக்கு எவ்வளவு தீனியை எவர் போட்ட போதும் எஸ். பொ. தன் படைப்புகள் மூலம் கேள்விக்குறியை போட்டு விடுகிறார். அவரின் நாவல்களில் 'சடங்கு', 'தீ', 'வீ', '?' என்பன மிகவும் முக்கியமானவை.

ஆயினும் தன் இளமைக்கால வாழ்வில் சமூகத்தில் உள்ளும் புறமுமாய் தான் கண்டவற்றையும் உள் உணர்ந்தவற்றையும் மிகச் சிறந்த பாத்திரங்களாக, சூழல்களாக, இயற்கையாக, வரலாற்று பதிவுகளாக பிரதிமை பண்ணுவது மிகவும் சிறப்பாக அமைந்த போதும் வாழ்வின் அர்த்தங்களையோ சமூக ஒடுக்குதல்களை வெளிப்படுத்துவதன்மூலம் விடுதலைக்கான கோடிகளையோ காட்டுவது அவர் நோக்கமாக இருக்கவில்லை.

உண்மையை தேடிய தரிசன முயற்சிகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எஸ். பொ. எவ்வளவுதான் வயதைக் கடந்தபோதும் எவ்வளவு நாடுகளை பிறசமூகங்களை பிற கலாச்சார வாழ்வுகளைக் கண்டபோதும் அவர் பிரக்ஞை இயங்கிக் கொண்டிருப்பது அவரது இளமைக்கால தமிழ்சமூக வாழ்வில்தான்.

அசைவியக்கத்திற்கான அறிவியல் உந்துதல்களை அவரின் படைப்புகளில் காணமுடிவதில்லை. மொத்தத்தில் பார்க்கும்போது சமூகம் பேச மறுக்கப்பட்ட, விரும்பாத, புறக்கணித்த, அங்கீக ரிக்காத சாதி, சமயம், வர்க்கம் கடந்து உள் ஊடாட்டமாக இயங்கிய பாலியல் உறவுகளை எழுத்தில் கொணர்ந்தாரேயொழிய மற்றும்படி இவரும் ஓர் யதார்த்தவாத இலக்கிய எழுத்துக் களையே தமிழிற்குத் தந்துள்ளார் என்று தெரிகிறது.

அவர் வேறு எந்தத் தமிழ்க் கலாச்சார மரபையும் மறுத்தவர் அல்ல. மிகவும் இன மானம் கொண்டவர். தமிழ் இன - மொழி - கலாச்சார பற்றுக் கொண்டவர். தமிழ் இன விடுதலையே தமிழையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் காப்பாற்றும் என்று அசையாத நம்பிக்கையோடு விடுதலைப்புலிகளுடன் ஆதர வாகச் செயற்பட்டு வருபவர். தமிழ் மானம் ஒன்றே மானசீகம் விடுதலை என்று வாழ்ந்து வருபவர்.

இவையே இவரின் இன்றைய எழுத்துக்கள்வரை எமக்கு அறிவுறுத்துபவையாக இருக்கின்றன.

எழுபதின் பின்னான இவர் எழுத்துக்கள் 'நனவிடை தோய்தல்' மற்றும் 'இனி'. இவை இன்னுமோர் விடயத்தை எமக்கு அறிவுறுத்து கின்றன. எஸ். பொ. எவ்வளவுதான் வயதைக் கடந்தபோதும் எவ்வளவு நாடுகளை பிறசமூகங் களை பிற கலாச்சார வாழ்வுகளைக் கண்டபோதும் அவர் பிரக்ஞை இயங்கிக் கொண்டிருப்பது அவரது இளமைக்கால தமிழ்சமூக வாழ்வில்தான் என்பதையே.

குறிப்பாக எழுபதுகளின் பின்னான அவரின் வாழ்வு சில ஆண்டுகள் ஆபிரிக்காவிலும் இறுதி 12 ஆண்டுகள் அவுஸ்திரேலியாவிலுமாக கழிக்கும் போதும் இவரின் எழுத்துக்களில், இந்த சமூகங் களையோ, சமூக மாற்றங்களையோ, வாழ்வையோ என்றும் தரிசிக்க முடியவில்லை. தமிழ் இலக்கியப் பரப்பில் ஏதோ இயங்கிக் கொண்டிருந்தாலும் படைப்பிலக்கியத்தில் அவரிடம் புதிதாக எதுவும் இல்லை. அவரின் முன்னும் பின்னுமான அனைத்துப் படைப்புகளிலும் அவரின் இளமைக்கால வாழ்வும் சூழலுமே பிரதிபலிக்கின்றது. அதை மிஞ்சிப் போகிற பொழுது மகன் மித்தியின் இளமையும் மகனின் சிந்தனையும் செயலும் பிரதிபலிக்கிறதேயொழிய அவரின் அனுபவத்திற்கும் வாழ்வுக்கும் இடையே யான அறிவியல், மானுட தரிசனம் எங்கும் இல்லை.

இழந்த மகனின் பாசத்திலும் இல்லாமையிலும் அவர் அறிவையும் மானசீகத்தையும் தொலைத்து அநாதையாக நிற்பதையே அவரின் நனவிடை தோய்தல் நூலின் இறுதிக்கதை 'மித்தி' எமக்கு உணர்த்துகிறது.

அவரோ அன்றி யாரோ வாரிசு என்று சொல்லிக் கொண்டாலும் எதுவித வாரிசுகளையும் இலக்கியப் பரப்பில் போடமுடியவில்லை.

எஸ். பொ. வை ஓர் பாலியல் எழுத்தாளராக அரைவேக்காட்டுத்தனமாக மட்டுப்படுத்துவோர் இன்றைய தமது பால்வாத எழுத்துக்களை வைத்து தாம்தான் வாரிசு என விளம்பரப்படுத்த முனை கின்றனர். அது எஸ். பொ. வின் பிரபல்யம் சார்ந்ததே ஒழிய இவர்களது எழுத்துக்கள் எஸ். பொ. வையும் தாண்டியதாக முற்றிலும் வேறு தளத்தினதான படிமங்களையே எமக்குத் தருகின்றன.

செக்ஸ் பற்றி எழுதுவது பின்நவீனத்துவ எழுத்தின் உள்ளீடு என வியாக்கியானப்படுத்தும் எல்லாம் தெரிந்த கைவரப் பெற்ற கனவான்களும் அவரைப் பின்நவீனத்துவவாதியாகக் கட்டமைக்க முயல்கின்றனர்.

சாடிஸ, போர்னோகிராபி இலக்கியத்திற்கு எல்லாத்துக்கும் காரணம் சமூக ஒடுக்குமுறை என மானுட நேசத்தையும் அநுதாபத்தையும் வெளிப் படுத்துவதன்மூலம் சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் இலக்கியங்களே பின்நவீனத் துவ இலக்கியமென ஒற்றைப் பிடியாய் வரித்துக் கொள்ளும் இன்றைய கனவான்களும் எஸ். பொ. வைத் தமது வாரிசு என்று சொல்லக்கூடும் ஆபத்தும் இருக்கிறது. Pleasure of the text என்பது பாலியல் இன்பப் பிரதியாக மட்டுமே கட்டமைக்கும் இக் கனவான்களையிட்டு நாம் நகைத்துக் கொள்ளத் தான் கொள்ளமுடியும். ஆயினும் சமூக ஓட்டத்தில் இனம், கலாச்சாரம், மொழி சார்ந்து பெரு ஓட்டத் துடன் ஓடி முதலிடம் பிடிக்கத் துடிக்கும் எஸ். பொ. ஒரு வேளை பின்நவீனத்துவ இலக்கியம் மட்டும்தான் இன்றைய தமிழ் நவீன இலக்கியம்(அது X தான்) என்று சொல்வோரின் வலையில் சிக்கிக் கொள்ளும் சாத்தியங்களை அவதானிக்க முடிகிறது. எதுவா கிலும் படைப்பாளுமையில் அசுர பலம் கொண்ட வராக எண்பதுகளுக்கு முன்னர் காணப்பட்ட எஸ். பொ. அதற்குப் பின்னான காலங்களில் தமிழ் இலக்கியப் பிரக்ஞையில் இருந்து அந்நியப்பட்ட வராகவே தெரிகிறார். கால இட மாற்றங்கள் காரணமாக இருக்கலாம். எனினும் 'புலம்பெயர்'என ஒரு பிரக்ஞையை தமிழ் இலக்கியப் பரப்பில் ஏற்படுத்துமளவுக்கு முனைப்புக்கொண்ட இலக்கிய முயற்சிகளில் எஸ். பொ. எனும் படைப்பாளி காணா மலே போயுள்ளார் என்றுதான் சொல்லமுடிகிறது.

பாரிஸில் நடந்த கலந்துரையாடலின்போதும் மற்றைய இடங்களிலும் எஸ். பொ. குறிப்பிட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியமான விடயம்:

கடந்த ஆறு ஆண்டுகளாக புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தின் போக்குகளை இனம் காண்பதும் அதை வளர்த்து பிரச்சாரப்படுத்துவதுமே தனது தலையாய கடமையாகக் கொண்டு வாழ்வதாகக் குறிப்பிட்டார்.

எஸ். பொ., மித்ரா பதிப்பகத்தை இந்தியாவில் தொடங்கியதன் பிற்பாடு ஏற்பட்ட பிரக்ஞை இது.

## இலக்கியம்பற்றி அவரிடம் எக் கேள்வியைக் கேட்டாலும் கைலாசபதிக்கும் சிவத்தம்பிக்குமே பதில் சொல்லிக் கொள்கிறார்.

புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களிடமிருந்து குறைந்தபட்ச முழுமைபற்றிய அக்கறையின்றி குறிக்கப்பட்ட சிறுகதைகளை தொகுத்து 'பனியும் பனையும்' என்ற சிறுகதைத்தொகுதி ஒன்றைக் கொண்டு வந்தார்

இந்த யாழ் மேலாதிக்க கருத்தியல் சின்னமான பனைக்கும், எவ்வித ஆதிக்க கருத்தியல்களையும் நிராகரிக்க முயலும் அது பின்நவீனத்துவமாக இருந்தாலும்கூட, புலம்பெயர் இலக்கியத்துக்கு மிடையில் எவ்வித தொடர்புமில்லை என்பதை எஸ். பொ. அறிந்திருக்கவில்லை. எஸ். பொ. யாழ் மேலாதிக்க மனோபாவத்தில் என்றில்லாமல் பனையை யாழ், ஒடுக்கப்பட்ட தலித்துகளின் சின்னமாகக் கருதினாரோ தெரியவில்லை.

இனி வரும் நூற்றாண்டில் புலம் பெயர் இலக்கியமே தமிழ் இலக்கியத்திற்குத் தலைமை தாங்கும் என மிகவும் மேலோட்டமான தீட்சண்யத்தில் கூறினாரேயொழிய புலம்பெயர் இலக்கியத்தை அவர் ஆய்வு செய்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை ஆய்வு செய்திருப்பின் ஒரு மண்ணும் இல்லை, வேரும் இல்லை என்று 'கம்' என்று இருந்திருக்கவும் கூடும். ஆயினும் குறிப்பாக ஒரு விடயத்தைக் கவனத்திற் கொள்ளவேண்டும். தமிழ் இலக்கியப் பரப்பில் அறிமுகமாகியுள்ள புலம்பெயர் இலக்கியமானது தமிழ், தேசிய மற்றும் அடையாளங்களை நிராகரிக்கும் போக்கைக் கொண்டுள்ளது. எஸ். பொ. தமிழ் தேசிய அடையாளங்களைத் தீவிரமாகக் காப்பாற்றும் போக்கு கொண்டவர். இவர் எப்படி புலம்பெயர் இலக்கியம் தலைமை தாங்க வேண்டும் என்கிறார். இங்கேதான் நாம் புலம்பெயர் இலக்கியத்தில் எஸ். பொ. வின் பிரக்ஞைபற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆரம்பத்தில் 'எக்ஸில்' எனவும் பின்னர் 'உயிர் நிழல்' எனவும் இலங்கை, தமிழ்நாடு இன்னும் வேறு நாடுகளிலும் என சிற்றிலக்கிய உலகில் அறியப்பட்ட இலக்கிய சஞ்சிகையை எஸ். பொ. இதுவரை அறிந்திருக்கவே இல்லை.

இவ்வளவிற்கும் இந்தியாவிற்கு ஒன்றும் அவுஸ்திரேலியாவிற்கு ஒன்றுமாக இரண்டு பிரதிகள் அவர் பெயருக்கு அனுப்பப்படுகின்றதாம்?

இலக்கியம்பற்றி அவரிடம் எக் கேள்வியைக் கேட்டாலும் கைலாசபதிக்கும் சிவத்தம்பிக்குமே பதில் சொல்லிக் கொள்கிறார். இவர் அவர்களை பரமவைரிகளாக வரித்துக் கொள்ளுமளவிற்கு பாதிக்கப்பட்டவராயினும் ஒரு காலத்தின் எழுத்து, இலக்கியம் என்பன (அவர் எழுதி இருப்பினும் கூட) எவரதும் தனிப்பட்ட சொத்து அல்ல. அவரின் இலக்கியத்தை அவரே காப்பாற்ற வேண்டும் என்பதில்லை. அவ் வேலைகளை இனிவரும் காலத்திடம் கைவிட்டுவிட்டு புதிய தேடுதல்களிலும் படைப்புகளிலும் அவர் ஆளுமைகளையும் அனுபவங்களையும் பிரக்ஞை பூர்வமாக பதிய வைப்பது நவீன தமிழ் இலக்கியத்திற்கு பலம் சேர்க்கும்.

அவரின் அரசியல் செயற்பாடுகள், கருத்தியல்புகளில் உடன்பாடு கொள்ளாதபோதும் அவரிற்கு ஒரு சிறு கலந்துரையாடலையேனும் ஒழுங்கு செய்த இலக்கிய நண்பர்கள் நன்றிக்குரியவர்கள். ஆயினும் பல இலக்கிய ஆர்வலர்களும் கலந்துகொள்ளாமல் விடுபட்டுப் போகுமளவிற்கு ஓர் இரகசியக் கலந்துரையாடலை நடத்தி இருக்கத் தேவையில்லை.


# அக்னி திரவம்

**தேவகாந்தன்**




இந்தியாவிற்கு புலம் பெயர்ந்த ஈழத்து எழுத்தாளரான தேவகாந்தன் எழுதியுள்ள கனவுச்சிறை பெரு நாவலின் மூன்றாம் பாகம் 'அக்னி திரவம்'. ஏற்கனவே முதல் இரு பாகங்களும் வெளிவந்துவிட்டன. விரைசலில் இறுதி இரண்டு பாகங்களும் வெளிவர இருக்கின்றன. ஐந்து பாகங்களைக் கொண்ட முழுநீள நாவல் ஆயினும் ஒவ்வொரு பாகங்களும் தனி நாவலுக்கு உரிய முழுமையை கொண்டிருக்கின்றன.

**வெளியீடு:**
**பல்கலைப்பதிப்பகம்**
**25 தெற்குச் சிவன் கோவில் தெரு**
**கோடம்பாக்கம்**
**சென்னை 6000 024**
**இந்தியா.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தயாநிதி
12. 10. 2000

இன்று எனது பிறந்த நாள். எனது மனசுக்குள் நான் இலங்கையில் இருக்கும்போது பள்ளிக்கூடம் வெளிக்கிடும் அவசரத்திலும் வானொலியில்

'பிறந்த நாள்
இன்று பிறந்தநாள்,
நாம் பிள்ளைகள் போலே
தொல்லைகள் எல்லாம்
மறந்தநாள்'

என்ற ஆண்குரலும்

'happy birthday to you'

என்ற பெண்குரல்களும் ஞாபகத் திற்கு வருகின்றன.

பிறந்தநாள் கொண்டாட்டங்கள் எதுவும் எனக்கு குறிப்பாக நினைவில்லை. கேக் வெட்டி மெழுகுதிரி அணைக்கின்ற கலாச்சாரம் எங்கள் ஊரில் இருக்கவில்லை. அர்ச்சனையும் பூசைக்கு கொடுப்பதும் வழக்கமாக இருந்த காலம்.

இண்டைக்கும் அம்மா கட்டாயம் ஐயருக்கும் கடவுளுக்கும் இலஞ்சம் கொடுத்திருப்பா; ஆயுள் கெட்டியாக இருக்கவும் சுகமாக இருக்கவும் நிச்சயமாக கேட்டுக் கொண்டிருப்பா.

என்னுடைய பிறந்தநாட்கள், நான் வளர்ந்தபின்பு வலிமை மிக்கதாகவும் உரிமைகோரும் விடயமாகவும் மாறி வந்தவை போல ஒரு உணர்வு.

நான் இயக்கத்தில் இருந்த காலத்தில் பிறந்தநாள் தொடர்பு பேணும் நாளாக இருந்திருக்கின்றது. அம்மா தனது உறவை நிருபித்துக் கொள்ளவும் அந்த நாள் இருந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

85இல் என்று நினைக்கிறேன். எல்லோரும் அங்கும் இங்குமாக சிதறிப் போயிருந்த வேளை, கிண்ணியாவுக்கும் தம்பலகாமத்திற்குமான போக்குவரத்து தொடர்புகள் அற்றிருந்தநேரம். நாங்கள் தமிழ் கிராமமான ஆலங்கேணியில் தங்கியிருக்கிறோம்.

காலையில் தம்பலகாமத்தில் பொம்பர் கொட்டிவிட்டுப் போயிருந்தது. நாங்கள் தங்கியிருந்த இடத்தில், அங்கு நடந்த சேத விபரங்களிலிருந்து யார் யார் எதை எதை எடுத்துக் கொண்டு ஓடினார்கள் என்பதும், யார் யார் எப்படி ஓடினார்கள் என்பது வரை துன்பம் கலந்த நகைச்சுவையாக கதைக் கப்பட்டுக் கொண்டிருந்தது.

பிற்பகலில் குமார் தொதலுடன் வந்திருந்தான். அம்மா எனக்காக தொதல் கொடுத்துவிட்டிருந்தார்.

சமூகஅமைப்பின் மீது எனக்கிருந்த ஆத்திரம், வெறுப்பு யாவற்றையும காட்ட எனக்கு அம்மா தான் அகப்பட்டிருந்திருக்கிறார். நான் குமாரிடம் ஊர் நிலவரம் பற்றி விசாரித்துவிட்டு உடனடியாகப் போகும்படி சொல்கிறேன்.

"அம்மா உங்கள ஒரு துண்டாவது சாப்பிடச் சொன்னவ"

நான் மௌனமாக இருக்கிறேன்.

"காலையில பொம்பர் அடிச்சதால கோயில்ல பூசை நடக்கேல்ல. நான் தான் வீட்ட இருந்த பதிஞ்ச மரத்தில ஏறி தேங்காய் பிடுங்கினனான். கொட்டிலுக்க வைச்சு தான் கிண்டினாங்கள்."

என்னுடைய மனசு இரங்கவில்லை.

அருகில் வெடிச்சத்தம் கேட்கிறது. நாங்கள் அவசர அவசரமாக எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு குமாரையும் இழுத்துக் கொண்டு காட்டிற்குள் விரைகிறோம்.

இரவு முழுவதும் அடைமழை பெய்கிறது. கண்ணாக்காட்டுக்குள் எங்கள் இரவு கழிகிறது.

அடுத்தநாள் தொடர்பு எடுத்து நிலைமையறிந்து எம்மிருப்பிடத்தை அடைகிறோம்.

தொதல் சுற்றிவந்த பேப்பர் மட்டும் நிலத்தில் கிடக்கிறது.

+ + +

**சிங்கப்பல்**
அங்கே ஒரு சிறிய
சிங்கப்பல் நிற்கிறது
ஏனைய
சிங்கப்பற்களிடையே
ஓர் பாழடைந்த சரிவில்
மலர்கின்றன எனவே
அவை எரிகின்றன
அது தன்னுடைய
மஞ்சள் நிற
தலைமயிரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரித்துவிட்டது
தன்னுடைய
உச்சியிலிருந்த
நேற்று மொட்டான
அது
இன்று பிற்பகலில்
பூவாகியுள்ளது

தற்போது அது
கடுமையாகவும்
வலிமையாகவும்
உள்ளது
ஒரு சரியான சிங்கப்பல்
தன்னுடைய சிறிய
தணலினால்
சூரியனின் மிகப் பெரிய
தீயை எதிர்த்து

எத்தனை
பெருமையுடனும்
மகிழ்ச்சியுடனும் அது
வளர்கிறது!
ஆனால் அதற்கு கீழே
கவலைதோய்ந்த
அநுபவமிக்க
மூத்தசகோதரன்
நிற்கிறான்
முதலில் அவை
நெருப்பாகின்றன பின்பு
அவை பனியாகின்றன
பின்பு இவை பழைய
நினைவுகளாகின்றன.

(கவிதை வரிகளுக்குரியவர்
நோர்வேஜிய கவிஞை Inger Hagerup)

✦ ✦ ✦

2000ஆம் ஆண்டு முடிய இன்னும் சில மாதங்களே இருக்கின்ற இந்த வேளையில் என்னுடைய எந்த ஒரு பிறந்த நாளும் முன்னையது போல அமையப் போவதில்லை. அதுவும் குமார் தொதல் கொண்டு வந்து தரப் போவதும் இல்லை.

மப்பும் மந்தாரமும்
மிகுந்த வானம் போல
மனசும் இங்கே.

இந்த இனிய நாட்களுக்கு சமர்ப்பணம்.

☯




....மானுட நேயம் நோக்கிய வாழ்வை
படைத்திட முயல்கையில் எத்தனை தடைகள்
கொடூரம் மிகுந்த விழிகள் தொட
வாழ்தலில் கசப்பு நெஞ்சை நெருடும்
மனிதம் மறந்து சவமாய் கிடந்து
வாழ்தலில் எனக்கு பிரியமேயில்லை....
-செல்வி

செல்வியின் (செல்வநிதி - தியாகராஜா) நினைவாய் அவரது பன்முக ஆளுமைகளையும், சிந்தனைகளையும் பதிவு செய்ய விரும்புகிறோம். செல்வியினால் எழுதப்பட்ட கவிதைகள், கட்டுரைகள், தினக் குறிப்புகள் மற்றும் அவரின் ஓவியங்கள், அவர் எடுத்த புகைப்படங்கள், அவரது புகைப்படங்கள், அவரது ஏனைய எழுத்துப் பிரதிகள் தங்களிடம் இருப்பின் அனுப்பி வைத்து உதவும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். மூலப் பிரதிகள் தங்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும் எனவும் உறுதி அளிக்கிறோம். செல்வி பற்றிய நினைவுகளையும், உங்கள் படைப்புகளையும் நாம் எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு:

**செல்வி படைப்புகள் தொகுப்பு**
**UYIRNIZHAL**
**EXIL, 27 Rue Jean Moulin**
**92400 Courbevoie, FRANCE.**
**e-mail: EXILFR@aol.com**

இத்தொகுப்பிற்கான விடயங்களை இவ் வருடம் டிசம்பர் மாதம் 28ம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைத்து உதவும்படி வேண்டிக் கொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எஸ். பொ. வின்

# இனி - ஒரு விதி செய்வோம் :

அருந்ததி ரத்னராஜ்

நவீனத்துவமான தொடக்கம் - இது புத்தகத்தின் அட்டைப் படமும் முதற் பக்கமும் தரும் உணர்வு. முதற் பக்கம் பாதியாய் நின்று உள்ளிருந்து எட்டிப் பார்க்கின்றது 'இனி' என்ற தலைப்பு. முதலில் இரசிக்கச் செய்தது இந்த வடிவமைப்பு.

பதிப்புரையை அடுத்து வரும் 'முன்னீடு' நிறுத்தி வைக்கின்றது. எஸ். பொ. வின் கருத்துகளின் கனத்துடன் மொழி நடை நின்று, நிதானித்து வாசிக்க வேண்டுகின்றது. இலகுவான வாசிப்புக்கு இப்பகுதி இடம் தரவில்லை. உதாரணத்திற்கு ஒரு வரி-

"உண்மையின் தளமும் ஸ்திதியும் மாறும். இந்த மாறும் இயல்பினாலும் உண்மையின் மகத்துவம் திமிர்க்கின்றது. எனவே உண்மையின் இடையறாத தேடலும் உபாசனையும் மானிடத்தின் மேன்மைக்கான உத்தரவாதமென நான் நம்புகின்றேன்" இரட்சண்ய யாத்திரீகம் படித்த ஞாபகம் ஏனோ வந்து போனது. உரைநடையின் தோற்றத்தையோ அல்லது கவியுணர்வையோ நினைவுபடுத்தும் மொழிநடையாக உள்ளது.

**அடுத்து :**

இந்திரா பார்த்தசாரதியின் முன்னுரை - இந்தப் புத்தகத்தையும் எஸ். பொ. வையும் முழுமையாக அங்கீகரிக்கின்றது. இந்திரா பார்த்தசாரதி இக் கட்டுரைத் தொகுதி 'ஈழ இலக்கிய வரலாற்றின் ஓர் தனிப் பெரும் ஆவணம்' என்றே குறிப்பிட்டு விடுகின்றார்.

> உண்மையின் தளமும் ஸ்திதியும் மாறும். இந்த மாறும் இயல்பினாலும் உண்மையின் மகத்துவம் திமிர்க்கின்றது. எனவே உண்மையின் இடையறாத தேடலும் உபாசனையும் மானிடத்தின் மேன்மைக்கான உத்தரவாதமென நான் நம்புகின்றேன்.

**எழுபதுகளில் எஸ். பொ.:**

இனி, புத்தகத்திற்குள் நுழையலாம் என்றால் மீண்டும் ஒரு 'முன்னீடு' குறுக்கிடுகின்றது. இதில் 70களில் எஸ். பொ. வின் கருத்துநிலைகள் வெளிப்படுகின்றன. பொருளடக்கம் பார்க்கும் வழக்கத்தில் தேடினேன், இதுவரையில் கிடைக்கவில்லை. இப் பகுதியில் தென்னிந்திய பத்திரிகைகள் இறக்குமதி செய்வது பற்றிய சர்ச்சைகள் இடம் பெறுகின்றன. இந்திய பத்திரிகைகளின் இறக்குமதியில் ஈழத்து இலக்கியக்காரர்களின் மத்தியில் இருந்த வேறுபட்ட கருத்து நிலைகள் இக்கட்டுரையில் விவாதிக்கப் படுகின்றது. உலகில் தோன்றும் எந்தத் தரமான இலக்கியமும் படிக்க தடையிருக்கலாகாது என்பதை எஸ். பொ. வலியுறுத்துகின்றார் - இந்த சர்ச்சையில் இவர் எடுத்துக் கொண்ட நிலையை இவரின் இந்த வரிகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

"இந்த உலக முழுதளாவிய என் இன இலக்கிய சுவைப்பிற்கு எதிராக யார் எந்த வகையில் நந்தியாக குந்தியிருந்தாலும் அதற்கு எதிராகப் போராடும் அணியில் என்னைப் பிணைத்துக் கொள்வது தக்கது எனக் கருதுபவன் நான்."

கம்யூனிஸ்டு இலக்கிய இயக்கம் பற்றிய விமர்சனம் நிறைய இக்கட்டுரையில் முன்வைக்கப்படுகின்றது. அவர்கள் தமிழகச் சஞ்சிகைகளின் இறக்குமதித் தடைக்கு கற்பிக்கும் காரணிகளைச் சுட்டிக் காட்டி அதை விமர்சிப்பதாகக் கட்டுரை செல்கின்றது. முகைதீன் அறிக்கை, தமிழகச் சஞ்சிகைகள் தடை செய்யக் கூடாது என்பதற்கான கோஷங்கள் இக்கட்டுரையில் அடங்குபவை.

மேலும், இலங்கை வானொலி பற்றிய தகவல்கள், கலைக் கோல நிகழ்ச்சியில் எஸ். பொ. வின் பங்கும் சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகின்றது. 'திருக்கடைக்காப்பு' என்ற பகுதியில் எம். ஏ. ரஹ்மான் எழுதும் இலங்கை வானொலிக்குள் நடந்த சுவாரஸ்யமான விஷயங்கள் இப்பகுதியில் அடங்கும். சிவத்தம்பியும் கைலாசபதியும் நிறைய இடத்தில் பேசப்படுகிறார்கள். தெரியாதவை தெரிந்து கொள்ள வாசிக்க வேண்டிய பகுதி.

**எண்பதுகளில் எஸ். பொ.:**

இப்பகுதி, பாரிஸ் பகிர்வுகள் என்ற தலைப்பின் கீழ் அடங்குகின்றது. க. கலாமோகன் பிரசுரித்த சிறுநூலின் மறுபிரசுரம் இது. எஸ். பொ. வின் பேச்சும் கலந்துரையாடலுமாக இடம் பெறும் இப் பகுதி சுவாரஸ்யமானது. எஸ். பொ. வின் வாழ்க்கை வரலாற்றை சுவைத்து இரசிக்கலாம். இந்த பாரிஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகிர்வுகளில், கூடவே யாழ்ப்பாணத்திற்கு கம்யூனிஸ்ட் வந்த வரலாறும் ஆபிரிக்காவின் ஆங்கில இலக்கியப் படிப்பும் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

அந்தக் காலத்து யாழ்ப்பாணச் சமுதாயத்தை மிக அழகாக சில வரிக்குள் எஸ். பொ. கொண்டு வருகின்றார். அதாவது,

"ஆசார விதிகளுக்குள் தங்களை அர்ப்பணித்த வேஷதாரிகளாக எங்களுடைய யாழ்ப்பாண மக்கள் இருந்த காலகட்டத்திலேயும், சைவமும் தமிழும் தான் எங்களுடைய இரண்டு கண்கள் என்று இரு மரபும் துய்ய வந்த வேளாளத்தனம் பேசிய காலகட்டத்திலேயும் இருந்த ஒரு யாழ்ப்பாண சமுதாயம்!"

மிகவும் இரசித்துப் படித்த வரிகள் இவை. இந்தச் சமுதாயம் முற்றுமுழுதாக மாறிவிட்டதா? என்பது கேள்வியாக எழுகிறது.

மேலும் இக்கட்டுரையில் சிங்கள வேலைக்காரிகளின் வருகையும் அவர்களுக்கு நடந்த அநியாயமும் கூட மறைக்கப்படவில்லை.

அத்துடன் இலக்கணம், இலக்கியம் பற்றிய விசாலமான கருத்துக்களும் புதிய இலக்கண விளக்கங்களும் சிந்தனைக்குரியதாக இப்பகுதியில் இடம் பெறுகின்றது.

**90களின் எஸ். பொ.:**

இது பன்னிரண்டு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இடம் பெற்ற செவ்விகளின் தொகுப்பு.

அவை தினமணிக்கதிர் - சுபமங்களா - ஓசை - கவிதாசரண் - ஈழமுரசு - வீரகேசரி - நந்தன் - தமிழ்முரசு - தமிழ்ஒளி - நயனம் - செம்பருத்தி- தினமணிக்கதிர் என்பன.

இந்தப்பகுதியில் முதலில் நான் இரசித்து முடித்தது ஒவ்வொரு செவ்விக்கும் வரையப்பட்டிருக்கும் எஸ். பொ.வின் பிரதிமை ஓவியங்கள். ஆதிமூலம், மருது, புகழேந்தி, சேகர் போன்ற தமிழ்நாட்டுப் பிரபல ஓவியர்களின் கோட்டோவியங்கள் புத்தகத்தின் தரத்திற்கு உயர்வூட்டுகின்றன.

பொதுவாக இச்செவ்விகளில் பேசப்படுபவை எஸ். பொ. வின் கதைகள். குறிப்பாக தீ, சடங்கு பற்றிய வினாக்களும் விளக்கங்களும்- கூடவே மீண்டும் சிவத்தம்பியும் கைலாசபதியும்.

இவை தவிர நிறைய விரிவான, ஆழமான

> ரஸனை பாமரத்தனமானது என்கிற ஒரு மருட்சியைத் தோற்றுவிக்கவும் ஒளிவட்டம் துலங்கப் பவனி வந்த புத்திஜீவிகள் ஆரம்பத்தில் அரும்பாடுபட்டார்கள். இலக்கிய விமர்சனம் என்பது ரஸனையிலே வேரூன்றாத புத்திஜீவித முயற்சி என்கிற பிரமேயத்தை பிரேரிப்பதன்மூலம் தங்களுடைய புத்திஜீவி மேலாண்மையை அவர்கள் நிறுவியது ஒரு சுவையான

பார்த்ததும் இதற்கு என்ன விடை? எஸ். பொ. என்ன கூறுவார் என்பது எங்களுக்குத் தெரிந்து விடுகிறது) குறிப்பாகச் சொல்வதாயின் முற்போக்கு இலக்கியக்காரர் பற்றிய 'பேச்சு' அதிகம் வந்தாலும் எல்லாச் செவ்விகளையும் தொகுத்துப் பார்க்கும்பொழுது முற்போக்கு இலக்கியகாரர் பற்றிய ஓர் முழுவிம்பத்தையும் இவரது செவ்விகள் ஊடாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. எஸ். பொ. சொல்லும் கருத்துக்களை விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டியது படிப்பவர் கடமை.

மேலும், ஆக்க இலக்கியக்காரர்தான் ஆக்க இலக்கியத்தை விமர்சிக்க வேண்டும் என்கின்ற தொனி இவர் கருத்துக்களில் தெரிகின்றது. இதை எந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளலாம் என்பது கேள்வி? (Art historians எல்லாரும் Artist?)

ஆனால் எஸ். பொ. குறிப்பிடும் ஆக்க இலக்கிய விமர்சகர்கள் சமநிலையாக இருக்கவில்லை என்பதும் இருட்டடிப்புகளைச் செய்தார்கள் என்பதும் கருத்திற்கொள்ள வேண்டியது தான்.

இந்த ஆக்க இலக்கிய விமர்சனம் பற்றிய ஒர் கேள்வியையும் எஸ். பொ. வின் பதிலையும் இங்கு உதாரணத்திற்கு எடுத்துக் கொள்கிறேன். (ஓசை:செவ்வி)

கேள்வி: தளையசிங்கம், கைலாசபதி, சிவத்தம்பி முதலானோர் விமர்சிக்கும்பொழுது அதில் நயம் இருக்கிறது. ஆனால் தங்களது விமர்சனப் பார்வையில் (?) வக்ரம் தொனித்தது. இதற்கு உள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஆசார விதிகளுக்குள் தங்களை அர்ப்பணித்த வேஷதாரிகளாக எங்களுடைய யாழ்ப்பாண மக்கள் இருந்த காலகட்டத்திலேயும் சைவமும் தமிழும்தான் எங்களுடைய இரண்டு கண்கள் என்று இரு மரபும் துய்ய வந்த வேளாளத்தனம் பேசிய காலகட்டத்திலேயும் இருந்த ஒரு**

வரிகளுக்கால் அறிமுகப்படுத்திக் கொண்டு போகலாம் என நினைக்கிறேன்.

**1. கோஷங்கள் எத்தனை கோஷங்கள்**
'புரட்சி ஓங்குக' எனத் தொடங்கி சோஷலிசம்/எழுத்து என்பனவற்றுடன் கூடிய ஓர் விமர்சனப் போக்குடனான வரலாற்றுக் கட்டுரை.

**2. தமிழன் தாள் வாழ்க**
'தமிழ் வாழ்க' என்று ஆரவாரமாகச் சொல்லுதல் என்னை வகுப்புவாதியாக இனங்காட்டி விடுமோ என்று அக்காலத்திலே பயந்ததற்காக வெட்கப் படுகின்றேன். இன்று 'தமிழ் வாழ்க' என்று உரத்து உச்சாடனம் செய்தல் மகா கௌரவமானது என்று நம்புகின்றேன். எஸ். பொ. வின் முகங்கள் கட்டுரையில் மூடி மறைக்காமல் கொண்டு வரப்படுகின்றது. பொதுவாகத் தமிழ்மொழி பற்றிய சிறப்புக் கட்டுரை என்று கூறலாம்.

**3. மாயப் பிறப்பறுப்போம்**
எப்படி கனத்த ஆங்கில நூல்களைப் படித்து தமிழில் 'பயம்' தரும் கட்டுரை எழுதுதல் என்பது பற்றி விரிவான விளக்கம் கட்டுரையில் இடம் பெறுகிறது. அதாவது எப்படி புத்திஜீவிகள் நம்மை வியப்பில் ஆழ்த்தும் சீரியஸான கட்டுரைகளைத் தந்தார்கள் என மிக விபரணமாக எஸ். பொ. இக் கட்டுரையில் எழுதுகிறார். 'புத்திஜீவிகள்', 'முற்போக்கு லேபல்' என மீண்டும் இங்கு இடிபடுகின்றது.

**4. பொய் எல்லாம் போய் அகல**
தமிழ் இலக்கிய விமர்சனக்கலை எந்த மரபுக் கால் தோன்றி வளர்ந்தது எனத் தொடங்கி சில இலக்கிய விமர்சகர்கள் அதை எவ்வாறு மாற்றி விட்டார்கள் எனச் சொல்லிக் கொண்டு போகிறார்.
இக்கட்டுரையில் வரும் ஒரு பகுதி.
"ரஸனை பாமரத்தனமானது என்கிற ஒரு மருட்சியைத் தோற்றுவிக்கவும் ஒளிவட்டம் துலங்கப் பவனி வந்த புத்திஜீவிகள் ஆரம்பத்தில் அரும்பாடுபட்டார்கள். இலக்கிய விமர்சனம் என்பது ரஸனையிலே வேரூன்றாத புத்திஜீவித முயற்சி என்கிற பிரமேயத்தை பிரேரிப்பதன்மூலம் தங்களுடைய புத்திஜீவி மேலாண்மையை அவர்கள் நிறுவியது ஒரு சுவையான கதை"

எப்படிக் கட்டுரை போய்க் கொண்டிருக்கும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இங்கும் முற்போக்கு இலக்கியவாதிகள் விமர்சிக்கப்படுகிறார்கள். சில உண்மைகள் இங்கு கொண்டு வரப் பட்டிருக்கலாம். தெரியாதவர்கள் தெரிந்து கொள்ள நிறைய உண்டு.

**5. ஓர் எழுத்து : அதன் இலக்கணம்**
இது ஓர் தமிழ் இலக்கணக் கட்டுரை. இலக்கணம் பற்றி அறிய ஆவலாக இருந்தால் படிக்கலாம்.

**6. சுயமரபுத் தேடலுக்கு ஒரு முன்னீடு**
கட்டுரைத் தலைப்புத்தான் கட்டுரையின் உள்ளடக்கம். சங்ககாலத் தமிழனில் இருந்து இன்றைய புலம்பெயர் தமிழன்வரை கட்டுரையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**7. தேடல்: ஆதி ஔவை**
ஔவைக்கு இவர் கொடுத்திருக்கும் முக்கியத்துவம் சந்தோஷப்படுத்துகின்றது. மூதாட்டி ஔவையை மறக்கப்பண்ணி வித்தியாசமாகப் பார்க்க வைத்தது பிரமிக்கச் செய்கின்றது.

**8. கவிதா சஞ்சாரம்**
மரபுக் கவிதை, புதுக்கவிதை பற்றிய தனது கருத்துக்களை முன்வைக்கின்றார். யுகபாரதி இங்கு தூக்கி நிறுத்தப்படுகின்றார்.
யுகபாரதியின் கவிதைகளிலே சொல்லப்படும் பகுதிகளிலும் பார்க்க சொல்லாமல் விடப்படும் ஆனாலும் உணர்த்தப்படும் பகுதிகள் கூர்மையானவை. மௌனத்தின் இந்தச் சாகசங்கள் புதிய கனதியைச் சேர்க்கின்றன. புதுமையை வரவேற்கும் ஓர் சிறந்த கட்டுரை.

**9. தமிழ்த்துவம் ஓர் புரிதல்**
தமிழ்ப் பாடநூல் விமர்சனம். சொற்கள் பற்றிய ஆராய்ச்சி. கனதியான கட்டுரை.

**10. அக்கறை திரமான புலமை**
இலக்கியம் வளர நூல் வடிவம் எந்தளவிற்கு அவசியம் என்பது இங்கு கொண்டு வரப்படுகின்றது. நூல் வடிவம் படும்பாடும் பேசப்படுகின்றது.

**11. தேவை உண்மையின் உபாசகர்கள்**
உண்மை பற்றிய தேடல் பல விஷயங்களை தொட்டுச் செல்கின்றது. கனதியான விஷயங்களுடன் 'புத்திஜீவிக் கட்டுரை'. நிதானத்துடன் இரண்டு தரம் வாசிக்க வேண்டும்.

**12: சிங்கப்பூரில் ஒரு ஞானோதயம்**
தமிழ்த்துவம்: தமிழ்/கலை இலக்கியப் படைப்புகளில் சிங்கப்பூரில் தமிழ் பெறும் இடம், அங்கு தமிழராக வாழ்பவர்களின் நிலை.
சின்னக் கட்டுரைக்குள் சிறப்பாகக் கொண்டு வந்திருக்கிறார். இந்தக் கட்டுரையில் எழும் கேள்வி சிந்திக்க வைக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோடம்பாக்கத்தின் நடிகர்களும் நடிகைகளும் 'ஸ்டார் நைட்' என்கிற பெயரால் நடத்தும் கூத்துக் கள்தான் 20ம் நூற்றாண்டின் 'உச்சமான' தமிழ்க் கலைவடிவங்களா?

இது சிங்கப்பூருக்கு மட்டும் பொருந்தாது. இன்று உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அமோகமாக வரவேற்கும் 'உச்சமான' தமிழ்க்கலை வடிவம் இதுதான்.

### 13. இவ்வழி ஏகின் எவ்வழி புக்கும்?

'தமிழ் அவுஸ்திரேலியா' என்கிற வழக்கை அறிமுகப்படுத்தும் கட்டுரை. சங்ககாலத்திற்கு முன்பிருந்த தமிழரைப்பற்றிப் பேசத் தொடங்கி தமிழ் சைவம் பற்றிய ஓர் விரிவான நோக்கை உள்ளடக்குகின்றது.

### 14. மலேசியா : ஓர் இலக்கியம்

ஏனைய கட்டுரைகளைப் போன்றே இது ஒரு மலேசியப் பயணம் எங்களுக்கும்.

### 15. இனி புத்தாயிரம்

"அடுத்த நூற்றாண்டின் தமிழ்க் கலை இலக்கியப் படைப்பு வல்லபங்களை புலம்பெயர்ந்த ஈழவர் முன்னெடுத்துச் செல்வார்கள்"

இதுவும் ஓர் தமிழன் வரலாறு கூறும் கட்டுரை. அரிச்சந்திர நாடகத்தை பிரித்தானிய அரசவையில் நடத்திக் காட்டிய ஈழத்தவரான முத்துக்குமார சுவாமியையும் 'சிவநடனம்' படைத்த கலாயோகி ஆ. குமாரசுவாமியையும் கூறி இந் நூற்றாண்டுத் தமிழர் வரை கொண்டு வருகிறார். யூத இனத்துடன் தமிழரை ஒப்பிட்டுக் கூறும் கருத்துக்கள் வேறு சில கட்டுரைகளிலும் இடம் பெற்றுள்ளது. இங்கும் உண்டு.

### 16. வள்ளுவர்நிழலில்

"20ம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தைப் புலம்பெயர்ந்த தமிழர்களே தலைமை தாங்கி நடத்துவார்கள்" என்ற இவரது கோஷம் ஓங்கி ஒலித்துக்கொண்டு இந்த இறுதிக் கட்டுரை தொடங்குகின்றது. மேலும் கட்டுரையின் தொடக்கத்திலேயே ராஜீவ் கொலையும் மரணதண்டனையும் பற்றிய தனது சிந்தனை ஓட்டங்களை இக் கட்டுரையில் கொண்டு வருவதுபற்றி எஸ். பொ.

## உலகில் தோன்றும் எந்தத் தரமான இலக்கியமும் படிக்க தடையிருக்கலாகாது.

குறிப்பிடுகிறார். அதுவே கட்டுரையாகின்றது. தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் பலமாக விமர்சிக்கப்படுகிறார்கள். குறிப்பாக 'துக்ளக்' சோ விமர்சனத்துக் குள்ளாக்கப்படுகிறார்.

இந்தப் பகுதியில் இடம்பெறும் 16 கட்டுரைகளும் படிக்கத்தக்கவை. விசாலமான பார்வை கொண்டவை. உலகத் தமிழ் பற்றிய அறிதலைத் தருபவை.

பின் அட்டை மீண்டும் வர்ணக் கலவையாக முடிகின்றது. அதில் உறுத்திக் கொண்டிருக்கும் சிவப்பு வர்ணம் உள்ளடக்கத்தில் தரிசித்த சூடான விவாதங்களை நினைவு கூருகின்றது.

### முடிவுரை:

எழுபதுகளில் எஸ். பொ. என இக்கட்டுரைத் தொகுதி தொடங்கி இருந்தாலும் கிட்டத்தட்ட நாற்பதுகளின் பிற்பகுதிகளில் இருந்தே ஈழத்து இலக்கிய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு இத்தொகுதி உதவுகின்றது. ஈழத்து இலக்கிய வரலாற்றின் ஓர் மறுபக்கத்தை அறிய ஆர்வமானவர்களுக்கு இத்தொகுதி சுவாரஸ்யமானது. சர்ச்சைகளும் கருத்து வேறுபாடுகளும் பற்றித் தெரிந்திராத இக்கால தமிழ்ச் சந்ததிக்கு நிறைய புதிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பாடமாகக் கற்பவர்களுக்கும் இப் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடிக்கப் பல விடயங்கள் உள்ளன.

ஆனால் திரும்பத் திரும்ப சில விஷயங்கள் வந்து போவதுதான் கொஞ்சம் எரிச்சலூட்டுகின்றது. அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகளும் செவ்விகளும் அப்படியே இடம் பெற்றிருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

எஸ். பொ. என்ற மனிதரைச் சந்திக்காதவர்களும் இக் கட்டுரைத் தொகுதியைப் படித்தால் அவரைச் சந்தித்து உரையாடியது போன்று உணர்ந்து கொள்ளலாம்.

---

**பிழை திருத்தம்:**

சென்ற இதழில் (உயிர்நிழல் ஜூலை-ஆகஸ்ட் 2000, இதழ்14) இல் எம்மால் அவதானிக்கப்பட்ட சில அச்சுப்பிழைகள்:

பொருளடக்கத்தில், புரிதல் என்பதற்குப் பதிலாக புரிதலின் அவலம்.

பக். 37 இல் உள்ள கவிதைக்கான கவிஞரின் பெயர் அயூ ப் என்பதற்குப் பதிலாக தையூ ப்.

மேலும் ஏதாவது பிழைகள் இருப்பின் வாசகர்கள் மன்னித்துக் கொள்ளவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எஸ். பொ. வின் கருத்தியல் பிரமைகள்

யமுனா ராஜேந்திரன்

கடந்த சில வருடங்களாக அதீதமான பொதுமைப்படுத்தப்பட்ட கருத்தாக்கங்களுடன் ஈழத் தமிழ்ப்படைப்பாளிகளுக்கும் தமிழகப் படைப்பாளிகளுக்கும் இடையில் விரோத மனப்பான்மையை உருவாக்கும் வகையில் விநோதமானதொரு இலக்கிய அரசியலை எஸ்.பொ. முன்வைத்து வருகிறார். எஸ்.பொ.வின் படைப்புகள் குறித்துப் பேசுவது இங்கு எனது நோக்கமில்லை. அவரது இலக்கிய அரசியல் குறித்துச் சில அபிப்ராயங்களை முன்வைப்பது மட்டுமே நோக்கமாகும். எஸ். பொ. வின் அபிப்ராயங்கள் அவரது சமீபத்திய புத்தகமான 'இனி ஒரு விதி செய்வோம்' தொகுப்பில் விரிவாக இடம் பெறுகிறது. இதுவன்றி தமிழக, புகலிட, ஈழ இதழ்களிலும் மேடைப்பேச்சுக்களிலும் திரும்பத் திரும்ப சில அபிப்ராயங்களைக் கடுமையாக முன் வைத்து வருகிறார்.

**"வரலாற்றுரீதியில் தமிழகத் தமிழ் இலக்கியவாதிகள் ஈழ இலக்கியவாதிகளை இருட்டடிப்புச் செய்து வந்திருக்கிறார்கள் . தமிழக இலக்கியவாதிகள் ஈழப் படைப்பாளிகளின்மீது ஆதிக்கம் செய்து வருகிறார்கள்"**

"தமிழகத்திற்கு வெறும் ஆறுமுகமாக வந்தவரை நாவலராக்கி அவரை ஈழத்துக்கு அனுப்பினோம்" எனும் மாலனின் அபிப்ராயங்களை முன்வைத்தும் - "புகலிடத் தமிழ் வேற்றுக் கிரகத்தவர் தமிழ் மாதிரியிருக்கிறது" எனும் சுஜாதாவின் அபிப்ராயங்களை முன்வைத்தும்- "ஈழத்தமிழ் எழுத்துக்களுக்கு அடிக்குறிப்புக்கள் போடவேண்டும்" எனும் கி.வா.ஜ. வின் அபிப்ராயங்களை முன்வைத்தும் முதலாவது வாதத்திற்கு ஆதாரங்களை முன் வைக்கிறார் எஸ். பொ.

இந்த அபிப்ராயங்களுக்கு எதிராக கருத்தியல் ரீதியில் மிகுந்த விமர்சனத்திற்குரிய ஆறுமுக நாவலரின் எழுத்துக்கள் பற்றி எந்த விதமான விமர்சனப் பிரக்ஞையும் இல்லாமல் அவரது சனாதனக் கருத்தியலை எஸ். பொ. பற்றி நிற்கிறார். சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்தையும் சாதீய அமைப்பையும் கட்டிக் காத்த அவரது மேட்டுக்குடித் தமிழ் அபிமானம் குறித்து மாலனுக்கும் விமர்சனங்கள் இல்லை எஸ்பொ.வுக்கும் விமர்சனம் இல்லை. 'அடிக்குறிப்புக்கள் போடுவது' மற்றும் 'வேற்றுக்கிரக மொழி' போன்ற அபத்த அபிப்ராயங்களை தமிழகத்தில் எந்தச் சுரணையுள்ள தீவிர எழுத்தாளனும் ஆதரிப்பதுமில்லை; அவர்களின் அபிப்ராயங்களுக்கு எந்தப் படைப்பிலக்கியவாதியும் மரியாதை செய்வதுமில்லை. இந்த மூவரின் அபிப்ராயங்களை மையப்படுத்திக் கொண்டு தமிழகப் படைப்பிலக்கியவாதிகளுக்கு எதிரான மனோபாவத்தை உருவாக்குவதில் எந்த அர்த்தமும் இல்லை; கருத்தியல் வலுவும் இல்லை.

**"தமிழகத்தில் தமிழ் செத்துவிட்டது. தமிழகத்தில் தமிழ் பேசுவது அரிதாகி விட்டது. தமிழக இலக்கியவாதிகளெல்லாம் கோடம்பாக்கச் சினிமா வட்டாரத்தில் சரணடைந்து விட்டார்கள்"**

'தமிழகத்தில் தமிழ் செத்துவிட்டது' என்பது மிகமிக அபத்தமான கூற்று. தமிழ் பயிற்றுமொழி தொடர்பான அரசியல் நெருக்கடி இருப்பது உண்மைதான். இதற்கு தமிழ்ப் படைப்பு மொழி செத்துவிட்டது என்று அர்த்தமில்லை. இன்னும் தமிழுக்காகச் சதா மாரடித்துக் கொள்கிற தமிழகத் தமிழ் மறவர்களிடமிருந்து படைப்பிலக்கியம் ஏதும் வரவில்லை. கடந்த பத்தாண்டுகளில் தமிழின் மிக முக்கியமான நாவல்கள் வந்திருக்கின்றன. கவிதைத் தொகுதிகள் வந்திருக்கின்றன. சிறு பதிப்பகங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவில் சர்வதேசிய எழுத்துக்களை தமிழுக்குள் கொண்டு வந்திருக்கின்றன. சு. ரா., பாமா, சிவகாமி, சாருநிவேதிதா, ஜெயமோகன், பொன்னீலன், பிரபஞ்சன், பிரம்மராஜன், மனுஷ்யபுத்திரன் போன்றோரது முக்கியமான நூல்கள் வெளியாகியிருக்கின்றன. விடியல், தாமரைச் செல்வி, ஸ்நேகா போன்ற பதிப்பகங்கள மிகமுக்கியமான நூல்களைக் கொண்டு வந்திருக்கின்றன. எஸ். வி. ராஜதுரை, வ.கீதா, அ. மார்க்ஸ், ராஜ்கௌதமன், முத்துமோகன், தமிழவன், ஞானி போன்றோரது கோட்பாட்டு நூல்கள் வந்திருக்கின்றன. கோடம்பாக்கத்திற்கு அலைந்தவர்களும் அதைக் கெட்டுக் குட்டிச்சுவராக்கியவர்களும் சதா தமிழை முழங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்பவர்கள்தாம். கோடம்பாக்கத்தைப் பற்றியும் பொத்தாம் பொதுவாக எஸ். பொ. கருத்து திரிப்பது அபத்தம். சமீப பத்தாண்டுகளில் கோடம்பாக்கத்திலிருந்து சில நல்ல படங்கள் வந்திருக்கிறது. அங்கே மாற்றுச் சினிமாவுக்காகப் போராடுகிறவர்களும் இருக்கிறார்கள். பாலுமகேந்திரா சின்னத்திரையில் அதை சரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்து கொண்டிருக்கிறார். ஞானராஜசேகரன், பாலா போன்றவர்கள் குறிப்பிடத்தக்க படங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 'காஞ்சனை' மற்றும் 'நிழல்' போன்ற திரைப்பட இயக்கங்கள் திரைப்படங்களை மக்களிடம் எடுத்துச் செல்ல திரைப்படவிழாக்களை ஏற்பாடு செய்து வருகிறது. ஸ்தூலமான எடுத்துக் காட்டுக்களோ அல்லது நடைமுறை உண்மைகளோ எதுவும் கணக்கிலெடுக்கப்படாமல் பொத்தாம் பொதுவாக 'தமிழ் செத்துவிட்டது' என்பதும் 'இலக்கியவாதிகள் கோடம்பாக்கத்திற்கு விலை போய்விட்டார்கள்' என்பதும் அபத்தம். இதில் கிஞ்சிற்றும் உண்மையில்லை.

**"புகலிடத்தில் வாழ நேர்ந்திருக்கிற படைப்பாளிகள்தான் இருபத்தியோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்திற்குத் தலைமை தாங்குவார்கள். அவர்கள் அங்கு தமிழை பல்வேறு தடைகளையும் கடந்து பேணி வருகிறார்கள். பிற மொழிகளைக் கற்கவும் பேசவும் அதில் எழுதவும் அவர்களுக்கு வாய்த்திருப்பதால் சர்வதேசியத் தரமான படைப்புகளை இனி அவர்களே தரமுடியும்"**

புகலிடத் தமிழ் எழுத்துக்கள் சந்தேகமில்லாமல் தமிழில் ஒரு புதிய பரிமாணம். இந்தப் பரிமாணம் கூட 50-60களில் குடிபெயர்ந்த மேட்டுக்குடி ஈழத் தமிழர்களாலோ தமிழகத் தமிழர்களாலோ உருவாக வில்லை. உயிர் வாழ்தலுக்காகத் தப்பி வந்த மன உழைச்சலுற்ற ஈழத்தமிழர்கள் தான் இந்த எழுத்து வகையை உருவாக்கினார்கள். இதையும் பொத்தாம் பொதுவான 'புகலிட இலக்கியம்'என்று வரையறை செய்துவிட முடியாது. இங்கும் சாதீய, பால்சார்ந்த, இனநெருக்கடி சார்ந்த பல்வேறு மாறுபட்ட போக்கு கள் கொண்டதாகவே இவ்வகை இயங்குகிறது. அடுத்த தலைமுறையைச் சார்ந்த ஈழத்தமிழர்கள் தமிழைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் கொஞ்சமே உண்மையிருக்கிறது. சைவம் தான் தமிங்கிலீஷில் தழைத்தோங்குகிறதே யல்லாமல் தமிழ் மொழி அல்ல. இங்கும் தமிழ் மொழியைக் காப்பாற்றிக் கொண்டிருப்பவர்கள் பிரக்ஞையுள்ள படைப்பாளிகள் தான். தமிழகத்திலும் பிரக்ஞையுள்ள படைப்பாளிகள் தான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எண்ணிக்கையையும் வாழ நேர்ந்ததையும் மட்டுமே வைத்துக் கொண்டு உச்ச பட்சமான படைப்புக்களை ஈழத்தமிழர்கள் தருவார்கள் என்பது பிரமையாகும். முதலில் நிறைய மொழி மாற்றங்கள் நிகழவேண்டும். பண்பாட்டுக் கலப்பும் புரிதலும் நிகழ வேண்டும். புகலிட ஆக்க இலக்கியத்தையும் கோட்பாடுகளையும் ஆழக் கற்க வேண்டும். அதுவெல்லாம் நிகழ்ந்திருக்கிறதா என்பது மிகப் பெரிய கேள்வி. மொழி அறிவதால் மட்டும் சர்வதேசியத் தரமான படைப்புகள் தோன்றி விடுவ தில்லை. வாழ்வும் வரலாறும் மனித ஆன்மாவும் குறித்த தரிசனமுமே படைப்பிலக்கியத்திற்கு மிகவும் அடிப்படையானதாகும். தமிழகத் தமிழர்கள் நிறைய மொழிபெயர்ப்புக்களைச் செய்திருக்கிறார்கள். மேலைத்தேயக் கோட்பாடுகள் இலக்கியக் கொள்கை களை ஏற்கனவே தமிழுக்குக் கொண்டு வந்திருக் கிறார்கள். சர்வதேசியத் தரமான படைப்புக்களும் அவர்களிடம் இருக்கிறது. உலகமயமாதலினால் இன்று நிறையத் தமிழக இலக்கியவாதிகளும் கோட்பாட்டாளர்களும் மேற்கிலும் அமெரிக்காவிலும் வாழத் தலைப்பட்டிருக்கிறார்கள். அவர்களிலும் மேலைத்தேய மொழி தெரிந்தவர்கள் நிறைய இருக்கிறார்கள். பிரக்ஞையுள்ள முன்னெடுப்புக்களும் அறிதலும்தான் இப்போது முன்னிலைப்படுத்தப்பட வேண்டுமெயொழிய ஈழத், தமிழக விரோதவுணர்வு அல்ல. ஈழத்துக் கவிதை சந்தேகமில்லாமல் உச்சங்களைத் தொட்டிருக்கிறது. காரணமாக, உயிர்வாழ்தலின் நெருக்கடியைச் சுட்டலாம். நாவல், சிறுகதைகள், கோட்பாட்டு எழுத்துக்கள், மொழி பெயர்ப்புக்கள் போன்றவற்றில் தமிழகத் தமிழர்கள் சமகாலத்தில் வெகுதூரம் பயணம் செய்திருக்கி றார்கள்.

தமிழகத்தில் மார்க்சீய விரோதிகளுக்கும் கா.சிவத்தம்பி, க.கைலாசபதி போன்ற சிந்தனையா ளர்களுக்கும் எதிரான சித்தாந்திகளுக்கு எஸ். பொ. வின் அபிப்ராயங்களை ஊதிப் பெருக்கவேண்டிய அவசியங்கள் இருக்கிற சூழலில். எஸ். பொ. வின் இத்தகைய அபிப்ராயங்கள் அப்பட்டமான இலக்கிய அரசியலாகும். எஸ். பொ. வின் அபிப்ராயங்கள் மார்க் சீயத்தின்பாலான விரோதத்தினாலும் அவரது விமர்சனபூர்வமல்லாத இனஅரசியலின் அபிலாஷை களாலும் உந்தப்பட்டதாகும். கடந்த முப்பது ஆண்டுகளாக கோட்பாட்டுத் தளத்திலும் சரி, அரசியல் தளத்திலும் சரி, நிகழ்ந்த வளர்ச்சிகள் எதையுமே அவர் செரித்துக் கொள்ளவில்லை என்பதுவே அவரது இன்றைய இலக்கிய அரசியலின் அடிப்படையாக அமைகிறது.

படைப்பிலக்கியத்தைப் பொறுத்தவரையில் தமிழகத் தமிழர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையில் பரஸ்பர அங்கீகாரமும் தோழமையும் சகோதரத்துவமும் நிலவுகிறது. வணிக எழுத்தாளர் கயும் பிரபலங்களையும் எதிர்க்கிற போக்கில் தீவிர கலை இலக்கியவாதிகள்பாலும் ஒட்டுமொத்த தமிழக சிந்தனையாளர்கள், தமிழகத் தமிழர்கள் பாலும் விரோதவுணர்வைத் தூண்டுவ தாகவே எஸ். பொ. வின் அபிப்ராயங்கள் அமைகிறது.

எவரும் எவருக்கும் தலைமை தாங்குவது எனும் எண்ணங்கள் ஆதிக்கத்தின் பொருட்டும் அரசியல் இலாபங்களின் பொருட்டும்தான் மேற்கொள்ளப் படுகிறது. எஸ்.பொ. வின் அபிப்ராயங்கள் நிகழ்ந்து வரும் எந்த வளர்ச்சிகளையும் கணக்கிலெடுத்துக் கொள்ளாத அதிரடி அபிப்ராயங்களாகும்.

எஸ்.பொ. வுக்கு ஈழத்தையும் தமிழகத்தையும் எதிரெதிராக நிறுத்தி வீராவேசமாக 'ஈழத்தமிழர் புகலிட இலக்கியமே உலகத் தமிழர்க்குத் தலைமை யேற்கும்' என ஒரு கோஷத்தையும் முன்வைத்து தனது இலக்கிய அரசியலை நிறுவிக் கொள்ள சொந்த நியாயங்கள் இருக்கலாம்; ஆனால் அவை யதார்த் தத்திலும் நடைமுறையிலும் வேர் கொள்ளாதவை என்பதை நாம் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீக்குளிக்கும் மனங்கள்!

குரு அரவிந்தன்

சுரேன் மருத்துவமனைக்குப் போகும்போது மழை கொட்டிக் கொண்டிருந்தது. போதாக் குறைக்கு, குளிர் வேறு அவனை நடுங்க வைத்தது. குளிரில் நடுங்கினானா அல்லது எதிர் காலத்தை நினைத்து நடுங் கினானா என்பது அவனுக்கே புரியவில்லை. சுபாவையும் குழந் தையையும் வீட்டிற்கு கூட்டிப்போக டாக்டர் அனுமதித்தால் டாக்சி ஒன்றை பிடித்துக் கொண்டு போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

பஸ்சுக்குள் இருந்த சூடு இதமாக இருந்தாலும், ஏனோ அவனுக்கு அவர்கள்மேல் வெறுப் பும் வந்தது.

சுரேன் வேலையை இழந்த போதும் சரி, வேலையை இழந்தவர் களுக்கான இன்சூரன்ஸ் பணத்தைப் பெற்ற போதும் சரி, சுபா எதுவுமே சொல்லவில்லை. வேலை இழந்த வர்களுக்கான இன்சூரன்ஸ் பணம் நிறுத்தப்பட்டபோது சுபாவிற்கு அதிஷ்டவசமாய் ஒரு வேலை கிடைத்ததால் அந்த வருமா னத்தை வைத்துக் கொண்டு ஒருவாறு குடும்பச் செலவைச் சமாளித்தனர். எவ்வளவோ தேடி யும் பொருத்தமான ஒரு வேலை அவனுக்குக் கிடைக்கவில்லை என்பதையிட்டு அவளுக்குச் சிறிது மனைவிக்கிடையில் சில சமயங்க ளில் மனஸ்தாபம் ஏற்படத் தொடங் கியது. அது மட்டுமல்ல அவளது உழைப்பில் தான் சாப்பிடுவதாக அவனுக்குள் ஒருவித தாழ்வு மனப்பான்மையும் ஏற்பட்டது. ஆனாலும் அந்த நிலையைத் தவிர்க்க முடியாதென்பதால் அவன் அதைத் தனக்குள் ஜீரணித்துக் கொண்டான். அவர்களுக்குள் இருந்த சூழ்நிலையின் இறுக்கத் தைத் தளர்த்தவோ என்னவே அந்தச் செய்தி குடும்ப டாக்டரின் வாயால் வந்தது.

“ உண்மையாவா டாக்டர்? ” என்றான் வியப்புடன்.

“ஆமாம்.... தகப்பனாகப் போகி றீர்கள்! எனது வாழ்த்துக்கள்!” என்று சொல்லி சுபா கர்ப்பமாய் இருப்பதை நிச்சயப் படுத்தினார் டாக்டர்.

அவள் தாய்மை அடைந்ததில் அவனுக்குச் சந்தோஷம். குடும்பப் பொருளாதார நிலையை நினைத்து வருத்தப்பட்டாலும் குழந்தை ஒன்று வீட்டில் தவழ்ந்தால் அவர்களுக் குள் உள்ள இறுக்கம் தளரும் என்று எதிர்பார்த்தான்.

“இந்த நிலையில் எங்களுக்கு ஒரு குழந்தை வேண்டுமா?” என்று சுபா அவனிடம் தனிமையில் கேட்ட போது, அவன் எதுவும் பேசாமல் மௌனம் சாதித்தான்.

அவளுக்குப் பதில் சொல்லும் நிலையில் தான் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அம்மா தங்களோடு இருக்கும்போது குழந்தையை வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்று எதிர்பார்த்தான். சுபாவும் அந்த நல்ல செய்தியை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருக்க

அவனது மனது மட்டும் விறைத்துப் போயிருந்தது. இரண்டு நாட்களாக குழம்பிக் கிடந்த மனசை ஒருவித மாகத் தேற்றிக்கொண்டுதான் ஆஸ்பத்திரிக்கு கிளம்பினான்.

குழந்தை பிறந்ததில் இருந்து அம்மா ஏன் இப்படி நடந்து கொள் கிறாள் என்பது அவனுக்குப் புரி யாத புதிராக இருந்தது. அம்மா இங்கே வந்து ஒரு வருடம்தான் ஆகிறது. தன்னுடைய சம்மதம் இல்லாமல் நடந்த திருமணம் என்ப தால் தொடக்கத்தில் இருந்தே அம்மாவிற்குச் சுபாவைப் பிடிப்ப தில்லை என்பதும் அம்மாவின் இப்படியான செய்கைகளுக்கு உறவினர்களும் ஒரு காரணம் என்பது அவனுக்குத் தெரியும். ஊர் வம்பு என்றால்இலவச ஆலோசனை கொடுப்பதில் பழக்கப் பட்டவர்கள். ஒத்துப் போகாவிட்டால் போட்டு மிதிப்பார்கள்; இல்லாவிட்டால் தூற்றிவிட்டுப் போவார்கள். அம்மாவிற்கு உரமேத்திவிடும் இந்தச் சொந்தங்களை நினைக்க ஏமாற்றமாகவே இருந்தது. எப்படி யாவது ஒரு வேலைதேடி எடுத்து விடுவான் என்ற நம்பிக்கையோடு அவளது வருமானத்தில் அவர்கள் காலத்தை ஓட்டினர்.

அலுவல கத்தில் கூடுதலான வேலை இருக்கும்போது அவள் அதை முடித்து விட்டு தாமதமாகத் தான் வீட்டிற்கு வருவாள். மாமியார் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருப்பதும் அவளைத் தொடர்ந்து வரும் மாமியாரின் அந்த மௌனப் பார்வையும் அவளுக்குப் பிடிப்பதில்லை. அந்தப் பார்வை யைத் தவிர்ப்பதற்காகவே அவள் அனேகமான நாட்களில் மேலதிக வேலை செய்துவிட்டுத் தாமதமாக வீடுவரத் தொடங்கினாள்.

“எங்கே போய்ச் சுத்திட்டு வர்றான்னு கேட்கமாட்டியா? ” அம்மா முணுமுணுத்தாலும் சுரேன் மௌனம் காத்தான்.

பொருளாதார நெருக்கடி காரணமாகச் சின்னச் சின்ன விடயங்களுக் கெல்லாம் கணவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில்லை. பொருளாதாரச் சுமை போதாதென்று இதுவும் ஒரு சுமையாகப் போவதாக நினைத்தாள். கருவை அழிக்கவும் மனம் இடம் தராதபடியால் வருவது வரட்டுமென்ற நம்பிக்கையோடு கருவைச் சுமந்தாள்.

மாதங்கள் செல்லச் செல்லத் தாய்மையின் பொலிவில் சுபா மேலும் அழகாகத் தெரிந்தாள்.

"காங்கிராட்யுலேஷன் மிஸ்டர் சுரேன்! பேபி கேர்ள்!" டாக்டர் அவனது கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டுப் போனார்.

குழந்தையைக் குளிப்பாட்டி கொண்டு வந்து கொடுத்தாள் நர்ஸ். புதிய வாரிசைப் பார்க்கும் போது தாயாரின் முகம் எப்படி மலரும் என்று கற்பனை பண்ணிக் கொண்டு தாயைப் பார்த்தான்.

என்ன இது? முகம் மலர்ந்து உடம்பு பூரித்துப் போவதற்குப் பதிலாக ஏன் அம்மாவின் முகம் இப்படிக் கறுத்துப் போகிறது?

பெண்குழந்தை என்பதால் அம்மாவிற்குப் பிடிக்கவில்லையோ?

"என்னம்மா பேத்தி என்னவாம்?" ஆவலோடு தாயாரைப் பார்த்துக் கேட்டபடி அருகே வந்தான்.

தாயார் எதுவும் பேசாமல் குழந்தையை அவனிடம் கொடுத்து விட்டுத் தன் நெற்றியை அழுத்திப் பிடித்தபடி அருகே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

"என்னம்மா, என்னாச்சு?" சுரேன் பதறிப் போய்க் கேட்டான்.

"இல்லை தலை கிறுகிறுக்குது, அது தான் தாங்க முடியவில்லை!"

தாய் தன்னிடம் எதையோ மறைக்கிறார் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

அவன் இப்போ குழந்தையின் முகத்தை வெளிச்சத்தில் வடிவாகப் பார்த்தான்.

"என்ன இது?" தன்னையறியாமலே வாய் விட்டுச் சொல்லிக் கொண்டு தாயாரைத் திரும்பிப் பார்த்தான்.

"குழந்தையை மாறிக் கொடுத்துவிட்டார்களோ?"

எப்படி? எப்படி இது சாத்தியமாகும்? அவனுக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது.

குழந்தையின் தோல், இமை முடி எல்லாம் வெள்ளையாய்....!

'காட்டுக் கரியன்' என்று சில நண்பர்கள் அவனைப் பழிக்கும் போதுகூட வராத தாழ்வு மனப்பான்மை இப்போது அந்தக் குழந்தையைப் பார்த்ததும் அவனுக்கு பீறிட்டுக் கொண்டு வந்தது. நெஞ்சுக்குள் விடைதெரியாக் கேள்விபோல ஏதோ வலித்தது.

குழந்தையை சுபாவிற்கு அருகே கிடத்திவிட்டு அவளைப் பார்த்தான். சுபா இன்னமும் அரை குறைத் தூக்க மயக்கத்திலிருந்தாள்.

"சுபா... சுபா! குழந்தையைப் பார்த்தியா?" பதட்டப்பட்டான்.



அவள் மெல்லக் கண்திறந்து குழந்தையைப் பார்த்துவிட்டு மீண்டும் கண்கள் செருக மயங்கிப் போனாள்.

அந்த நேரம் உள்ளே வந்த டாக்டர் அவனது பதட்டத்தைப் புரிந்து கொண்டு அவனுக்கு குழந்தையைப் பற்றிய சில விளக்கங்களைச் சொன்னார்.

மயக்க நிலையில் சுபா இருந்தாலும் டாக்டர் சொல்வதெல்லாம் அவளுக்கும் கேட்டது.

"மிஸ்டர் சுரேன்! நீங்கள் குழந்தையின் தகப்பன் என்ற முறையில் இந்தப் பிரச்சனையை மிகவும் கவனமாக அணுக வேண்டும். எப்படி இந்தக் குழந்தை வெள்ளை நிறத்தோடு பிறந்தது என்று வீணாக அலட்டிக் கொள்ள வேண்டாம். எப்போதாவது ஒரு குழந்தை இப்படிப் பிறப்பதுண்டு. இதை 'அல்பினோ' என்று சொல்வார்கள். தோலிலும் முடியிலும் இதனால் ஏற்படும் நிறமாற்றத்தை அவதானிக்கலாம். இவர்களுக்கு சூரிய வெளிச்சத்தைப் பார்க்கும் போது கண்கூட அடிக்கடி கூசுவது போல இருக்கும். இதைத் தவிர வேறு எந்தக் குறைபாடும் இவர்களிடம் இருக்காது. மற்றும்படி ஆரோக்கியமாகவே இருப்பார்கள். பயப்பட ஒன்றுமில்லை. இதற்காகக் கவலைப் படவேண்டாம். டேக்கிட் ஈஸி!" டாக்டர் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டுப் போனார்.

தாயார் ஏற்கனவே வீட்டிற்குப் போய்விட்டபடியால் அவன் தாமதமாகத்தான் வீட்டிற்குத் திரும்பிப் போனான்.

உள்ளே நுழைந்தபோது அம்மா யாருடனோ போனில் பேசிக் கொண்டிருப்பது அவனுக்கும் கேட்டது.

"வெள்ளைக்கார பொஸ் ஜாக்கோ ஜாக்ஸனோவாம், ஓவர்டைம் செய்யச் சொல்லுறார் என்று வீட்டிலே வந்து சொல்லும் போதே நினைத்தேன். ஓவர்டைம் செய்யிறேன் என்று சொல்லி நேரம் கழிச்சு வீட்டிற்கு கண்ட நேரத்திலையும் வரும்போதே ஏதோ விபரீதம் நடக்கப் போகுதென்று எனக்குத் தெரியும். அப்படியே நடந்திட்டுது. இப்படி ஒரு அவமானத்தோடை எப்படி இனி இங்கே இருப்பன். யார் முகத்திலை முழிப்பன்?"

அம்மா யாரோடு பேசுகிறா? மறுபக்கத்தில் யாராய் இருக்கும்? வம்பளக்கிறார்கள்!

"ஆமா... பார்த்தால் பரமசாது மாதிரி இருந்து கொண்டு எல்லாருக்கும் தண்ணி காட்டிவிட்டாள். இந்தமாதிரி ஊமாஞ்சிகளை எல்லாம் நம்பக்கூடாது!"

சுபாவைப் பற்றி ஏச்சுக்கள், திட்டுக்கள் எல்லாம் அவன் காதில் விழுந்தன.

"என்னம்மா? இப்ப என்ன நடந்து போச்சென்று இப்படிக் குதிக்கிறீங்க?" சுரேன் இடைமறித்துக் கேட்டான்.

"இன்னும் என்ன நடக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கு? நீ ஒரு ஆம்பிளையாக இருந்தால் தானே அவள் உனக்கு அடங்கி நடக்கிறதுக்கு! இரவிர வாய் ஆடிப்போட்டு வந்து இப்ப கையிலை ஒண்டோட.... இதை யாரிடம் போய்ச் சொல்வேன்!" என்று அம்மா ஒப்பாரி வைத்து தலையில் அடித்துக் கொண்டாள்.

"அம்மா தயவு செய்து பொறு மையாய் இருங்கோ! டாக்டர் விபர மாய் எல்லாம் சொன்னவர். இது 'மெலனின் பிக்மென்ட்' என்று சொல்லப்படும் நிறப்பொருள் கலம் இல்லாத காரணத்தால் சில குழந்தைகளுக்கு வரும் ஒருவித குறைபாடாம். எங்க கஷ்டகாலம் என்னுடைய குழந்தைக்கு வந்தி ருக்கு!"

"உன்னுடைய குழந்தையோ? நீ சும்மா மழுப்பாதை! குழந்தையைப் பார்த்திட்டு உன்னைப் போல இருக்கென்று யாராவது சொல்லுவி னமே? எப்படிச் சொல்லுவினம்.... கண்ணும், நிறமும், உன்னுடைய சாயல் இருந்தாத்தானே?"

"அம்மா சும்மா இருங்கோ! நீங்களும் ஒரு பெண் தானே! மனம் நொந்து போய் நாங்கள் இருக்கி றது போதாதென்று கண்டபடி நீங்களும் பேசாதையுங்கோ! தப்பான நோக்கத்தோட எதையும் பார்க்காதையுங்கோ! தயவு செய்து சுபாவை இப்படியெல்லாம் திட்டா தையுங்கோ!"

"ஓ! உனக்குச் சுபாவைப் பற்றிச் சொன்னால் பொத்திக் கொண்டு கோபம் வந்திடும். ஏன் நேரம் கழிச்சு வீட்டிற்கு வாறாள் என்று ஒரு நாளாவது வாயைத் திறந்து கேட்டிருக்கிறியா? உண்மையைச் சொன்னால் உனக்கேன் கோபம் வருகுது? குழந்தையைப் பார்த் திட்டு இனசனம் வாயை மூடிக் கொண்டா இருக்கப் போகினம்? இனிமேல் அவளோட நானிந்த வீட்டிலை இருக்கமாட்டன். எனக்கு ஒரு வழி செய்து போட்டு நீ என்ன வேண்டும் என்றாலும் செய்!"

"நிறுத்தம்மா போதும்! நீயே ஊரெல்லாம் கூட்டிக் கதை கட்டி விடுவாய் போல இருக்கு. நான் ஒன்றும் ராமனில்லை அவளைத் தீக்குளி என்று சொல்வதற்கு!" கோபத்தோடு சத்தம் போட்டுச் சொல்லி விட்டுக் கதவை அடித்துச் சாத்திக் கொண்டு படுக்கைக்குப் போனான்.

அம்மா சுபா மீது கொண்ட வெறுப்பின் தாக்கம் இப்போது தான் வார்த்தைகளாய் வெடித்துக் கொண்டு வருகிறது. வெறும் வாயை மென்று கொண்டிருந்த உறவின ருக்கு அவல் கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு இதுவே போதும்! ஒற்றுமையாய் இருக்கும் குடும்பத் தைச் சிதைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள்.

நெடுநேரம் தூக்கம் வராமல் தவித்தவன் இந்தப் பிரச்சனைக்கு எப்படியாவது ஒரு முடிவு காண வேண்டும் என்று நினைத்தபடி தூங்கிப் போனான்.

அவன் அறைக்குள் நுழைந்த போது சுபா அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள். ட்ரிப் கொடுத்தி ருந்தார்கள். அவளது படுக்கையின் ஓரத்தில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் அவளது முகத் தைப் பார்த்தான். தூக்கத்திலும் தாய்மையின் பூரிப்பு முகத்தில் தெரிந்தது.

"இந்தக் களங்கமில்லாத முகத்தைப் பார்த்தா அம்மா இப்படிச் சொன்னா?"

"வந்திட்டீங்களா, என்ன யோசிக்கிறீங்க?" சுபாவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டான்.

"குழந்தையைக் கொஞ்சம் பிடியுங்களேன்!" மார்போடு அணைத்திருந்த குழந்தையை நீட்டினாள்.

அவன் மனசு சஞ்சலப் பட்டது. அவள் சொன்னது தனக்குக் கேட்காதது போல எங்கேயோ பார்வையைச் செலுத்தினான்.

"என்னோட பொஸ் மிஸ்டர் ஜாக்ஸன் வந்திருந்தார். இந்த ஃப்ளவர் பாஸ்கட்டும், கிஃப்ட்டும் அவர்தான் கொண்டு வந்து கொடுத்தார். இத்தனை வேலைக்கு நடுவிலும் என்னைத் தேடி வந்திட்டாரே, ஹீ இஸ் கிறேட்!"

"ஹீ இஸ் கிறேட்?"

சம்மட்டியால் மண்டையில் அவனுக்கு அடித்தது போல இருந்தது.

வீட்டிலே ஒரு பிரளயமே நடந்து கொண்டிருக்கிறது. இதை எப்படி இவளுக்கு எடுத்துச் சொல்லுவது?

"என்ன ஒரு மாதிரி இருக்கி றீங்க?" என்றாள் சுபா அவனது நிலைமை புரியாது.

இவன் ஒன்றுமில்லை என்பது போலத் தலையாட்டினான். ஆனா லும் முகம் காட்டிக் கொடுத்தது.

"அப்போ குழந்தை இப்படிப் பிறந்திட்டுதே என்று வருத்தப் படுறீங்களா?"

அவன் அதற்கும் இல்லை என்றே தலையாட்டினான்.

"நாங்க செய்த பாவத்திற்கு இந்தக் குழந்தை என்ன செய்யும், அது பாவம்!" என்று சொல்லிக் குழந்தையைக் கொஞ்சிவிட்டு மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள்.

"இல்லை! சொந்தக்காரர் எல்லாம் குழந்தையைப் பற்றித் தப்பாய்ப் பேசுகினம், அதுதான்...!" முடிக்காமல் நிறுத்தினான்.

"அதுதான்.... என்ன?" அவள் ஆர்வமாய் அவனைப் பார்த்தாள்.

"கொஞ்ச நாளைக்கு நாங்கள் வேறு எங்கேயாவது கண்காணாத இடத்திற்குப் போய் இருப்போம் என்று நினைக்கிறேன்"

அம்மாவிடம் இருந்தாவது கொஞ்ச நாளைக்கு ஒதுங்கியி ருந்தால் சுபாவிற்கு நல்லது என்று அவன் நினைத்தான்.

அவள் அவனை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

"உண்மையாய்தான் சொல்லு றீங்களா?" என்றாள் நம்ப முடியா மல்.

"ஆமாம் சுபா! ஒரு வருடமோ இரண்டு வருடமோ சொந்த பந்தத்தை விட்டு ஒதுங்கித் தூர இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்"

"நான் ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டீங்களே!"

"இல்லை சுபா! உன்னோட ஒப்பீனியனையும் கேட்கிறது நல்லதுதானே, சொல்லும்!"

"எங்க பொஸ் அடுத்த மாதம் வேலை மாற்றலாகிப் போகிறார். வேறு இடத்தில் ஆரம்பிக்க இருக்கும் புதிய கிளைக்குப் பொறுப்பாகப் போகப் போகிறாராம். அதனாலே...!"

"அதனாலே...?" அவள் சொல்லி முடிக்குமுன் அவன் அவசரப்பட்டான்.

"என்னையும் கூட வர்றியான்னு கேட்கிறார், போவோமா?"

☯



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அ. மார்க்ஸ் அவர்களுக்கு ஸ்பாட்டகஸ்தாசனிடம் இருந்து....

அன்புள்ள அ. மார்க்ஸ் அவர்கட்கு,

'தமிழ் இனி 2000' நிகழ்ச்சியில் பார்வையாளராக வந்திருந்தபோது நிறப்பிரிகைக் குழுவினரால் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்த 'தமிழ் இனி 2000 என்கிற கும்பமேளா' என்கின்ற துண்டுப் பிரசுரம் பார்த்தேன். அத்துண்டுப் பிரசுரத்தில் காணப்பட்ட பல பிழைகளை அங்கு அதனை விநியோகித்துக் கொண்டிருந்த நிறப்பிரிகைத் தோழர் வளர்மதியிடம் குறிப்பிட்டபோது அவர், "இது அ. மார்க்ஸினால் அவசரமாக எழுதப்பட்டது. அதனால் பிழைகள் ஏற்பட்டிருக்கலாம்" என்றார். துண்டுப் பிரசுரம் நிறப்பிரிகைக் குழுவினரால் வெளியிடப்பட்டிருந்த போதும் அது தங்களால்தான் எழுதப்பட்டது என அறிந்ததால் உங்களுக்கே எழுதுவதாக முடிவு செய்துள்ளேன்.

தமிழ்நாட்டு 'இலக்கிய அரசியல்'பற்றி எனக்கு அதிகம் தெரியாது. அங்கு நடக்கும் ஏற்றி வைப்புகள் , அகற்றி வைப்புகள் பற்றி எனக்குத் தெரியாது. உங்களின் துண்டுப்பிரசுரம் தமிழ்நாட்டு சிறுபத்திரிகை உலகின் தாதாக்கள் யார் என்கின்ற நிறப்பிரிகைக்கும் காலச்சுவட்டிற்கும் நடக்கும் போட்டியின் பிரதிபலிப்பே எனப் பலர் கூறி இருந்தும் அத்துடன் இப் பிரசுரத்தின் பல கூறுகள் பழைய மாவோ இசத்தின் 'உலகச் சதி' கோசமாகவே இருந்த போதிலும் என் பற்றியும் புகலிட நிலைமைகள் பற்றியும் தங்களின் சந்தர்ப்பவாதப் பார்வைக்கு பதில் அளிக்கும்படி பல நண்ப, நண்பிகள் வேண்டிக் கொண்டதன் பெயரில் இதை எழுதுகிறேன்.

முதலில் நான் இலக்கியத்தில், குறிப்பாக புகலிட இலக்கியத்தில், பரிச்சயமுடையவனல்ல. நீங்கள் கூறுவதுபோல் புகலிட இலக்கியத்தை முன்நிறுத்தியவனுமல்ல. அத்துடன் புகலிட இலக்கிய உலகில் முக்கியமானவனும் அல்ல. மாறாக, இங்கு நடக்கும் இலக்கிய விவாதங்களில் பங்குபற்றுவதுடன் சரி.

பிரசுரத்தின் ஆரம்பத்திலும் பின்பும் இம்மகாநாடு காலச்சுவடும் சரிநிகரும் (சேரன்) சேர்ந்து நடத்துவதாக அதாவது சரிநிகர் என்றால் சேரன் என்ற பொருள்பட எழுதி இருந்தீர்கள். இது சரிநிகரில் உள்ள மற்றைய தோழர் தோழிகளை அவமதிக்கும் செயலாகும். அவர்களின் உழைப்பை intellectual capacityயை மறுப்பதாகும்.

மேலும் இதில் பங்குபற்றியவர்கள் கலந்து கொண்டவர்களை மேற்படி கூட்டின் சதிக்குள் விழுந்தவர்கள் எனக் குறிப்பிட்டு சரி, பிழையை அளவிடும் அளவீடு உங்கள் கையிலேயே உள்ளது என்ற மேலாண்மைத்தனத்துடன் அங்கு பங்குபற்றியவர்களின் சுயத்தை மறுத்துள்ளீர்கள். தனிய மேற்கூறப்பட்ட குழுவால் பாவிக்கப்படுவதற்கு அங்கு பங்குபற்றியவர்கள் அனைவரும் ஏமாளிகள் அல்ல. அ. மார்க்ஸ் அவர்களே முடிவு என்றும் openதான். யார் யாரைப் பாவிக்கிறார்கள் என்பது எல்லாம் சிலவேளை வரலாற்று வியாக்கியானம்தான்.

மேலும் மகாநாடு மோசமானது என விபரிக்க அங்கு அழைக்கப்படாத பலரது பட்டியலை இட்டு இருந்தீர்கள். நீங்கள் குறிப்பிட்டுள்ள அனைவரையும் அவர்கள் கூப்பிட்டிருந்தாலும் விடுவிக்கப்பட்டவர்களின் பட்டியல் நீண்டுகொண்டுதான் போகும். மேலும் உங்களால் விடுவிக்கப்பட்ட புகலிட எழுத்தாளர்கள் பட்டியல் வேடிக்கையானது. புகலிடத்தில் சமமான அளவு பெண் எழுத்தாளர்கள் இருந்தும் ஒரே ஒரு பெண் எழுத்தாளரை மாத்திரம் நீங்கள் குறிப்பிட்டிருந்ததும், அதுவும் அதைத் தவறாகக் குறிப்பிட்டிருந்ததும், உங்கள் ஆணாதிக்கப் பார்வையின் பிரதிபலிப்பே. (பெண்ணியம் என்றால் என்ன என்பதை பெண்களுக்கே கற்பிக்க முற்பட்டவர் நீங்கள்)

மேலும், இலக்கியக் கோட்பாடுகள் பற்றி நீங்கள் குறிப்பிட்டவை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. அதிகாரம் எந்த சிந்தனை வடிவத்தை தன் இருப்பு நியாயத்திற்கு பாவிக்கும் எனக் கூறுவது கஷ்டம். ஏன் பல மாற்றுச் சிந்தனை வடிவங்கள்கூட அதிகாரத்தின் படைப்பாகவே உள்ளன.

**இந்தியாவில் தலித்தியம் இன்று ஒரு இயங்கியல் போக்கை எடுத்துள்ளதாக நான் கருதுகிறேன். பழைய தலித்தியத்தின் 'இதுதான் தலித்தியம்' என்ற கோட்பாடுகள்மீது பல தலித்திய organic intellecualகள் கேள்விகளைத் தொடுத்து வருகின்றனர்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்துடன் ‘globalisation’ என்ற பூச்சாண்டியை இங்கு பாவித்துள்ளீர்கள். பல அரசுகள் தொழிலாளர்களை வேலை நீக்குவதற்கும் ஊதியக் குறைப்பு செய்வதற்கும் இப் பூச்சாண்டியையே பாவிக்கின்றன. Globalisationஐ நான் மறுக்கவில்லை. நீங்கள் கூறுவதுபோல அது ஒரு வழிப்பாதையில்லை. அது ஒரு முடிவு தெரியாத profil. அதை ஒரு வழிப்பாதையாகப் பார்ப்பது நவீனத்துவக் கோளாறு.

இனி புகலிடம்பற்றியும் என் பற்றியும் குறிப்பிட்டவைக்கு வருவோம்.

நாம் உடல் உழைப்பு அற்றவர்கள், அத்துடன் புகலிட அரசுகளின் அங்கீகாரம் பெற்றவர்கள் என எழுதியிருந்தீர்கள்.

நான் சுமார் 20 வருடங்களாக ஜேர்மனியில் ஒரு நிரந்தர விசா இல்லாமல் வசிப்பவன். ஒவ்வொரு முறையும் விசா புதுப்பிப்பதற்கு காலை 5 மணியளவில் நீண்ட கியூவில் நின்று 8 மணிக்கு நம்பர் வாங்கி 10.00 மணிக்கு எனது முறை வர அதிகாரியின் அறை நுழைய அவன் அதைக்காட்டி, இதைக் காட்டி நிரந்தர விசாவை மறுக்க அவனின் சேட்டைப் பிடித்து அறையவேண்டும் போல் இருக்கும். விசாவுக்கு நின்று இம்முறையும் ஏமாந்தபோது உங்கள் ஞாபகமும் வந்தது.

மேலும் ஈழத்தவரை புகலிடத்தில் அடையாளப்படுத்தும் கோப்பை கழுவுதல் போன்றவற்றைச் செய்யாதவன் நான் என எழுதி இருந்தீர்கள். நானும் இங்கு கோப்பையும் மலசலகூடமும் கழுவி பேப்பரும் விற்றுத்தான் வாழ்வை ஆரம்பித்தவன். இங்கு வாழும் பலரும் அப்படியே. ஆனால், இங்கு உள்ள நிறவாத அரசும் நிறவாதிகளும் எம்மை நிரந்தர கோப்பை கழுவிகளாகவே வைத்திருக்க விரும்புகிறார்கள். இக் கூட்டுடன் நிறப்பிரிகையும் சேர்ந்து கொள்ளுகிறது. முன்னையவர்களுக்கு பொருளாதாரமும் நிறவாதமும் காரணம். பின்னையவர்களுக்கு எமது கஷ்டங்களையும் துன்பங்களையும் தாம் capitalise பண்ண அது தேவைப்படுவதால்.

இனி நீங்கள் எனது(எமது) அரசியல் பின்னணி பற்றி கூறியவற்றிற்கு வருவோம். எனக்கு (எமக்கு) அரசியல் ஏதும் இல்லை. உங்கள் புகலிடப் பட்டியலாளர்கள் புரட்சிப் பூக்கள் எனக் குறிப்பிட்டு இருந்தீர்கள்.

நீங்கள் சிங்களப் பேரினவாதத்தையும் தமிழ்க் குறும் தேசியவாதத்தையும் எதிர்த்து சிங்கள-தமிழ் தோழ, தோழிகளுடனான ஒரு சோசலிசக் கட்சியில் அங்கத்தவனாய் இருந்தவன் நான். அன்று உங்கள் பட்டியல் தோழர்கள் தமிழ்த் தேசியவாதத்தால் அடித்துச் செல்லப்பட்டிருந்தனர். பின் அனாக்ஸிஸ்டுக்களுடனும் ஓட்டோனோமக் குழுக்களுடனும், நிறவாத-பாசிச எதிர்ப்புப் போராளிகளுடனும், மூன்றாம் உலக நலன் பேண் குழுக்களுடனும் சேர்ந்து போராடியவன் நான். (இக் காலகட்டத்தில் நீங்கள் தேசியவாதத்தை மார்க்சிய எதிர்ப்புக்கு எதிராக காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு இருந்தீர்கள் (இது உங்கள் ஞாபகத்திற்காக)). சாதாரண எந்தப் பிரச்சனையும் அற்ற (போலிஸ் அடித்த) மே தின ஊர்வலத்திலேயே தலை காட்டாதவர்கள் உங்கள் தோழர்கள். ஆனால் ஒரு சகோதர சஞ்சிகையினிடையே ஏற்பட்ட சாதாரண பெயர்ப்பிரச்சினைக்கே முதலாளித்துவ நீதிமன்றத்திற்கு போவோம் (25வது இலக்கியச் சந்திப்பு - பெர்லின், எக்ஸில் சஞ்சிகை, இறுதி இதழ்) என அரச பலத்தைக் காட்டி மிரட்டியவர்கள்தான் அவர்கள்.

மேலும் உங்கள் பட்டியல் புரட்சியாளர்கள் புலம்பெயர் சூழலில் வேர் கொள்ளும் சாதியுணர்வு, சைவ வேளாளர் பண்பாட்டு ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராக போர்க்கொடி தூக்குபவர்கள், தலித்துக்களைப்பற்றியெல்லாம் பேசுபவர்கள் எனக் குறிப்பிட்டு இருந்தீர்கள்.

புலம்பெயர் சூழலில் சாதியுணர்வு கூடியுள்ளதா அல்லது தேய்ந்து உள்ளதா எனக்கூற ஆய்வுகள் இல்லை. ஆனால் புகலிட இளம் சந்ததியினர் தமிழ்ச் சமூகத்தின் இழிவுக் கூறுகளான ‘சாதி’, ‘கற்பு(?)’ போன்றவற்றைக் கேள்விக் குறியாக்குவது கண்கூடு.

சாதி என்றால் என்ன எனக் கற்பனை பண்ணவே முடியாதவர்கள் இவர்கள் என அறியும்போது ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. உதாரணமாக புகலிட இளைஞன் ஒருவன் ஒரு மூத்தவரிடம் "மாமா! சாதி, சாதி என்கின்றார்களே அப்படி என்றால் அது என்ன? Adidas, Nike போலவா அவை?" என்றான்.

புகலிடத்தில் சாதிவேறுபாடு இல்லை என நான் குறிப்பிடவில்லை. ஆனால் இலங்கையைவிட இங்கு அதிகம் என்று கூறமுடியாது என்று நான் கருதுகிறேன்.

மேலும் உங்கள் தோழர்கள் தலித்தியத்தை ஒரு சந்தர்ப்பவாத கருத்தியலாகவே பாவிக்கின்றார்கள். சாதியப் பிரச்சினைக்கு எதிராக ஒரு தலித்தியப் போராட்டத்தில் அவர்கள் இங்கு இறங்கவில்லை. தலித்தியத்தை தமது சொந்த நலனுக்காக புகழுக்காக பாவிக்கும் கருவியாகவே உபயோகிக்கிறார்கள்.

உதாரணமாக, தாமிரபரணி படுகொலைச் சம்பவம் சம்பந்தமான வீடியோ கசட்டை இங்கு

**இங்கு உள்ள நிறவாத அரசும் நிறவாதிகளும் எம்மை நிரந்தர கோப்பை கழுவிகளாகவே வைத்திருக்க விரும்புகிறார்கள். இக் கூட்டுடன் நிறப்பிரிகையும் சேர்ந்து கொள்ளுகிறது. முன்னையவர்களுக்கு பொருளாதாரமும் நிறவாதமும் காரணம். பின்னையவர்களுக்கு எமது கஷ்டங்களையும துன்பங்களையும் தாம் capitalise பண்ண அது தேவைப்படுவதால்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டும்போது அதற்குத் தலைமை வகிப்பது யார் (26வது இலக்கியச் சந்திப்பு - ஸ்ருட்காட்) எனச் சண்டை போட்டவர்கள். பின் அவ் வீடியோ கசட்டை ஏனைய பகுதிகளிலும் போட்டுக் காட்டுவதற்குக் கேட்டபோது அது தமது சொந்தச் சொத்து மாதிரி மறுத்தவர்கள்.

தலித்தியம்பற்றி மேடையில் வாய் கிழியப் பேசிவிட்டு, கூட்டம் முடிந்ததும் வந்து "ஹீ... ஹீ... நான் தலித்தில்லை" எனக் கூறி வருபவர்கள்.

உங்கள் பட்டியல் புரட்சியாளர் ஒருவரின் தலித்தியம் பற்றிய பேச்சைக் கேட்ட ஒரு புகலிடப் பெண் "இது மேல்சாதியினரின் சதி. எனக்கு மது விருப்பம் இல்லை. மாமிசம் சாப்பிடுவது இல்லை. துப்பரவு பிடிக்கும். அன்று மேற்சாதியினர் எம்மை மேற்படி பழக்கத்திற்கும் நிலைமைக்கும் அதிகாரத்தால் நிர்ப்பந்தித்தார்கள். இன்று அதுதான் எமது விழுமியம் எனக்கூறி அதை மகிழ்ச்சிக்காக கடைப்பிடிக்க இவர்கள் சொல்கின்றனர்" என்றார்.

இலங்கையில் சாதி எதிர்ப்புப் போராட்டம் இந்தியாவில் நடந்தது போலல்ல. இங்கு அது கொம்யூனிஸ்டுக்களின் தலைமையில் நடந்தது. சாதி ஒழிப்பே அதன் கோசம். இந்தியாவில் நடப்பதுபோல 'சாதிச் சமநிலை' அதன் கோசமாக இருக்கவில்லை. இதில் எது சரி என்பது சூழ்நிலை சம்பந்தப்பட்டது. புகலிடத்திற்கும் இலங்கைக்கும் கொம்யூனிஸ்டுகளின் அணுகுமுறையே சிறந்தது என நம்புகிறவன் நான். ஆனால் ஒரு தலித்தியக் கருத்தியலின் ஊடுருவல் இங்கு சாதி எதிர்ப்புப் போராட்டத்திற்கு புது வழிகளை வகுக்கலாம், உதவலாம்.

இந்தியாவில் தலித்தியம் இன்று ஒரு இயங்கியல் போக்கை எடுத்துள்ளதாக நான் கருதுகிறேன். பழைய தலித்தியத்தின் 'இதுதான் தலித்தியம்' என்ற கோட்பாடுகள்மீது பல தலித்திய organic intellecualகள் கேள்விகளைத் தொடுத்து வருகின்றனர். இதனால் இப் புதிய தலித்தியத்தின் பரவல் புகலிட சமூகத்திற்குப் புத்துயிர் ஊட்டும்.

மேலும் உங்கள் பட்டியலாளர்கள் சைவ வேளாளப் பண்பாட்டிற்கு எதிராக போர்க்கொடி பிடிப்பவர்கள் எனக் கூறியுள்ளீர்கள். உண்மை என்னவெனில் இங்கு நடக்கும் எல்லா சைவச் சடங்கு வைபவங்களிலும் உங்கள் தோழர்களைக் காணலாம். அதுமட்டுமில்லாமல் பல சடங்குகளை அவர்களே முன்னின்று நடத்தியும் வைக்கின்றனர். (இதற்கு கலாமோகன் மாத்திரம் விதிவிலக்காக இருக்கலாம்) சடங்குகள் பல உறவுகள் சம்பந்தப்பட்டன. அதனால் அதுபற்றிக் கூற எனக்குத் தகுதி இல்லை. ஆனால் இச் சடங்குகளுக்கு அவர்கள் எதிர்ப்பானவர்கள் எனக் கூறுவது அபத்தம்.

இனி இலக்கியச் சந்திப்பில் இவர்கள் (உங்கள் பட்டியலாளர்கள்) எழுப்பும் கேள்விகளைச் சமாளிக்க முடியாமல் நாம் கடையைக் கட்டிக்கொண்டு தமிழ்நாட்டிற்குப் புறப்பட்டுவிட்டதாக குறிப்பிட்டுள்ளீர்கள். புகலிடச் சூழல்பற்றி நீங்கள் சரியாகத் தெரிந்திருக்காவிடினும் நீங்கள் வாழும் தமிழ் நாட்டுச் சூழல்பற்றியாவது நீங்கள் தெரிந்து வைத்திருக்கலாம். ஏனெனில் தமிழ் நாட்டு 'இலக்கிய உலகம்' ஈழத்தமிழரைப் பாவிக்குமே தவிர உதவியது இல்லை. நான் இங்கு தமிழ்நாட்டு மக்களைக் குறிப்பிடவில்லை (அவர்களின் உதவி அளப்பரியது). எனவே, இங்கு பிரச்சனை எனில் அங்கு வருவது அடுப்பில் இருந்து நெருப்பில் விழுவது போலாகும்.

நாம் இங்கு பயப்படுவது என ஒன்று இருக்குமானால், அது உங்கள் தோழர்களின் கேள்விகளுக்கு அல்ல, மாறாக, அவர்களின் காட்டிக் கொடுப்புக்கே.

சாதாரண நட்புரீதியிலான தொலைபேசி உரையாடலைக்கூட பதிவுசெய்துவிட்டு 'tape உள்ளது' (கற்சுறா பாரதிதாசனுக்கு - 26வது இலக்கியச் சந்திப்பு, ஸ்ருட்கார்ட்) என மிரட்டுபவர்கள் இவர்கள். புலிகளுடன் சுமுகமாக உறவு கொண்டுள்ள ஒரு நாடக ஆசிரியரின் நாடகம் புலி எதிர்ப்பு நாடகம் எனப் பிழையான வியாக்கியானம் கொடுத்து அவர்மீது தாம் கொண்டுள்ள எதிர்ப்பை 'வேறு' விதமாக அறுவடை செய்யப் பார்த்தவர்கள். காட்டிக்கொடுப்பும், கண்காணிப்பும், தட்டிப் பறித்தலும்தான் இவர்கள் அரசியல்.

இங்கு உள்ள உங்கள் போலிப் புரட்சியாளர்களை போற்றிப்பாடும் நீங்கள் அங்கு பட்டி தொட்டி எல்லாம் சாதி எதிர்ப்புக்குரல் எழுப்பும் கே. ஏ. குணசேகரன் அவர்களைப் பெருநிறுவனங்களுக்கு அடிமையானவர் எனச் சித்தரிப்பது மன்னிக்க முடியாதது.

மேலும் காலச்சுவட்டிற்கும் பல வணிக நிறுவனங்களுக்கும் உள்ள தொடர்புபற்றி நியாயமான கேள்வியை நீங்கள் எழுப்பினாலும் அ. மார்க்ஸ்-குமுதம் connectionபற்றியோ அல்லது அ. மார்க்ஸ் - கோழிப்பண்ணை connectionபற்றியோ கேள்வி எழுப்புவது இல்லையே, அது ஏன்?

*சில புகலிடத் தகவல்கள்:*

- இங்கு கோப்பை கழுவுதல், தெருக்கூட்டுதல், மலசலகூடம் துப்பரவாக்குதல் என்பன இலங்கை, இந்தியா போல் சாதித் தொழிலாகப் பிரிக்கப்படவில்லை. மாறாக இங்கு எல்லாரும் செய்வதே இது.
- புலம் பெயர்ந்தவர்கள் பற்றி உங்களுக்கு

**புலம்பெயர் சூழலில் சாதியுணர்வு கூடியுள்ளதா அல்லது தேய்ந்து உள்ளதா எனக்கூற ஆய்வுகள் இல்லை. ஆனால் புகலிட இளம் சந்ததியினர் தமிழ்ச் சமூகத்தின் இழிவுக் கூறுகளான 'சாதி', 'கற்பு(?)' போன்றவற்றைக் கேள்விக் குறியாக்குவது கண்கூடு.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்கறை இருந்தால் மேற்கு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்களைவிட இந்தியாவின் தடுப்பு முகாம் களில், criminalise பண்ணப்பட்டும் பொலிஸ்காரர் களின் sex slave ஆகவும் ஆக்கப்பட்டு பல அகதி கள் வாடுகிறார்கள். அவர்கள் பக்கம் கவனம் திருப்பவும்.

**இலங்கையில் சாதி எதிர்ப்புப் போராட்டம் இந்தியாவில் நடந்தது போலல்ல. இங்கு அது கொம் யூனிஸ்டுக்களின் தலைமையில் நடந்தது. சாதி ஒழிப்பே அதன் கோசம். இந்தியாவில் நடப்பது போல 'சாதிச் சமநிலை' அதன் கோசமாக இருக்கவில்லை.**

கடைசியாக:

தமிழ்த் தேசியவாதத்தின் பிற்போக்குத் தனத்தை - பாசிசத்தனத்தை அன்று சுட்டிக்காட்டி யவன் என்கின்ற ரீதியில் சொல்கிறேன் "உங்களின் பிராமண எதிர்ப்பிலும் ஒரு பாசிசத்தன்மை உள்ளது"

இறுதியாக:

நீங்கள் எப்படித்தான் இங்கு உள்ளவர்களை தாஜா பண்ணி எழுதினாலும் இம்முறை அவர்கள் உங்களை ஐரோப்பாவுக்கு அழைப்பதாக இல்லை. மாறாக, வேறு ஒருவரை அழைப்பதற்கு முயற்சிகள் நடைபெறுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. உங்களிடம் தமக்குத் தேவையான 'சரக்கு' இல்லை என்று நம்புகிறார்களோ தெரியவில்லை. எதற்கும் மனம் தளராமல் try பண்ணவும். முயற்சி திருவினை யாக்கும். நன்றி.

இப்படிக்கு
ஸ்பாட்டகஸ்தாசன்.

---


அம்பை என்ற புனைபெயரில் எழுதும் சி. எஸ். லக்ஷ்மி அறுபதுகளின் பிற்பகுதியில் இருந்து தீவிரமாக இயங்கி வரும் படைப்பாளி. பேச்சும் மௌனமும் ஒன்றையொன்று கடந்து சென்று கொண்டிருக்கும் அம்பையின் கதைமொழி ஒவ்வொரு கட்டத்திலும் புதிய தொனி அடைந்து வந்திருக்கிறது.
சிறகுகள் முறியும் (1978), வீட்டின் மூலையில் ஒரு சமையலறை (1988) ஆகிய சிறுகதைத் தொகுதிகளுக்குப் பிறகு வரும் இந்த "காட்டில் ஒருமான்" தொகுப்பு நுட்பமும் இரகசியமும் கவிந்த சில தருணங்களை, நிலைகளைத் தீண்டித் திறக்கிறது. இத்தொகுதியில் உள்ள 'காட்டில் ஒரு மான்' சிறுகதை கதா பரிசு பெற்றது.
அம்பையின் சிறுகதைகள் தமிழில் பெண்நிலை நோக்கின் முதல் கலாபூர்வமான வெளிப்பாடுகளாகக் கருதப்படுகின்றன. தமிழ் இலக்கியத்தில் பெண்கள் பற்றிய ஒரு ஆராய்ச்சி நூலையும் (Face behind the mask, 1984) எழுதியிருக்கிறார். இவருடைய சிறுகதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலும் (A Purple Sea, 1992) வெளிவந்துள்ளது. ஓவியைகள், கலைஞைகள் பற்றி இவர் எழுதிய நூல் ஒன்று மூன்று தொகுதிகளாக விரைவில் வெளிவர இருக்கிறது. தமிழ்நாட்டுப் பெண்களின் சமூக வரலாறு குறித்த நூல் ஒன்றையும் எழுதிக் கொண்டிருக்கிறார். மும்பையில் வசிக்கும் அம்பை பெண்கள் பற்றிய ஆய்வுக்கான ஆவண மையத்தின் (Sound and Picture Archives for Research On Women : SPARROW) இயக்குநர்.




**காட்டில் ஒரு மான்**

அம்பை

**வெளியீடு:**
காலச்சுவடு பதிப்பகம்
669 K.P. Road
Nagercoil 629 001
India.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் இனி 2000




கைலாசபதி அரங்கு

20ம் நூற்றாண்டு நவீன தமிழ் இலக்கியத்தின் பலவேறு முகங்களையும் போக்குகளையும் விரிந்த தளமொன்றில் மதிப்பீடு செய்வது புதிய நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் எடுக்க இருக்கும் பாய்ச்சல்களுக்கு உரமூட்டக்கூடும் என்ற புரிந்துணர்வுடன் செப்டம்பர் மாதம் முதல் மூன்று நாட்களிலும் 'தமிழ் இனி 2000' - உலகத் தமிழ் இலக்கிய அரங்கு ஒன்று கூடியது.

தமிழ் இலக்கியம் என்பது வெறுமனே தமிழ்நாட்டு இலக்கியம் தான் என்ற நிலைமையும் மனோபாவமும் நீண்டகாலமாக இருந்து வருகிற ஒரு சூழலில் தமிழ் இலக்கியம் என்பது இந்தப் புதிய நூற்றாண்டில் தேச எல்லைகளுக்கு அப்பால் ஆழமாகவும் அகலமாகவும் வளர்ந்துவிட்டது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அமைந்திருக்கின்றன. தமிழ்மொழியும் இலக்கியமும் வாழும் வழங்கும் பலவேறு நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், புலமையாளர்கள், சமத்துவ அடிப்படையில் உறவு கொள்ளவும் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும் ஒரு முக்கியமான ஆரம்பப் படியை தமிழ் இனி 2000 அமைத்துக் கொடுத்துள்ளது எனக் கலந்துகொண்ட பல எழுத்தாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"தமிழ் இலக்கியம் என்பது தமிழ்நாட்டில் இருந்து வெளியே போகும் ஒரு வழிப்பாதை என்ற போக்கு முடிவடைகிறது. இனி இருக்கப் போவது ஒரு பன்முகப் பாதைதான்" என்று குறிப்பிடுகிறார் ரஞ்சகுமார்.

அறுபதுக்கு மேற்பட்ட ஈழத்து எழுத்தாளர்களும் 100க்கு மேற்பட்ட சுவைஞர்கள், வாசகர்களும் கலந்து கொண்ட முதல் தமிழ்நாட்டு நிகழ்வு என்ற வகையிலும் 'தமிழ் இனி 2000' முக்கியத்துவம் பெற்றுவிட்டது. பெருந்தொகையான ஈழ, தமிழக எழுத்தாளர்கள் ஒன்று கூடியதும் கலந்து பேசியதும் அறிமுகம் கொண்டதும் பயன்மிக்க ஒரு அம்சம் என்ற உணர்வை பெரும்பாலானோர் வெளிப்படுத்துகின்றனர்.

மொத்தமாக மூன்று நாட்களிலும் 55 அமர்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. அமர்வுகள் 'புதுமைப் பித்தன் அரங்கி'லும் 'கைலாசபதி அரங்கி'லும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. 1000இல் இருந்து 1500வரையிலானவர்கள் தினமும் பார்வையாளர்களாக பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆய்வு மகாநாட்டுக்கு இத்தகைய பெருந்தொகையானோர் கலந்து கொண்டமை பல நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தி இருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட பெருமளவு கட்டுரைகள் பிரதி எடுத்து விற்கப்பட்டமை போன்றன பேசப்பட்ட விடயங்கள் பரவலாகச் சென்றடைய வாய்ப்பாக அமைந்திருக்கும். அரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள், கட்டுரை ஆசிரியர்களினாலேயே செப்பமாக்கப்பட்டு அடுத்த வருடம் நூலாக வெளிவரவும் உள்ளது.



கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர்

அமர்வுகளில் கலந்துகொண்டு கட்டுரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நு.'.மான், பார்வதி கந்தசாமி, சிவத்தம்பி

சமர்ப்பித்த அல்லது கருத்துரை வழங்கிய எழுத்தாளர்கள், புலமையாளர்களின் பட்டியலைப் பார்க்கிறபொழுது அது 'தமிழ் இனி'யின் ஒரு குறுக்குவெட்டு முகத்தை நமக்குத் தருகிறது.

தமிழகத்தில் இருந்து பிரபஞ்சன், அசோகமித்திரன், ப. செயப்பிரகாசம், ராஜ்கௌதமன், எஸ். வி. ராஜதுரை, அ. மங்கை, வ. கீதா, பிரசன்னா ராமசாமி, பிரம்மராஜன், யுவன், மாலன், வெளி ரங்கராஜன், அ. ராமசாமி, சுந்தரராமசாமி, ந. முத்துசாமி, மனுஷ்ய புத்திரன், ஞானக்கூத்தன், சிற்பி, பாமா, அம்பை, ரவிக்குமார், வீ. அரசு, தமிழவன், நாஞ்சில்நாடன், நஞ்சுண்டன், என். ராமகிருஷ்ணன், அமரந்தா, வெ. ஸ்ரீராம், ரமேஷ் பிரேம், மாலதி, பாவண்ணன், லக்ஷ்மி மணிவண்ணன், சுஜாதா, தேவதத்தா, ஞா. ஸ்ரீபன், அழகரசன், செ. போத்திரெட்டி, ராஜமார்த்தாண்டன் ஆகியோர் கட்டுரை சமர்ப்பித்திருக்கின்றார்கள். இந்தப் பட்டியலும் முழுமையானதல்ல. ஈழத்தில் இருந்தும் பலவேறு கருத்துநிலைகளையும் பார்வைகளையும் பிரதிபலிக்கும் எழுத்தாளர்களும் புலமையாளர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். சிவத்தம்பி, எம். ஏ. நு.'.மான், கே. எஸ். சிவகுமாரன், எஸ். எல். எம். ஹனீபா, சித்திரலேகா, சிராஜ் மஷ்ஹூர், ஏ. இக்பால், மௌனகுரு, எம். பௌசர், சாரல்நாடன், எம். எல். எம். ஜபார், தெளிவத்தை யோசப், அந்தனி ஜீவா, ரஞ்சகுமார், மு. பொ., சு. வில்வரத்தினம், வி. ரி. தமிழ்மாறன், செல்வி திருச்சந்திரன், சூரியகுமாரி, தேவகௌரி, பா. ரேவதி, வி. என். எஸ். உதயச்சந்திரன், சிவகுமார், கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர். இந்தப் பட்டியலும் முழுமையானதல்ல.

மலேசியாவில் இருந்து முக்கியமான எழுத்தாளர்களான செ. கார்த்திகேசு, சைபீர் முகம்மது ஆகியோரும் அங்குள்ள பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள் வி. சபாபதி, ராமச்சந்திரன், கிருஷ்ணன் என்போரும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

மற்றும், சிங்கப்பூரில் இருந்து விமர்சகரும் ஆய்வாளருமான ஸ்ரீலக்ஷ்மியும் ஜி. அரவிந்தனும் கலந்து கொண்டிருக்கின்றனர். ஆயினும் தமிழகமும் ஈழமும் சமத்துவமாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அளவிற்கு சிங்கப்பூரும் மலேசியாவும் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. எதிர்கால இலக்கிய அரங்கங்கள் அந்த நாடுகளில் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் எனவும் அதன் மூலம் சிங்கப்பூர், மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றிய பரவலான கவனம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களும் புகலிடத்தில் இருந்து கலந்து கொண்டிருக்கின்றனர். என். சரவணன் (நோர்வே); நட்சத்திரன் செவ்விந்தியன் (அவுஸ்திரேலியா); ந. சுசீந்திரன், ச. பாரதி தாசன், தன்னை ஈழம் தத்தெடுத்துக் கொண்டதாகக் கூறும் நா. கண்ணன், மணி சுப்ராயன் (ஜேர்மனி); செல்வம் அருளானந்தம், வசந்தி ராஜா, தானியா, பார்வதி கந்தசாமி (கனடா) ஆகியோர் அடங்குவர்.

புகலிடத் தமிழர்கள்/புலம்பெயர்ந்தோர்/புகலிட இலக்கியங்கள் தொடர்பாக இடம் பெற்ற இரு நிகழ்வுகளில், முதல் அமர்வில் அதற்கென ஒதுக்கப்பட்ட 'கைலாசபதி அரங்கி'ல் நிகழ்த்தாமல் 'புலம் பெயர்த்துச்' சென்று திறந்த வெளியில் நடத்தியிருக்கிறார் ந. சுசீந்திரன். இந் நிகழ்வு பரவலான கவனத்தைப் பெற்றிருக்கிறது. புகலிடத்தில் இருந்து வந்து கலந்துகொண்ட அனைவரும் கருத்துரை வழங்கச் சந்தர்ப்பம் வழங்கி, பிற்பாடு சூடான, சுவையான விவாதங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

கவிதை, சிறுகதை, தமிழ்த்தேசியம், ஈழ தேசியம், திராவிட இலக்கியம், எதிர்ப்பு இலக்கியம், பெண்ணியம், மார்க்சியமும் இலக்கியமும் போன்றன தீவிரமான, ஆனால், ஆக்கபூர்வமான விவாதங்களை எழுப்பி இருக்கின்றன. தமிழ்த் தேசியங்கள் பற்றிய கதையாடலும் அவைபற்றிய பிரச்சனைகளும் கேள்விகளும் இந்த நூற்றாண்டின் மிகவும் முக்கியமான இயங்குசக்தியாக இருக்கப் போகின்ற தென்பதையே இவை சுட்டி நிற்கின்றன.

ஈழத்து அமர்வுகளைப் பொறுத்தவரை மலையகம், எதிர்ப்பு இலக்கியம், பஞ்சமர் வரலாறு, ஈழ வரலாறு என்பன கவனம் பெற்றிருக்கின்றன. நுண்கலையும் இலக்கியமும் என்ற அம்சமும் ஓவியர் சனாதனனால் விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது.

ஓவியர் சனாதனனும், ஓவிய விமர்சகரும் கவிஞ



கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருமான பா. அகிலனும் இணைந்து ஓவியங்கள், சிற்பங்கள் ஊடாக தமிழ் அடையாளங்கள் என்பது பற்றிய ஓவிய, சிற்பக் கண்காட்சி ஒன்றை ஒழுங்குபடுத்தி இருக்கிறார்கள். 'கண்ணுக்குள் வெளி' என்ற தலைப்பில் இக்கண்காட்சி 3 நாட்களும் இடம் பெற்றிருக்கிறது. ஆதிமூலம், எஸ். தனபால், ஏ. பி. சந்தானராஜ், பி. வி. ஜானகிராமன், ஆர். பி. பாஸ்கரன், என். நிலாந்தன், ஆர். வைதேகி, தா. சனாதனன், எஸ். தட்சணாமூர்த்தி, ட்ரொட்ஸ்கி மருது, சந்துரு, விஸ்வம், எம். பழனியப்பன், கே. முரளிதரன், எஸ். மரிய அந்தோனிராஜா, டி. எபனேசன் சுந்தர்சிங், எஸ். மைக்கல் இருதயராஜ் ஆகிய ஓவியர்கள், சிற்பிகளின் படைப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. இக் கண்காட்சியை வெங்கட் சாமிநாதன் திறந்து வைத்திருக்கிறார். கண்காட்சியை ஒட்டி 'கண்ணுக்குள் வெளி' என்னும் ஓவியங்கள் அடங்கிய கைநூலும் வெளியிடப் பட்டிருக்கிறது.

'தமிழ் இனி 2000' நிகழ்வின் இரவு நிகழ்வாக கூத்துப் பட்டறையினரும் 'கருஞ்சுழி' ஆறுமுகமும் நாடகங்களை நிகழ்த்தி இருக்கிறார்கள்.

கவிதை மொழிவு, பாடல்கள் என்பன இடையிட்டு நிகழ்ந்த பெண்ணிய அமர்வுகள் எல்லோரது கவனத்தையும் ஈர்த்திருக்கின்றன. அ. மங்கை, அம்பை, பாமா, அவ்வை, வ. கீதா, மாலதி, சித்திர லேகா ஆகியோர் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

அமர்வுகளில் கட்டுரை வாசித்தவர்களைவிட நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் மண்டபத் துக்கு உள்ளேயும் வெளியேயும் நிகழ்ந்த விவாதங் களிலும் கலந்துரையாடல்களிலும் பங்கேற்றனர்.

"இவ்வளவு பெருந்தொகையான தமிழ் எழுத்தா ளர்களை ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் என் வாழ்நாளில் கண்டதேயில்லை" என்று உணர்ச்சி வசப்பட்ட நிலையில் தெரிவித்திருக்கிறார் டொமி னிக் ஜீவா. அரங்கின் இறுதிநாள் நிகழ்வின் பிற்பாடு திறந்தவெளியில் பல எழுத்தாளர்கள் 'களிக்கூத்து' ஆடி நிகழ்ச்சிகளை நிறைவு செய்திருக்கிறார்கள்.

●●●

'தமிழ் இனி'யின் தாக்கமும் பாதிப்புகளும் முற்றாக உணரப்பட இன்னும் சிறிது காலம் வேண்டும். எனினும், கலந்துகொண்ட ஏராளமான எழுத்தாளர்களுக்கு ஒரு புத்தூக்கத்தை ஏற்படுத்தி இருக்கிற போதிலும், நிறப்பிரிகை, நந்தன் போன்ற இதழ்களும் இந் நிகழ்வுக்கு எதிரான மாற்றுக் கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். விவாதங்கள் தொடர்கின்றன.

புதிய நூற்றாண்டின் தமிழ் அடையாளங்கள், தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, இவை அனைத் தினதும் பன்முகப்பாடு, தேசம் கடந்த தன்மை ஆகியவற்றை குவியப்படுத்துவதை ஒரு நிகழ்வா கவும், 'தமிழ் இனி 2000' அமைந்திருந்தது. இனி வரும் காலம் இதுவரை இருந்தது போல அல்ல. சிவத்தம்பி தன்னுடைய துவக்கவிழா சிறப்புரையில் தெளி வாகச் சுட்டிக் காட்டுவதுபோல, "புதிய நூற்றாண்டில் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் சவால்கள் பெரியவை. தமிழ் என்பதும் தமிழ் இலக்கியம் என்பதும் தமிழ் அடையாளங்களாகும். முன்பு இருந்தமாதிரி இருக்கமுடியாது. அப்படியானால் என்ன?" இதுதான் 'தமிழ் இனி 2000' முன்னுக்கு கொண்டு வந்திருக்கும் கேள்வியும் சவாலுமாகும். ☯

---

## இங்கேயும் மனிதர்கள்

### குரும்பசிட்டி ஐ.ஜெகதீஸ்வரன்



**கிடைக்குமிடங்கள்:**

- அறிவாலயம்
  7 Rue Perdonnet
  75010 Paris, FRANCE.
- ஐ. ஜெகதீஸ்வரன்
  48 Horseley Hill Drive
  Scarborough, Ont. M1B 1W5
  CANADA.

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் அவர்கள் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக பல சிறுகதைகளை எழுதியபோதும் அவர்களின் சிறுகதைகளில் 11 சிறுகதைகளை மட்டுமே தெரிவு செய்து தொகுக்கப்பட்டிருக்கிறது.

மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் செய்யப்பட்டிருக்கும் இத் தொகுப்பு 'குரும்பசிட்டி நலன்புரிச்சபை-கனடா'வினால் வெளியீடு செய்யப் பட்டிருக்கிறது.

தற்கால நவீன தமிழ்ச் சிறுகதைத் தளத்திற்கு நகர்த்திச் செல்லாத, மிகவும் இலகுநடையில் கதைகளை எழுதும் இவரின் பாத்திர வார்ப்புக் கள் செழுமையாக கையாளப்பட்டிருக்கிற அளவுக்கு பிரதியின் உயிரான தேடலைக் காணமுடியவில்லை. பிரதியினூடே அறிவைத் தரிசிக்க முனையும் எழுத்துப் பணி நழுவி முன்கூட்டியே முரண்பாடுகளையும் தீர்வுகளை யும் முடிவாக்கி கதையைத் தயார் செய்யும் தன்மை இவரின் கதைகளில் காணக் கிடைக் கிறது. ஈழம், சிங்கப்பூர், தமிழ்நாடு, பிரான்ஸ், கனடா என, தான் தரிசித்த வாழ்க்கைச் சூழல் களும் மற்றும் செய்திகளாக அறிய முடிந்தவை களும் இவரின் அனுபவத்தளத்துள் கதைகளாக பதிவாகியிருக்கின்றன.

எழுத்தின் பணி எதுவாக இருந்தாலும் தன்னள வில் வாழ்வின் பரிமாணங்களைப் பகிர்ந்து கொள் வதும், பதிவு செய்வதுமான இவரின் மானுட அக்கறை என்றும் மதிப்புக்குரியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிர்வினை



## 'உயிர்நிழலி'ல் ஓர் உயிரற்ற உருவம்

எஸ். வி. ராஜதுரை

'உயிர்நிழல்' மே-யூன் 2000 இதழில் 'இன்மை - உரையாடலும் கட்டவிழ்ப்பும்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள 'கேள்வி - பதிலி'ன் (அல்லது நேர் காணலின்?) எதிர்வினையாகச் சில கருத்துகள்:

'பெரியார் ஒரு புதிய வாசிப்பிற்கான ஒத்திகை' என்ற கட்டுரை இந்த 'நேர்காணலி'ல் குறிப்பிடப் படுவதாலும், அந்தக் கட்டுரையை ஜேர்மனியில் நடந்த 'இலக்கியச் சந்திப்பி'ல் வாசித்தவர் அசோக் என்ற தகவல் வ. அழகலிங்கத்தின் கட்டுரையில் காணக் கிடைப்பதாலும் 'துடைப்பானால்' "நேர் காணப்பட்ட"வர் அசோக்தான் என்பதை அறிந்து கொள்வதற்கு கடுகளவு சாமர்த்தியம் கூடத் தேவை யில்லை.

இந்த 'நேர்காணலி'ல் கேட்கப்படும் 'கேள்விகள்' முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு வைத்திருக்கும் 'பதில்களுக்கு' ஏற்றவாறு செளகரியமாக வரிசைப் படுத்தப்பட்டிருப்பதால் துடைப்பானும் அசோக்கும் ஒரே நபர்தான் என்ற எண்ணம் ஏற்படுகிறது. எனினும் இந்த ஊகிப்பு சரியா தவறா என்பதல்ல இங்கு முக்கியம்.

இந்த எதிர்வினைக்குச் சில காரணங்கள் உள்ளன. 'பெரியார் : சுயமரியாதை சமதர்மம்'என்ற நூலை வ. கீதா அவர்களின் இணையாசிரியனாக எழுதியவன் என்ற முறையில், அப்புத்தகம்பற்றி அசோக் எழுதியுள்ள சில சொற்களுக்குப் பதில ளிக்க வேண்டியது என் கடமை. அந்தப் புத்தகத்திற்கு எழுதிய தலைப்போ அல்லது அதனை எழுதியவர் களின் பெயரிலோ அசோக்கால் குறிப்பிடப்படும் பாக்கியம்கூட எங்களுக்கு கிடைக்கவில்லை.

"பெரியாரின் ஆரோக்கியமான சிந்தனைகளை உள்வாங்க நாம் நினைப்போமானால் சுயமரியாதை - சமதர்மக் காலகட்டம் தொடர்பான காலங்களை பரிசீலனைக்கும் ஆய்வுக்கும் உள்ளாக்குதல் அவசியம் என்பேன். சிறிது காலங்களுக்கு முன் இக் காலங்களை ஆய்வுக்குக் கொணர்ந்த நூல் ஒன்றைப் படித்தேன். அது ஜீவானந்தத்தையும் சிங்காரவேலரையும் குற்றம் சாட்டுதலின் ஊடாக பெரியாரின் அன்றைய சில போக்குகளுக்கு நியாயம் கற்பிக்க முயலுதலையும் இதனூடாக பெரியாரை ஒரு 'புனிதராக' உன்னதமயப்படுத்தும் முன்நோக் கலின் முடிவுகளின் ஆய்வோகவே என் வாசிப்புக்குத் தென்பட்டது. இதனால் இந்த நூலின் நம்பகத் தன்மை சிதறுண்டு விடுகிறது" என்று துடைப்பானின் 'கேள்வி' யொன்றுக்கான பதில் கூறுகிறார் அசோக்.

எங்கள் நூலைப்பற்றிய இத்தகைய குற்றச் சாட்டில் 'ஒரிஜினாலிட்டி' ஏதும் இல்லை. ஏனெனில், இத்தகைய மொட்டை விமர்சனம் சி. சிவசேக ரத்தால் இரண்டாண்டுகளுக்கு முன்பு 'காலச்சுவடி'ல் மேற்சொன்ன புத்தகத்திற்கு அவர் எழுதிய திறனாய் வில் முன்வைக்கப்பட்டது. அதற்கு நான் எழுதிய விரிவான மறுப்புரையும் அதே சஞ்சிகையில் பின்னர் பிரசுரிக்கப்பட்டது. அசோக்கும் அதைப் படித்திருக் கிறார். எனவே ஒரு நேர்மையான விவாதத்தில் அசோக்கிற்கு அக்கறை இருக்குமேயானால், சி. சிவசேகரத்தைக் கடந்து வந்து சிங்காரவேலர், ஜீவானந்தம் ஆகியோரின் நிலைப்பாடுகள் குறித்து எங்கள் நூலில் தரப்பட்ட விவரங்கள், விளக்கங்கள், ஆதாரங்கள் ஆகியவற்றை மறுதலிக்கக்கூடிய மாற்று விளக்கங்கள், விவரங்கள், ஆதாரங்கள் ஆகியவற்றைத் தந்திருக்க வேண்டும். வர்க்கப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துச் சென் றார்கள் என்பதற்கான ஆதாரங்களைத் தந்திருக்க வேண்டும். 1934-36இல் அவர்கள் எடுத்த நிலைப் பாட்டின் தொடர்ச்சியாகவே அவர்களது இந்தியப் பொதுவுடைமைக் கட்சி இந்தியாவில் ஆளும் வர்க்கக் கட்சிகளைத் தூக்கி நிறுத்துவதிலேயே தனது சக்தியை இன்றுவரை செலவிட்டு வருகிறது என்பதை மறுக்கவேண்டும். (எங்கள் நூலில் 'பக்கச் சார்பு' உள்ளது. அதை வெளிப்படையாகப் பலமுறை அறிவித்துள்ளோம். பெரியார்பற்றி இதுகாறும் சொல்லப்பட்டு வந்த விளக்கங்களின் ஒருதலைச் சார்பை மாற்றுவதற்காக பெரியார் பக்கம் உள்ள நியாயங்களைச் சொல்லவேண்டிய கடமை எங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுக்கு உண்டு. பெரியார் பற்றிய 'பக்கச் சார்பற்ற' மதிப்பீடு செய்ய யாருக்கும் உரிமையுண்டு. அதற் கான தரவுகளில் ஒன்றாக மட்டுமே எங்கள் நூல் பயன்படும் என்பதை அடக்கத்தோடு நாங்கள் கூறி இருக்கிறோம்) ஆனால் இவற்றுள் எதையும் செய்வ தில்லை அவர். வாதங்களே தேவையில்லாத முன் முடிவுகள் அவருக்கு மட்டுமே உரிய சிறப்புரிமைகள் போலும்!

ஒரு நல்ல, ஆரோக்கியமான, படிப்பறிவு சார்ந்த, விஷயங்களை முறையாகவும் ஒழுங்காகவும் கற்றல் சார்ந்த விவாதங்களை அவர் முன் வைப்பாரே யானால் நாங்களும் பயனடைவோம். பெரியாரைப் புனிதப்படுத்துவதோ அல்லது அவருக்கு சிலைகள் எழுப்பி சொந்த ஆதாயம் தேடுவதோ எங்களுக்குத் தேவையில்லை. எங்களுடைய ஈடு பாடுகளுக்கும் அர்ப்பணிப்புக ளுக்கும் அசோக்கிடமிருந்தோ வேறு யாரிடமிருந்தோ நற்சான்றி தழ் வாங்கத் தேவையில்லை. அப்படி ஒரு நற்சான்றிதழ் வழங்கத் தகுதி படைத்தவராக அவர் தன்னைக் கருதிக் கொள்வாரேயா னால் எங்களுக்குக் குறைந்த பட்சம் கீழ்க்கண்ட விஷயங்களையாவது அவர் தெளிவுபடுத்த வேண்டும்:

1. இலங்கையிலும் ஐரோப்பாவி லும் மார்க்சியத்திற்கு அவர் கோட் பாட்டு வகையில் இதுவரை வழங் கிய பங்களிப்புகள் என்ன? பிற சிந்த னைத் துறைகளில் அவரது பங்க ளிப்பு என்ன?

2. முன்பு இலங்கையிலும் இப்போது பிரான்சிலும் அவர் பங்கு பெற்ற, பங்கு பெறும் வர்க்கப் போராட் டத்தின் அனுபவங்கள் யாவை?

இந்த 'நேர்காணலி'ல் அசோக் ஒரு புறம், பெரியா ரையும் பெரியாரிசத்தையும் "புனிதப்படுத்தி அடிக் கடி தமிழ்நாட்டில் புதைத்துவிடுகிற" எங்களைப் போன்றவர்களிடமிருந்தும், மற்றோர்புறம், "தமது அடையாளத்திற்கான, சமூக இருத்தலுக்கான கவசமாக" பெரியாரைப் பயன்படுத்தும் "பின்நவீனத் துவ சந்தர்ப்பவாதிகள்/ போலிகள்" ஆகியோரிடம் இருந்தும் மீட்பதே தனது விமர்சனங்களின் நோக்கம் என்று பிரகடனப்படுத்துகிறார். மேலும் கருத்தியல் ரீதியாக, "மார்க்சியம் எவ்வாறு இச்சமூக சந்தர்ப்ப வாதிகளின் போலி வேஷங்களுக்கும் இருத்தலுக் கும் பயன் கொள்ளப்பட்டு இறுதியில் தூக்கியெறியப் பட்டதோ அதே நிலை பெரியாரியத்துக்கும் ஏற்படாமல் இருக்க முயல்வோம்" என்றும் அறிவிக் கிறார். அதாவது, இலங்கைத் தமிழரிடையே மார்க் சியத்தின் உலகக் காப்புரிமையாளர் நெ. 2 ஆகப் பரிணாமம் பெற்றுள்ள அசோக், பெரியாரிசத்திற்கும் தன் நேசக்கரத்தை, பாதுகாப்புக் கவசத்தை நீட்டு வதாகக் கூறுகிறார். ரொம்ப சந்தோஷம்! பெரியா ரைப் பற்றியும் பெரியாரிசத்தைப் பற்றியும் எழுதும் பணியில் இருந்து பிறர் விலகிக் கொள்கிறார்களோ இல்லையோ நானாவது ஒரு பதவி விலகல் கடிதத்தை அவருக்கு அனுப்பி விடலாமா என்றுகூட ஒரு கணம் யோசித்தேன்.



ஆனால், அப்படி உடனடியாகச் செய்ய முடிய வில்லை. அதற்குச் சில காரணங்கள் உள்ளன. முதலாவதாக "அந்தோனியோ கிராம்சி தேசியம் தொடர்பாகக் கொண்டிருக்கும் பார்வையின் கோணத்தை நான் பெரியாரிடமும் கண்டு வியப்புறும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டேன்" என்று யாரும் எதிர்பார்த்திருக்கவே முடியாத ஒரு பெரிய சந்தோஷமான அதிர்ச்சிக் குண்டைத் தூக்கிப் போடுகிறார் அசோக். ஏதோ எனது சிற்றறிவுக்கு எட்டிய அளவுக்கு பெரியாரை மட்டுமல்லாது கிராம்சியையும் படித்துப் புரிந்துகொள்ள முயன் றவன் நான். தேசியம் தொடர்பாக கிராம்சிக்கும் பெரியாருக்கும் இருந்த ஒத்த கருத்துக்களை அசோக் சற்று விளக் கமாக, ஆதாரங்களுடன் விளங்கப் படுத்தும்வரை, பதவி விலகல் கடிதத்தை என் சட்டைப் பைக்குள் ளேயே வைத்திருக்க விரும்புகிறேன்.

"வர்க்கத்தற்கொலை செய்ய முயன்று தோற்றுப் போனவர்" "சில காலங்களில் மிக மோசமான தமிழ் தேசிய வெறியனாக செயல்பட்டவர்" "முஸ்லிம் மக்கள் தொடர்பாக கொடுமையான பார்வை கொண்டி ருந்தவர்" என்றெல்லாம் பெரியார் குறித்து எழுதுகிறார். இதற்கெல்லாம் எந்த ஆதாரமும் தரவேண்டிய தேவை அவருக்கு இல்லை. வேத வாக்கி யங்களாக, தெய்வத்தின் அசரீரிக் குரலாக நாம் அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அசோக் என்ற உருவம், துடைப்பான் என்ற தனது நிழலிடம் "பெரியாரைப் பன்முக வாசிப்புக்கு உள்ளாக்கு" என்று அறிவுரை கூறி, அதன் பொருட்டு, 'பெரியார் களஞ்சியம் நான்காம் தொகுதி'யில் இருந்து ஒரு கட்டுரையின் பகுதி ஒன்றை எடுத்துப் போட்டு, சாதியம் பற்றிய பெரியாரின் 'பார்வைக் கோளாறை' நிரூபிக்க முயல்கிறது. தனது 'பன்முக வாசிப்பில்' இருந்து இப்படி ஒரு அர்த்தத்தைக் கறக்க முயல்வது, "பெரியாரைத் தோழனாக உள்வாங்கி அணுகுதல் அவசியம். எதிரித்தனமான விமர்சன ஆய்வாடல் நிராகரிக்கப்படவேண்டும்" என்று கூறுகிறாரே அந்தக் கூற்றுடன் எவ்வளவு குரூரமாக முரண்படுகிறது என்பதை அவரே உணர்வதில்லை. பெரியாரின் இடுப்புக் கச்சைக்குக் கீழ் குத்துவதுதான் "அவரைத் தோழனாக உள் வாங்கி அணுகுதல்" போலும்.

மார்க்சியத்தின் 'தூய்மை' 'பாதுகாப்பு' முதலி யன கருதி அவரால் மேற்கொள்ளப்படும், 'பன்முக வாசிப்பு' என்ற நடவடிக்கை ஒரு அரை வேக்காட்டுப் பின்நவீனத்துவ கட்டவிழ்ப்பு தான் என்பதைக்கூட அவர் உணரவில்லை. அதாவது ஒரு கருத்து சொல் லப்பட்ட சூழல், அக்கருத்தைச் சொல்கிறவரின் ஒட்டுமொத்தமான உலகக் கண்ணோட்டம், அவரது சொந்த வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்படும் சில முரண்பாடுகளால் பெரிதும் பாதிக்கப்படாத அவரது அடிப்படை இலட்சியங்கள் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தப்படாமல், ஒரு குறிப்பிட்ட பிரதியைத் தனியாகப் பிரித்தெடுத்து வாசிக்கும் அர்த்தப்படுத்திக்கொள்ளும் முறை. ஒரு உண்மையான பின்நவீனத்துவவாதி இப்படிச் செய்யமாட்டார். பிற பிரதிகளோடு தொடர்புபடுத்தித்தான் பார்ப்பார்.

அசோக் ஒரு முழுப் பிரதியைக்கூட அல்ல. அதிலுள்ள ஒரு பகுதியில் உள்ள சில வரிகளை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து அதை 'பன்முகவாசிப்பு' செய்யுமாறு தன் நிழலுக்கு அறிவுரை கூறுகிறார். அவர் மேற்கோள் காட்டும் பிரதியை மட்டுமே எடுத்துக் கொள்வோம். பெரியார் என்ன கூறுகிறார்:

1) ".... சாஸ்திரப்படி, சட்டப்படி இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் தவிர்த்து, கிறிஸ்துவர்கள் தவிர்த்து மீதியுள்ள 40 (நாற்பது) கோடிக்கு மேற்பட்ட நாம், இந்துக்கள் என்னும் பேரால் சூத்திரர் (ஈனப்பிறவி)களாக, பார்ப்பனரின் 'தாசி மக்கள்' என்பதாக அழைக்கப்பட்டு ஆக்கப்பட்டு வருகிறோம்."



பெரியார் இங்கு 'தீண்டத்தகாதவர் தவிர்த்து' என்று எழுதுவதில்லை. ஏனென்றால் தீண்டத்தகாதவர் உள்ளிட்ட அனைத்துப் பார்ப்பனரல்லாதாரும் இந்தியாவில் நடைமுறையில் உள்ள சாஸ்திரங்களின்படி மட்டுமல்ல, இந்துச் சட்டம் (The hindu law) என்பதன்படியும் சூத்திரர்கள்தாம். அசோக் தனது வாதத்திற்கு சௌகரியமாக "சூத்திரர்கள் எனப்படுபவர்கள் பிராமணர் அல்லாத மேல்நிலைச் சாதிகளான வெள்ளாளர்/ சைவப்பிள்ளைமார்/செட்டியார்/நாயுடு முதலியோர்" என்ற ஒரு விளக்கம் தருகிறார்.

இந்தியா முழுவதிலுமுள்ள சாதியமைப்பு ஒரு புறமிருக்கட்டும், தமிழ்நாட்டின் சாதியமைப்பைப்பற்றிய, வர்க்க அமைப்பு பற்றிய அடிப்படை அறிவுகூட இல்லாதவர்கள்தான் இதுபோன்ற ஒரு விளக்கத்தைக் கொடுக்கமுடியும். 'வெள்ளாளர்' என்று ஒரு தனியொரு சாதி இல்லை. துளுவ வேளாளர், கார்காத்த வேளாளர், கொங்கு வேளாளர், சோழிய வேளாளர், இசை வேளாளர், தேவேந்திரகுல வேளாளர் என டஜன் கணக்கான வேளாளர் சாதிகள் உள்ளன. இவற்றில் 'இசை வேளாளர்'என்ற சாதியினர் உழவுத் தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்கள்கூட அல்லர். இந்த வேளாளர் சாதிகளில்-ஒன்றிரண்டுதான் சட்டப்படி முன்னேறிய வகுப்பினராகவும், பிறர் பிற்பட்ட வகுப்பினராகவும் கருதப்படுகின்றனர். தேவேந்திரகுல வேளாளர் தலித் சாதியினர். அதே போலத்தான் செட்டியார்களும். பல்வேறு வகையான செட்டியார் சாதிகள் தமிழ் நாட்டில் உள்ளன. சிங்காரவேலரின் உத்தியோகப் பூர்வமான பெயர் சிங்காரவேலுச்செட்டி. அவர் மீனவ சமுதாயத்தில் பிறந்தவர். சென்னையைச் சுற்றியுள்ள சில மீனவ சாதியினர் தம்மைச் செட்டியார்கள் என அழைத்துக்கொள்கின்றனர். மீனவர்களிலும்கூட பல்வேறு சாதிகள் உள்ளன. பெரும்பாலான மீனவ சாதிகள் மிகவும் பிற்பட்ட வகுப்பினராகவும் ஒன்றிரண்டு மீனவ சாதிகள் தாழ்த்தப்பட்டோராகவும் சட்டப்படி வகைப்படுத்தப்பட்டுள்ளனர். கருமான், பொற்கொல்லர், நெசவாளர் என்ற தொழில் சார்ந்த பிரிவுகளிலும் பல சாதிகள் உள்ளன. நாடார், சாணார், கள்ளர், அகமுடையார், வன்னியர், முத்தரையர், வண்ணார், நாவிதர், பண்டாரம் முதலிய நூற்றுக்கணக்கான சாதியினரும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சூத்திரர்கள்தாம். இதிலும் தலித்துக்களைப் போலவே மிக வறிய நிலையில் உள்ளவர்களும் உண்டு.

எனினும் இந்துச் சட்டப்படி 'சூத்திரர்கள்' என்று கருதப்படுபவர்கள் தீண்டத்தக்க சூத்திரர்களாகவும் தீண்டத்தகாத சூத்திரர்களாகவும் பிரிந்து கிடக்கின்றனர். இரண்டாம் பிரிவினரைச் சேர்ந்தவர்களே தலித்துக்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தாழ்த்தப்பட்ட தீண்டப்படாத சாதியினர் தங்கள் சாதிப் பெயரைத் தங்களுக்கு வைத்துக் கொள்வதில்லை. பன்னூறாண்டுக் காலம் இழிசனர்களாகக் கருதப்பட்டு தங்கள் சாதியடையாளத்தையே ஒரு அவமானச் சின்னமாகக் கருதும்படி செய்யப்பட்ட அவர்களில் படிப்பறிவின் காரணமாகவோ அல்லது வேறு சில சமூக வாய்ப்புகளின் காரணமாகவோ நகர்ப் புறங்களில் குடியேறியவர்கள் பிள்ளை என்ற பட்டப் பெயரைச் சேர்த்துக் கொண்டதுண்டு. மற்றோர் புறம், எந்தச் சொல் இழிவுக்குக் குறிப்புச் சொல்லாக உள்ளதோ அதையே பெருமைக்குரிய சொல்லாக மாற்றும் கலக உணர்வுடன் ஒரு சிலர் தங்களது பெயர்களுக்குப் பின்னால் 'பறையன்' 'பறையனார்' என்பதைச் சேர்த்துக் கொள்ளும் போக்கும் உள்ளது. ஆயினும் 'தீண்டத்தக்க' சூத்திர சாதியினரைப் போல கவுண்டர், நாயக்கர், படையாச்சி, முதலியார் என்ற சாதிப் பட்டங்களை அவர்களில் மிகப் பெரும்பாலோர் சேர்த்துக் கொள்வதில்லை. தமிழ்நாட்டிலுள்ள முக்கிய தலித் சாதிகளில் ஒன்றான சக்கிலியர் (அருந்ததியர்) யாரும் தங்களை சின்னசாமி, அருந்ததியர் என்று அழைத்துக் கொள்வதில்லை. அதேபோலத்தான் பள்ளர் சாதியைச் சேர்ந்தவர்களும் எனினும் 'தலித்' என்ற அடையாளத்தை ஏற்றுக் கொள்வதில் வெட்கப்படுகிற, தாங்கள் பிற தலித் சாதியினரை விட மேலானவர்கள் என்று கருதுகிற, பள்ளர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(தேவேந்திரகுல வேளாளர்) சிலர் இப்போது தங்கள் பெயருக்குப் பின்னால் மள்ளர் என்று போட்டுக் கொள்கிறார்கள். ஆயினும் பொதுவாகவே மேற் சொன்ன காரணங்கள் போன்றவற்றால் தலித் சாதியினர் சாதிப் பட்டங்களைச் சுமப்பதில்லை.

ஆனால், தீண்டத்தகாத சூத்திரர்கள் தங்க ளுக்கே உரிய அரசியல் தலைவர்களை அமைப்பு களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதை மரியாதை யோடு அங்கீகரித்த பெரியார், தன்னைத் தீண்டத் தக்க சூத்திரர்களின் தலைவராகக் கருதித்தான் செயல்பட்டார். ஆனால் இதன் பொருள் தலித்து களின் பிரச்சனையில் அவர் அக்கறை கொண்ட வராக இருக்கவில்லை என்பதோ அல்லது அசோக் 'பன்முக வாசிப்பிலி'ருந்து கறக்க விரும்புவதுபோல தீண்டத்தகாதவரைவிட 'தீண்டத்தக்க' சூத்தி ரர்கள் மேலானவர்கள் என்று கருதினார் என்பதோ அல்ல. தாங்கள் ஏதோ தீண்டத்தகாதோருக்கு மேலான இடத்தில் இருப்பதாகக் கருதிக்கொண்டு, பார்ப்பனிய விழுமியங்களை அனுசரிப்பவர்களாக அவர்கள் இருப்பதை எள்ளி நகையாடி வந்தார்; அவர்களது சுயகௌரவத்தை இடைவிடாது தகர்த்துக்கொண்டிருந்தார்; தீண்டத்தகாதோரின் நிலையில் இருந்து எவ்வகையிலும் மேம்பட்ட இடத்தைப் பார்ப்பனியம் அவர்களுக்கு வழங்குவ தில்லை என்பதை இடித்துரைத்து வந்தார். 'நாம்' என்று தீண்டத்தக்க சூத்திரர்களையும் 'அவர்கள்' எனத் தீண்டத்தகாத சூத்திரர்களையும் அவர் பாகுபடுத்திக் காட்டியது ஒரு சாரார் மேலானவர் மற்றொரு சாரார் கீழானவர் என்று அவர் கருதிய தால் அல்ல. மாறாக, இருக்கும் சமூக நிலைமை களை அவர் புரிந்து கொண்டதாலேயே அவ்வாறு பாகுபடுத்திப் பேசினார்.

தீண்டத்தகாதார் தவிர்ந்த பார்ப்பனரல்லாதார், தீண்டத்தகாதார் (தலித்துக்கள்) ஆகியோர் குறித்த பெரியாரின் அடிப்படைப் பார்வை என்ன?

தீண்டத்தக்க சூத்திரர்களிடத்திலே அவர் ஒரு முறை கூறினார்:

நண்பர்களே! நாங்கள் ஆதித் திராவிடர்களைப் பற்றிப் பேசும்போது, பார்ப்பனர்கள் மனவருத்தம் அடைவதில் அர்த்தம் உண்டு. ஆனால், பார்ப்பனரல் லாதார் மனவருத்தம் அடைவதில் சிறிதும் அர்த்தம் இல்லை. அது வெறும் முட்டாள்தனமும் மானமற்ற தன்மையுமாகும். ஏனெனில் நமது சமூகத்தில் பார்ப்பனர் என்ற கூட்டத்தாராகிய 100க்கு 3 சதவீத முள்ள ஜனத்தொகை நீங்கி, மற்ற ஜனங்களுக்கு இந்த நாட்டில் சூத்திரன் (அடிமை), ஆதித் திரா விடன் என்கின்ற பட்டம் இல்லாமல் வேறு எந்தப் பட்டத்தோடாவது யாராவது இருக்க முடியுமா? இருக்கின்றார்களா? என்று கருதியும், அனுபவத் தைக் கொண்டு பாருங்கள். சூத்திரன் என்ற 'கலத்தில்' நீங்கள் பதியப்பட்டிருப்பதில் உங்க ளுக்குச் சிறிதாவது மானம் இருந்தால், பறையன் என்ற பட்டம் போவதில் கடுகளவாவது வருத்தம் இருக்குமா?

பறையன் பட்டம் போகாமல் உங்களுடைய சூத்திரப் பட்டம் போய்விடும் என்று கருதுகிறீர்களே யானால், நீங்கள் வடிகட்டின முட்டாள்களே யாவீர்கள்.

மற்றும் பேசப் போனால், பறையன், சக்கிலி என்பதற்கு இன்னார்தான் உரிமை என்றும் அது கீழ்சாதி என்பதற்கு இன்னது ஆதாரமென்று சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. கை பலமேயொழிய, தந்திரமேயொழிய வேறில்லை. உங்கள் சூத்திரப் பட்டத்திற்கு கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், புராணம் ஆகிய அநேக ஆதாரங்கள் உண்டு. இத்தனையையும் நாசமாக்கி அடியோடு ஒழிக்காமல் உங்கள் தலையில் இருக்கும் சூத்திரப்பட்டம் கீழே இறங்காது.

ஆகவே யாருக்காவது மான உணர்ச்சி இருந்திருந்தால் "நீங்கள் சாதியை ஒன்றாக்கு கிறீர்களே" என்று நம்மைக் கேட்டிருக்க மாட்டீர்கள்.

ஆகவே ஆதித் திராவிடர் நன்மையைக் கோரிப் பேசப்படும் பேச்சுக்களும் செய்யப்படும் முயற்சிகளும் ஆதித் திராவிடரல்லாத மக்களில் பார்ப்பனரல்லாத எல்லாருடைய நன்மைக்கும் என்பதாக உண ருங்கள். (பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் பக்: 59-60)

'மார்க்சியப் பார்வை' என்ற பெயரின் கீழ் 'போலிப் பின்நவீனத்துவப்பன்முக வாசிப்பைத்' தன் நிழலுக்கு உத்திரவிடும் அசோக்கிற்கு முன்னோ டிகள் இலங்கையில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும் இருந்திருக்கிறார்கள் - இருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக காலஞ் சென்ற முனைவர் கோ. கேசவன் 'சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும்'என்ற நூலில் பெரியாரின் மேற்சொன்ன உரையில் உள்ள கடைசிப் பந்தியை மட்டும் மேற்கோள் காட்டிவிட்டு எழுதியுள்ளார்:

"ஆதி திராவிடர் அல்லாத மக்களில் பார்ப்பன ரல்லாத எல்லோருடைய நன்மைக்குமே பேசுவதாகப் பெரியார் குறிப்பிடுகின்றார். பார்ப்பனரல்லாதவர்கள் எனில் பார்ப்பனர் தவிர்த்து தீண்டத்தகாதவர் உட்பட என்ற பொருளல்ல; பார்ப்பனர், தீண்டத் தகாதார் தவிர்த்த என்று பொருள். ஆக, பெரியார் குறிப்பிடும் சுயமரியாதை, அரசியல் மற்றும் பொருளா தாரத் துறைகளுக்கு இல்லாததோடு மட்டுமன்றி அவரது கலாச்சார சுயமரியாதை என்பது - பார்ப்பனர் - தீண்டத்தகாதார் அல்லாத மக்களை நோக்கிய தாகவேயுள்ளது. (கோ. கேசவனின் மேற் சொன்ன நூல் பக். : 154-155. அடிக்கோடுகள் அவருடையவை)

எனவே அசோக்கிடம் இங்கும் ஒரிஜினாலிட்டி இல்லை.

பெரியார் இயக்கம் குறித்து அவர் எழுதிய மூன்று நூல்களில் உள்ள இத்தகைய நேர்மையீனமான 'வாசிப்புகள்'பற்றிய எனது நீண்ட கட்டுரை 'கவிதா சரண்' செப்டம்பர் - அக்டோபர் 1996 இதழில் வெளிவந்துள்ளது. அதற்கு அவரால் ஒரு வரிகூட மறுப்புரை எழுத முடியவில்லை. எனது கட்டுரையில் பெரியாரின் மொழிக் கொள்கைகளை விமர்சித்தி ருந்தேன். ஆனால், 'பிரதி வாசிப்பு' முறையில் அல்ல. பெரியாரின் ஆங்கிலமொழி ஆதரவு என்பது எவ்வாறு பார்ப்பனரல்லாதார் நலன்கள் என்ற முறையில் தொடர்புபடுத்தப்பட்டது. அதற்கான சூழல் என்ன என்பவற்றை விளக்கிய பிறகே, எனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விமர்சனத்தையும் செய்திருந்தேன்.

பெரியார், மேற்சொன்ன உரையை தீண்டத்தக்க சூத்திரர்கள் அடங்கிய கூட்டத்தில் ஆற்றியதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு தாழ்த்தப்பட்டோர் மட்டுமே அடங்கிய ஒரு கூட்டத்தில் பேசியதாவது:

'பறையர்' என்கிற ஒரு சாதிப் பெயர் நம் நாட்டிலிருப்பதால்தான் 'சூத்திரர்' என்கிற ஒரு பெயர் நம் நாட்டிலிருக்கிறது. 'பறையர்' என்கிற சாதிப்பெயரைவிட 'சூத்திரர்' என்ற சாதிப்பெயர் இழிவானது. இந்து சாஸ்திரப்படி, பறைய ஸ்தீரிகளில் பதிவிரதைகளுக்கும் சரியான ஒரு தாய்க்கும் தகப்பனுக்கும் பிறந்தவர்களும் இருக்கலாம். 'சூத்திரர்'களில் அப்படி இருக்க இடமில்லை. ஏனென்றால் 'சூத்திரச்சி' என்றால், தாசி, வேசி மகள் என்பதுதான் பொருள். 'சூத்திரன்' என்றால் தாசி மகன், வேசி மகன் என்றுதான் பொருள். இதை ஒப்புக்கொள்ளாதவன் இந்து ஆகமாட்டான் என்பது சாஸ்திர சம்மதம். ஆகையால் என் போன்ற 'சூத்திரன்' என்று சொல்லப்படுபவன், 'பறையர்கள்' என்று சொல்லப்படுவோருக்கு உழைப்பதாகச் சொல்லுவதெல்லாம் 'சூத்திரர்கள்' என்று நம்மை யாரும் கருதக்கூடாது என்பதற்காகத்தானேயல்லாமல் வேறல்ல. ஆகையால் எனக்காக நான் பாடுபடுவது என்பது உங்கள் கண்ணுக்கு உங்களுக்காகப் பாடுபடுவதாய்த் தோன்றுகிறது. உங்களைத் தாழ்மையாகக் கருதும் பெண்களும், ஆண்களும் தாங்கள் பிறரால் உங்களைவிடக் கேவலமாய் தாழ்மையாய்க் கருதப்படுவதை அறிவதில்லை. அன்னியர்களைத் தாழ்ந்தவர்களாக நினைக்கும் அறியாமையால் தங்களை மற்றவர்கள் தாழ்மையாய் நினைப்பது தங்களுக்கு ஈனமாய்த் தோன்றுவதில்லை. (பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் முதல்தொகுதி பக்.: 80)



கிராம்சிக்கும் பெரியாருக்கும் இடையே உள்ள ஒத்த கருத்துக்களைக் 'கண்டு பிடித்துள்ள' மாரக்சியர்கள் பெரியாரின் மேற்சொன்ன கருத்து "மனித குலம் முழுவதையும் நிபந்தனையின்றி விடுவிக்கப் பாடுபடாமல் பாட்டாளி வர்க்கம் தன்னைத் தானே விடுதலை செய்து கொள்ள முடியாது" என கார்ல் மார்க்ஸ் கூறியதை ஒத்ததாக உள்ளது என்பதை ஏற்றுக் கொள்வார்களோ என்னவோ.

'பெரியார் களஞ்சியம் நான்காம் தொகுதி'யில் இருந்து அசோக் மேற்கோள் காட்டுவன 'உண்மை' 14.10.1973 ஆம் திகதியிட்ட இதழில் பெரியார் எழுதிய தலையங்கத்தின் சில பகுதிகள் மட்டுமே. அதிலும்கூட ஒரு சில வரிகளை மட்டுமே பிய்த்தெடுத்து 'பன்முக வாசிப்பு' செய்யும்படி தன் நிழலுக்கு உத்தரவிடுகிறார். அதே தலையங்கத்தில் உள்ள வேறு சில பகுதிகளை இங்கு காணலாம்:

இந்து மதத்திற்கு என்ன கொள்கை என்று இன்றுவரை யாராலும் சொல்லப்படவே இல்லை. இந்துமதக் கொள்கை என்பதெல்லாம் பார்ப்பான்-பிராமணன் மேல் ஜாதி, மற்றவர்கள்- சூத்திரன் கீழ்ஜாதி என்பதல்லாமல் , இந்துக்களுக்குப் பொதுவான கொள்கை என்பது ஒன்றுமே இல்லையே. சட்டத்திலும் இதுதானே இருக்கிறது. இந்து என்றால் பார்ப்பனர் - பிராமணர் மற்ற எல்லோரும் பகுத்தறிவுவாதி, நாத்திகர்கள், பவுத்தர்கள், சமணர்கள் முதலிய யாவரும் இந்துக்களேயாவார்கள். இந்துக்களில் பார்ப்பனர் தவிர்த்து, மற்ற யாவருமே சூத்திரர் என்றால், கீழ் ஜாதி, பார்ப்பானின் தாசி மகன் என்பது சட்டத்தின்படி பொருளாக்கப் பட்டிருக்கிறது.

இங்கு பெரியார், சூத்திரர்களில் உள்ள 'தீண்டத்தக்கவர்களை மட்டுமே தன் விமர்சனத்திற்கான குறியிலக்காகக் கொள்வதற்கான காரணங்களை மேலே குறிப்பிட்டுள்ளோம். தங்களை மேன்மையானவர்களாகக் கருதிக் கொண்டு பார்ப்பனிய சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பவர்கள் தீண்டத்தகாதோருக்குரிய இடத்தில்தான் (சாஸ்திரப்படியும் சட்டப்படியும்) இருக்கிறார்கள் என்பதையும் அந்த இழிவு நிலையில் இருந்து விடுபடவேண்டும் என்பதையும்தான் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்தார்.

அசோக் மேற்கோள் காட்டிய தலையங்கம், பெரியாரால் 14.10.73 அன்று எழுதப்பட்டது. ஏறத்தாழ ஒரு மாதத்திற்குப் பின் மதுரையில் நடந்த பொதுக்கூட்டமொன்றில், தென் மாவட்டங்களில் தலித்துக்களை ஒடுக்கிவரும் கள்ளர் சாதியினரை விமர்சிப்பதற்காகவும், அவர்களும் இழிநிலையில் உள்ள சூத்திரர்கள்தான் என்று இடித்துரைப்பதற்காகவும் எட்கார் தர்ஸ்டன் என்ற மேனாட்டு மானுடவியலாளரின் 'தென்னிந்திய சாதிகள்' என்ற நூலிலிருந்து சில பகுதிகளைப் படித்துக் காட்டும்படி செய்தார். கள்ளர்களின் பிறப்பு மூலத்தைப்பற்றிய பார்ப்பனப்-புராணங்கள் தான் அவை. இப்படி அப்பகுதிகள் பழக்கப்பட்டதாலேயே, அங்கிருந்த கள்ளர்கள் சிலர் ஆத்திரமடைந்து கல்வீச்சில் இறங்கினர். பெரியார் தன் வாழ்நாளில், அதுவும் தன் இறப்புக்கு ஒரு மாதத்திற்கு முன்பு, சந்தித்த கடைசிக் கல்லடிச் சம்பவம் அது. (விடுதலை 20.11.73) 1959இல் நடந்த முதுகுளத்தூர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலவரத்தில் தலித்துகள் மீதான தாக்குதல்களுக்கு உந்துவிசையாக இருந்த முத்துராமலிங்கத் தேவரை எதிர்த்து பட்டி தொட்டிகளிலெல்லாம் முழங்கியவர் பெரியார் ஒருவர் மட்டும்தான். சிங்காரவேலர், ஜீவா வழிவந்த கம்யூனிஸ்டுகள் முத்துராமலிங்கத்தேவர் கைது செய்யப்பட்டதற் காகக் கண்ணீர் வடித்தார்கள்.

தான் இறப்பதற்கு 5 நாட்களுக்கு முன் அவர் ஆற்றிய இறுதிப் பேருரையில் கூறினார்:

இந்தியாவிலே உள்ள 56 கோடி மக்களிலே, தமிழ்நாட்டிலே உள்ள நாலரைக் கோடி மக்களில் ஏறக்குறைய மூன்று கோடி மக்கள் சூத்திரர்கள் தானே - முஸ்லிம், கிறிஸ்துவன் தவிர - அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்தால் இன்று ஒரு 50 இலட்சம் கூட இருக்காதே.... மற்றவன் எல்லாம் சூத்திரன். பார்ப்பான் 3 இலட்சம்தான் இருப்பான். அவ்வளவு பெரிய நம் சமுதாயம் இந்தமாதிரி இருக்கிறதே என்று சிந்திக்க முடியவில்லை. ஆகவே இதை மாற்றியாகணும்.... அரசியல் சட்டம் அரசாங்கம் நடத்துகிறதிற்கு வேணும்; ஓர் அரசாங்கம் நடக்க வேணும் என்றால் ஒரு சட்டம் இருக்கணும், ஒத்துக் கொள்கிறேன் - அரசாங்கம் நடத்துகிறதற்கு சூத்திரன் இருக்கவேணுமோ? அரசாங்கம் நடத்துகி றதற்கு பார்ப்பான் இருக்கணுமோ.... மனுஷன்தானே இருக்கணும்? அமெரிக்காவிலேயும் அரசாங்கம் நடக்கிறது. அங்கே மனுஷன் தவிர வேறு எவன் இருக்கிறான்? அரசாங்கம் நடத்துகிறதற்குப் பார்ப்பான் இருக்கிறானா? சூத்திரன் இருக்கிறானா? பறையன் இருக்கிறானா? யார் இருக்கிறான் அங்கே? (பெரியார் ஈ.வெ. ரா. சிந்தனைகள், மூன்றாம் தொகுதி பக்.: 2069)

பெரியார் தீண்டத்தகாத மக்களைத் தவிர்த்த மேல்சாதி சூத்திரர்களின் விடுதலைமீதுதான் அக்கறை கொண்டிருந்தார் என்பதையா இது காட்டுகிறது?

எனினும் அசோக் இங்கும் ஒரு 'போலிப் பின்நவீனத்துவ பன்முக வாசிப்பில்' இறங்கக்கூடும். அமெரிக்காவில் உள்ள வர்க்க ஏற்றத்தாழ்வு, நிறப் பாகுபாடு ஆகியவற்றைப் பார்க்காத, அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடிதான் பெரியார் என்றும் ஒரு அர்த்தத்தைப் பிழிந்தெடுக்கக்கூடும்!

"முஸ்லிம் மக்கள் தொடர்பாக பெரியாரின் பார்வை கொடுமை என்பேன்" என்கிறார் அசோக். இதற்கு ஆதாரமாக, தமிழ் நாட்டிலுள்ள முஸ்லிம் களைப்பற்றி பெரியார் ஒரு சமயம் எழுதிய கட்டுரை யொன்றை 'பெரியார் களஞ்சியம்' கட்டுரையைப் போலவே, சூழலிலிருந்து பியத்தெடுத்துப் போட்டு நிருபிப்பது அவ்வளவு கடினமானதல்ல. தமிழ் நாட்டிலும்கூட தனிநபர்கள் சிலர் தமக்கிடையே உள்ள பகைமைகளின் காரணமாகவோ, அல்லது ஒருவர் மற்றவரைவிடப் புத்திசாலி எனக் காட்டிக் கொள்வதற்காகவோ, அல்லது தமது விருப்பு வெறுப்புகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவோ பெரியாரை தமிழ்நாட்டிலும்கூட ஒரு உதைபந் தாக்கியுள்ளனர். பெரியார் இவ்வாறு முஸ்லிம் விரோதியாக மட்டுமின்றி, தலித் எதிரியாக, ஏன் தமிழின விரோதியாகவும்கூட சித்தரிக்கப்பட் டுள்ளார்!

அசோக் பயன்படுத்துகிற 'பெரியார் களஞ்சியம்' நான்காம் தொகுதியில் இஸ்லாத்தையும், முஸ்லிம் களையும் பாராட்டிப் புகழும் கட்டுரைகளும் உள் ளன! தனது இறுதிச் சொற்பொழிவில் (19.12.1973) அவர் கூறினார்:

உலகத்திலே தமிழர் இருக்கிறதைப்போல எத்தனையோ பங்கு முஸ்லீம் இருக்கிறான். அவர்களுக்குள்ளே தேவடியாள் மகனே கிடையாது. ஈனசாதியே கிடையாது. எல்லாரும் சகோதரர்கள். ஒருவனுக்கொருவன் தொட்டுக்கொள்வான். ஒருவன் சாப்பிட்டதை இன்னொருவன் சாப்பிடுவான். ஒருவன் இலையிலே இன்னொருவன் சாப்பிடுவான் - எச்சில்கூடப் பார்க்கமாட்டான். அதாவது என்ன? அவ்வளவு சகோதரத்துவம் அந்த மதத்தின் தன்மை! (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், மூன்றாம் தொகுதி பக்: 2064)

அசோக்கின் 'பன்முக வாசிப்பு' உத்தியைப் பின்பற்றினால் (பிரதிகளைத் துண்டு போட்டோ, அல்லது சம்பந்தப்பட்டவர்களின் ஒட்டுமொத்தமான உலகப் பார்வையில் இருந்தும் எழுத்துக்களி லிருந்தும் பிரித்தெடுத்தோ, அல்லது அவர்கள் தமது காலத்திய முற்சாய்வுகள் (Prejudices) சிலவற்றைப் பகிர்ந்து கொண்டிருந்ததைச் சாக்கிட்டோ, அல்லது அவர்கள் ஒரு வாதத்திற்காக கையாண்ட சில வார்த்தைப் பிரயோகங்களின் அடிப்படையிலோ) சிங்காரவேலரை 'தலித் விரோதி'யாக, அம்பேத் கரை 'முஸ்லிம் விரோதி'யாக, மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரை 'ஐரோப்பிய இனவாதி'களாக காட்டமுடியும்.




**வெளிக்குள் வெளி**
(கவிதைத்தொகுப்பு)
கல்லூரன்

ஈழத்தின் மிகச் சிறந்த கவிஞர்களுள் ஒருவராக முகம்காட்டும் கல்லூரனின் கவிதைகள் நம் போர்க்கால சமூகத்தின் கோர முகத்தினை எழுதிச் செல்கிறது. தொடர்ந்து வாசிக்க முடியாதபடி ஒவ்வொரு கவிதையும் குரலவளையை நெரித்து நீள் மௌனத்தை வேண்டுகின்றன. நோய்க்கூறான சமூகத்தின், சகலதினதும் சாவை எதிர்கொள்ளும் மக்களின் மனங்களில் துளி நம்பிக்கைகளையாவது நீவிச் செல்கிறது.

வெளியீடு:
VIEW-HUM
27/A Singar shop
Batticaloa Road
Kalmunai
Sri Lanka.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பாரிஸ் மாநகரில்

# அறிவாலயம் புத்தகசாலை
# PARIS ARIVALAYAM

- இலங்கை இந்திய தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள்
- புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள்
- இலங்கை பூபாலசிங்கம் புத்தகசாலை, சென்னை– தாமரைச்செல்வி, கோவை – விடியல், சென்னை – காந்தளகம், பெங்களூர் – காவ்யா போன்ற பதிப்பகங்களின் தரமான வெளியீடுகள்
- செங்கை ஆழியான், டானியல், டொமினிக் ஜீவா, அந்தனி ஜீவா, செ. கணேசலிங்கன், சாரல் நாடன், பெனடிக்ற் பாலன், தெளிவத்தை யோசப், ஜெயகாந்தன், கி. ராஜநாராயணன், ஜெயமோகன், கண்மணி குணசேகரன் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகள்
- கைலாசபதி, சிவத்தம்பி, எம். ஏ. நுஹ்மான், சண்முகதாஸ் போன்றவர்களின் இலக்கிய ஆய்வுநூல்கள்
- பெண்ணியம், தலித்தியம், மார்க்சியம், பின்நவீனத்துவம், பெரியாரியம் தொடர்பான வெளியீடுகள்
- நவீன சினிமா தொடர்பான ஆய்வுகள்
- இலங்கை, இந்திய சஞ்சிகைகள்/பத்திரிகைகள்
- மேலும் உங்கள் வாசிப்பிற்கான அனைத்து வெளியீடுகள்

அத்துடன்

- பாடசாலை–அலுவலக தேவைக்கான உபகரணங்கள்

**அனைத்தும் தபால்மூலமும் அனுப்பி வைக்கப்படும்**

PARIS ARIVALAAYAM
7 RUE PERDONNET
75010 PARIS
FRANCE.

TEL: 01 44 72 03 34
FAX: 01 44 72 03 35

M°: La Chapelle/ Gare du Nord

e-mail: arivaalaya@aol.com

www.tamilarangam.net



L'OR DE L'INDE

15 Rue Cail 75010 PARIS

Tél : 01 42 05 63 89

M° : La Chapelle ou Gare du Nord

EXIL, 27 Rue Jean Moulin, 92400 Courbevoie, France e-mail: EXILFR@aol.com N° d'enreg. 13023204

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்